வல்வை ந.நகுலசிகாமணி

# நினைவில் நிறைந்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13964 CC

# நினைவில் நிறைந்தவை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வல்வை ந.நகுலசிகாமணி

288453

288453 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
954.93

# நினைவில் நிறைந்தவை

ந.நகுலசிகாமணி

முதற் பதிப்பு : வைகாசி 2018
வெளியீடு: வல்வை வரலாற்று ஆவணகம்
பதிப்புரிமை : உமா நகுலன்
அட்டைப்பட வடிவமைப்பு : க.பரணீதரன்
பக்க வடிவமைப்பு : க.பரணீதரன்
அச்சுப்பதிப்பு : பரணீ அச்சகம், நெல்லியடி
பக்கம்: 180
விலை : 500/-

Ninaivil niranthavai
N.Nagulasigamany

First Edition : May 2018
Published by: Valvai
Copy Rights : Uma Nagulan
Cover Designed by : K.Bharaneetharan
Page setup : K.Bharaneetharan
Printed by : Baranee printers, Nelliady
Pages: 180
Price : 500/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் எனது அன்பு உமாவுக்கு

1981 ஜுலை 13 திருமணம் புரிந்து, 7 மாதத்தில் கார்த்திகேயனை பெற்று(போராட்ட காலத்தில்) எம்மை விட்டு அவர் பிரிந்து விட, 1984, 1986இல் சந்துரு, சௌமியன் பிறந்து 2005 கனடாவில் அவர்கள் எம்மை விட்டு பிரிந்து விடவும், தனது இதய வால்வு மாற்று சிகிச்சையுடனும், பாரிய வாகன விபத்தில் சிக்கி முள்ளந்தண்டு சிறிய தாக்கத்துடனும், நண்பன் கனக மனோகரன் கூறுவது போல இருப்பு பெண்மணியாக வாழ்ந்து, என்னுடன் வாழ்ந்து தனது மென் விரல்களால் காப்பக வெளியீடுகளான நூல்களை எல்லாம் தட்டச்சில் ஏற்றி, எமது பொருளாதார வலுக்களை எல்லாம் ஆவணகாப்பகத்திற்கு உதவும் அன்பு மனைவி உமாவுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. நகுலசிகாமணி
பொதிகை
ஆவண காப்பகம்
*23.03.2018*

எனது சிறிய உரை

அன்பான உறவுகளுக்கு

எமது ஆவணகாப்பகம் வல்லையில் ஆரம்பித்து 6 ஆவது ஆண்டு நிகழ்வு நடைபெறுவதையிட்டு மகிழ்வு அடைகின்றோம். அதையொட்டி நான் பிறந்த மண்ணில் முதலாவது தடவையாக எனது இருநூல்கள் அறிமுகமாக உள்ளது.

1. இலங்கை தமிழரின் வரலாற்று சுவடுகள்
   (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
   - ந. நகுலசிகாமணி & உமா
2. நினைவில் நிறைந்தவை - ந. நகுலசிகாமணி

இந்நூல் நான் பிறந்து தவழ்ந்து இளைஞனாக வாழ்ந்து தற்போது 70 வயது முதியவனாக வாழும் எனது சரிதவியலோடு இளைத்த நூலாகும். இது எனது வாழ்க்கைச் சுவடுகள் என்று கூட கூறலாம். இதை பலர் பலவாறாக விமர்சிப்பார்கள். அதுவே எனக்கு திருப்தி அளிக்கும்.

நன்றி

*416 4387650(கனடா)*
Nagulasigamany@gmail.com

அன்புடன்
ந. நகுலசிகாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிறைந்தவை

## எனது ஊர்

இலங்கைத்தீவின் வடபகுதியான யாழ்மாவட்டத்தில் வட மராட்சியில் நெய்தல் நிலத்தில் உள்ள வல்வெட்டித்துறை என்பதே எனது ஊராகும். நீர்வேலியைச்சேர்ந்த தமிழ் சமஸ் கிருதப் புலவரும் பாவலருமான இமான் எஸ். சிவப்பிரகாச பண்டிதர் 1892ம் ஆண்டு எழுதிய கலிவெண்பாவில் வல்வை மக்களின் சைவசமயப்பற்றுச் சிறப்புப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

"செந்தமிழின் மங்கை சிறந்துகுடி கொண்டுமகிழ்
வந்த வியாழ்ப்பாணம் வடபுடையுள் – முந்துசிவ
புண்ணியமே யாசாரம் பூண்டு வழிவழியே
நண்ணுகின்ற வல்வை நகர்!"


வல்லிபட்டி என்னும் பிரபல கால்நடைவியாபாரி பட்டி வைத்திருந்த இடமாகையால் 'வல்லிபட்டி' என அழைக்கப் பட்டு துறை முகம் ஏற்பட்டபின் வல்லிபட்டினத்துறை என வழங்கிவந்து, பின் வல்லிவெட்டித்துறை எனத்திரிந்து, தற்காலம் 'வல்வெட்டித்துறை' என்றபெயர் வழங்கிவருகிறது. சென்னைப் பட்டினம் சென்னை எனச் சுருக்கி அழைப்பதுபோல் பந்நெடுங்காலமாக வல்வை என்று (nick name) அழைப்பதுண்டு.

எமது வல்வை கிழக்கே ஊறணியிலிருந்து மேற்கே ஊரிக் காடு வரையும் தெற்கே வல்வெட்டி, கம்பர்மலை கிராமங்களும் அடங்கப்பட்ட 250 ஏக்கர் விஸ்தீரணமுள்ள சிறிய பட்டின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். இதுதான் ஆதி வல்வெட்டித்துறை. ஆனால் இன்று பழமைவாய்ந்த கந்தவனக்கடவைமுருகன் தொடக்கம் செல்வச் சந்நிதி ஈறாகவும் மூன்றரைமைல் நீளமாகவும் அரைமைல் அகலமாகவும் உள்ள நகர சபையாக திகழ்கின்றது.

எமது வல்வெட்டித்துறை வடக்கே 16மைல் (30கி.மீ) தூரத்தில் காங்கேசன்துறையும், பருத்தித்துறை 5 மைல் தூரத்திலும், தென்இந்தியாவிலிருந்து தெற்கே கடல்மார்க்கமாக 30 மைல் தொலைவில் உள்ளது. இதன் விஸ்தீரணம் 7.68சதுர. கிலோ.மீற்றராகவும் ஒன்றேமுக்கால் சதுரமைல்களாகவும் அடங்கியுள்ளது. 1948ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி 5035 இந்துசமயத்தவர்களும், 85 கிறிஸ்த்தவர் களும் வாழ்ந்து வந்தனர்.



58ம் ஆண்டுவரை இருந்த முத்துமாரி அம்மன் கோயிலின் தோற்றம்

ஒவ்வொரு நகரமும் தமக்கென்று பாரம்பரியம், அரசியல், பண்பாடுகளைக் கொண்ட வரலாற்றுக்கதைகளை தாங்கியிருக்கிறது. அதற்கு வல்வையும் விதிவிலக்கல்ல. ஆனால்! இன்று பலருக்கும் பலராலும் பரிச்சயப்பட்ட இடமாகும். ஒளவைப்பிராட்டி "கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்றார். வல்வைமக்கள் வீதிக்கு ஒரு கோயில் குறிச்சிக்கு ஒருகோயில் என அமைத்து வாழ்கின் றனர். வல்வை வைத்தீஸ்வரர் கோயில், முத்துமாரி அம்மன் ஆலயம், திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயில், செல்வச்சந்நதி கோயில், பொலிகண்டி கந்தவன கடவை முருகன் கோயில் உட்பட முப்பது சிறிய ஆலயங்களும் ஒரு கத்தோலிக்க மதத்தினருக்குரிய ஆலயமும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தவீரர்கள் குடியேறிய ஊர்

ஆதியில் வல்வெட்டித்துறையில் குடியேறியவர்கள் இந்தியாவிலிருந்து ஊர்காவலுக்காக வரவழைக்கப்பட்ட போர் வீரர்களே. இவ் வீரர்கள் கடற்படை தரைப்படை இரண்டிலும் சேர்ந்திருந்தவர்கள். இராமநாதபுரம் பாஸ்கரசேதுபதி மீதும் பாண்டித்துரைத் தேவர்மீதும் பிரபந்தங்கள் பாடிப் பரிசில்கள் பெற்ற 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த உடுப்பிட்டி சிவசம்புப் புலவரவர்கள் "வல்வைக் கலித்துறை" என்னும் பெயருடன் பாடிய செய்யுட்களில் ஒன்றில் இவ்வூரவர் களை "ஊர்காவலர்" என்று குறிப்பிட்டது ஊன்றிக் கவனிக்கத்தக்க தொன் றாகும். அச்செய்யுள் வருமாறு :-

"கார்க்காமர் கண்டத்து நம்
வயித்யேசர் கருணையினாற்
றீக்காயுளு மிட்டி சித்தியு
மெய்திச் செறிந்தகுள
நீர்க்காலெலா முத்தச் சங்கின
மூரந்து நிறைந்த வல்வை
யூர்க்காவலர் வைகிலெங்களுக்கே
பெரிதூதியமே"

என்பதாம். தஞ்சாவூர்நாயக்கன் யாழ்ப்பாணத்தைச் ஜெயிப்பதற் காக ஒரு சேனை கொண்டுவந்து வல்வெட்டித்துறைக் கரையி லிறக்கிக் குளத்துக்கருகே ஓர் பனந்தோப்பில் பாளைய மிட்டிருப்பதென அறிந்து, 'பறங்கியர் தலைவனாகிய' தெமொற்றோ என்பவன் இரகசி யமாய்ச் சென்று மூன் றாம் சாமத்தில் திடீரென்று தாக்கி தமிழரை வெருட்டியடித்து வெற்றி கொண்டான்; என்ற செய்தி 1918ம் ஆண்டு திரு.கல்லடி வேலுப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' சரித்திரப் புத்தகத்தில 65, 67ம் பக்கங்களில் காணப்படுகின்றதும் ஈண்டு நோக்கற்பாலதாம்.

இவ்வூருக்குப் பக்கத்திலுள்ள இடங்கள் சமரபாகு தேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிச்சி, வென்றிபாகுதேவன் குறிச்சி, கல்லிடைத் தேவன்குறிச்சி, முதலிய பெயர்களால் அழைக்கப்படுவதும் அப்பகுதிகளில் யுத்த வீரர்கள் இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பதை வலியுறுத்துகின்றது. பின்பு அவர்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டனர்.

மேலும் 272ம் பக்கத்தில் வே.பிரபாகரன் அவர்களின் மூதாதையர் பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணிக் குடும்பங் களில் ஒன்றாக விபரிக்கப்பட்டு அவர்களின் அக்காலச்சேவைகள் பற்றி குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் திரு.ச.வயித்தியலிங்கபிள்ளை(1843-1901) அவர் கள் தமிழுக்கும் சமயத்திற்கும் ஆற்றியபணிகள்பற்றி விபரிக்கப் பட்டுள்ளன. (18ம் ஆண்டு வெளிவந்த இந்தநூலை 2001ம் ஆண்டு ஆவணக்காப்பகம் 2ம் பதிப்பாக வெளியீடு செய்தது).

பணக்காரராயிருந்தவர்கள் திரை கடலோடியும் திரவியம் தேடு' என்னும் ஔவையார் அருள்வாக்கின்படி கப்பல்கள் கட்டு வித்துக் கப்பல்களில் சென்று வியாபாரஞ் செய்து பொருளீட்டத் தொடங்கினர். கடற்படையிலிருந்த வர்கள் கப்பலோட்டும் தொழிலும் கப்பல் கட்டும் தொழிலிலும் ஈடுபட்டனர். தரைப்படையிலிருந்தோர் வேளாண்மை, வியாபராம் முதலிய தொழில்களை மேற்கொண்டனர். ஓர் வீட்டைக் கட்டுவதற்கு 'மனையடி சாத்திரம்' என்னும் சிற்ப நூலைக்கற்ற சிற்பி தேவைப்படுவதுபோல ஓர் கப்பலைக் கட்டுவ தற்கும் 'நாவாய் சாத்திரம்' எனும் கப்பல் கட்டும் சாத்திரத்தைக் கற்ற மேத்திரி தேவையல்லவா?

இவ் வல்வெட்டித்துறையிலே நாவாய் சாத்திரங் கற்றுக் கப்பல்கட்டுவதில் வல்லவராகிய மேத்திரிமார் பலர் இருந்தனர். இப்பொழுதும் இருக்கின்றனர். பெரிய பாய்க்கப்பல்களைக் கட்டுவதில் வல்ல மேத்திரிமார் இலங்கையில் இவ்வூரிலன்றி வேறெங்கும் காண்பதரிது. திசை காட்டுங்கருவி, மணிகாட்டுங் கருவி கண்டு பிடிப்பதற்கு முன்பே விண்மீன்களின் உதவியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையையும் இரவில் நேரத்தையும் கணித்து கப்பல்களை பல தூர தேசங்கட்கு செலுத்தி பெயர் பெற்றமாலுமிகள் பலர் இருந்தனர். இந்தியாவிலுள்ள கப்பல் வர்த்தகர்கள் இவ்வூரி லுள்ள மேத்திரிமாரை அழைத்துக் கப்பல்கள் கட்டுவித்துப் பெரும் சீர்வரிசைகள் வழங்கியுள்ளார்கள். இவ்விதக் கௌரவம் பெற்றவருள் கீரிமலையில் ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலும், தெரு வோரத்தில் மடாலயம் கட்டுவித்த வடிவேலு மேத்திரியார் என்பவர். இன்னொருவர் ஆங்கிலத்தில் அட்சரமும் தெரியாதவ ராயிருந்தும், எல்லாக்கிரகங்களினதும் கதிவக்கிரம் முதலிய வற்றைக் காட்டவல்ல அதிநூதனக் கடிகாரத்தைச் செய்து காட்டியவரும் தோட்டங்களுக்கு யந்திரம்மூலம் நீர் பாய்ச்சுவ தற்குரிய யந்திரத்தை முதன்முதல் கண்டுபிடித்து மக்களுக்கு செய்து உதவிய வருமாகிய வா.ஆறுமுகம் என்பவராகும்.

## வல்வைக்கப்பலின் அமெரிக்கப்பயணம்

அன்னபூரணியம்மாள் என்ற பாய்க்கப்பலை 1930ம் ஆண்டு சுந்தர மேத்திரியவர்களால் கட்டப்பட்டது. அக்கப்பல் இலங்கை, இந்தியா, பர்மா போன்ற தென்கிழக் காசியநாடு களுக்குப் பயணங் களை மேற்கொண்டு வந்தது. வில்லியம். அல்பேட்.றொபின்ஸன் என்ற அமெரிக்கர் அன்ன பூரணியம் மாளை விலைக்கு வாங்கினார். பின் றொபின்சன், க.தம்பிப் பிள்ளை தண்டையல் தலைமையில் தா.சபாரத்தினம், பூ.சுப்பிர மணியம், ஐ.இரத்தினசாமி, சி.சிதம்பரப் பிள்ளை ஆகிய வல்வைக்கடலோடிகளின் உதவியுடன் அமெரிக்கா விற்கு கொண்டு சென்றார். 1938 ஆகஸ்ட் 2ம் திகதி வெளியாகிய அமெரிக்கத் தினசரியான "Boston Daily" என்ற பத்திரிகையில் முன் பக்கச் செய்தியாக வல்வெட்டித்துறை பற்றியகதையை அதன் நிருபர் திரு.நாட் A.Babrows என்பவர் எழுதியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


The Boston Daily Globe

BOSTON, TUESDAY MORNING, AUGUST 2, 1938 TWENTY PAGES (2) TWO CENTS

VOYAGE ENDED BY BRIGANTINE

Rare Spectacle Provided by Arrival From Ceylon

வல்வெட்டித்துறையிலிருந்து புறப்பட்ட அன்னபூரணிக் கப்பல் அமெரிக்க துறைமுகத்தை சென்றடைந்து

வைரவிழாவிற்கு T.SHIRT இல் பதிவு செய்திருந்தோம்


அன்னபூரணிக் கப்பலை வாங்கிய அமெரிக்கர்களுடன் நம்மவர்கள்.

ஆர்வம்மிக்க மாலுமிகள் 89அடி நீளமுள்ள கப்பலில் பாய்களின் உதவிகளுடன் மாத்திரம் சமுத்திரத்தைக்கடப்பது இதுவே கடைசித் தடவையாயிருக்கும் என்றார். இப்படியாக பாய்மரக் கப்பலில் சென்று மாபெரும்சாதனை படைத்தவர்கள் வல்வைக் கடலோடிகள்...

## என் குடும்பத்தினர்

வல்வெட்த்துறைக் கடலோடி பரம்பரையின் தண்டையலான சண்முகம்பிள்ளை தையல்நாயகியின் மகனான 15-03-1915இல் பிறந்த நடனசிகாமணிக்கும் தச்சுத்தொழில் புரியும் பரம்பரையான சிவப்பிரகாசம் சிவகாமிப்பிள்ளையின் 1920ல் மூத்த மகளாகப் பிறந்தவரான பார்வதிப்பிள்ளைக்கும் நான்காவது மகனாக 26-12-47ல் வல்வையில் பிறந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகசிகாமணி, சண்முகசிகாமணி, ஜெயவீரசிகாமணி என மூன்று ஆண் சகோதரர்களும், சிவகாமசுந்தரி, வனிதாமணி, ரூபமணி என மூன்று பெண்சகோதரிகள் உட்பட நாம் ஏழுபேர். எனது தந்தை நடனசிகாமணிக்கு இரு சகோதரர்கள். இரத்தின சிகாமணி, ஞான சிகாமணி. இவர்களில் ஞானசிகாமணி இளவயதில் சுகவீனம் காரணமாக தவறிவிட்டார்.



எனது அப்பப்பா அப்பாச்சி (நிற்பவர்) இளையபெருமாள் அப்பா

மூத்தவர் எனது பெரியப்பா இரத்தினசிகாமணி, இலங்கை சுதந்திரமடைய முன்பு 1938ம் ஆண்டளவில் மலேசியா சென்று தபாலதிகாரியாகத் தொழில் புரிந்தார். அவர் வல் வெட்டித்துறை கெங்காபாயை திருமணம்செய்து தொடர்ந்தும் அங்கேயே வாழ்ந்தார். கெங்காபாயின் மூத்த சகோதரி.. இரத்தினாபாய், ச.ஞானமூர்த்தி தபால் பரிசோதகர் (பின் நாட்களில் நகரசபைத் தலைவராகவும் இருந்தவர்) அவர்களை திருமணம் செய்தார். இளையசகோதரி சீதாபாய் வர்த்தகரான (திருமால் பட்டி) நாராயணசாமியை திருமணம் செய்தார். எனது அம்மாவின் சகோதரி இராஜேஸ்வரி. வல்வையில் நூறு வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட மெத்தைக் கடை மூன்று மாடி (basement)அமைத்த பிரபல வர்த்தகர் அருணாசலம் அவர்களின் மூன்றாவது மகன் குழந்தைவடிவேல் அவர்களை திருமணம் புரிந்தவர். இந்த பேஸ்மன் நிலத்தின்கீழ் உள்ள வீட்டின் மூலம், வெளியூர்களில் வல்வைக் கடற்கரையை அண்டிய வீடுகளில் பாதாளஅறைகளைக் கட்டியுள்ளார்கள் என்ற கதைகள் இன்றும் உலாவிவருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பாதாள அறைகளுள்ள வீட்டினுள் எமது சின்னம்மா வசித்ததின் காரணமாக நாங்களும் சிறுவயதில் அங்குசென்று தங்கியிருந்துள்ளோம். அவரும் சகோதரர்களும் பின்நாட்களில் தந்தைவழியில் புத்தகக்கடை, இரும்புக்கடை, வேல்ஸ்ரூடியோ, சர்பத்கடை ஆகியவற்றை நடத்தியவர். அந்நாட்களில் புத்தகக் கடை, இரும்புக்கடை, ஸ்ரூடியோ ஆகியவற்றின் வாடிக்கை யாளர்கள் உடுப்பிட்டி, கம்பர்மலை, தொண்டைமா னாறு கிராமங்களில் இருந்தெல்லாம் வருவார்கள்.



எனது தந்தை ச.நடனசிகாமணி, தாய் பார்வதிப்பிள்ளை.

எனது பேரன் சண்முகம்பிள்ளை 'வெள்ளைப் பாக்கிய லெட்சுமி' என்ற கப்பலில் தண்டையலாகப் பணிபுரிந்தவர். அவருடைய இல்லம் ரேவடி ஒழுங்கையில் இருந்தது. அதுதான் எனது தகப்பனார் பிறந்து வாழ்ந்த இல்லம். பின்னர் அந்தவீடு அவரின் தாய்மாமனுக்கு உரிமையாகியது. அந்தவீட்டிலுள்ள பேர னாரின் உடமைகளான பெறுமதிமிக்க கப்பல்தொழிலுக்கு பாவித்த திசைகாட்டும் கருவி, சட்டிமம், அரக்கன் பர்மா போன்ற இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்கள் பாதுகாத்துவைக்கும் 'சாடிகள்' எங்கள் தெணியம்பை வீட்டில் நினைவுச்சின்னமாக எங்கள் வீட்டில் காலந்தோறும் பாதுகாத்து இருந்தன. ஒவ்வொரு தைப் பொங்கலுக்கும் வீடு சுத்தம்செய்யும்போது அவற்றை வியப் புடன் பார்ப்போம். சந்திரகிரகணம் சூரியகிரகணம் உண்டாகும் காலங்களில் அந்த சட்டிமத்தை எடுத்து அதிலுள்ள பச்சை, சிவப்பு நிறக்கண்ணாடிகளின் மூலம் பார்ப்போம். எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா சிதம்பராவில் A/L வகுப்பில் கற்கும்போது கல்லூரி விஞ்ஞானபீடத்திற்கு அன்பளிப்பு செய்தார். மரப்பெட்டிக்குள் அடங்கிய கப்பல் மணிக்கூட்டை உறவினரான கப்டன் திரு.குண சுந்தரம் அவர்களிடம் எனது தந்தை கொடுக்கும் படிகூறி அதை நானே கொண்டுசென்று கொடுத்தேன். வீட்டிலிருந்த 'சாடி'யில் அந்தநாட்களில் அரசு தரும் இலவச அரிசியை நிரப்பி வைத்துப் பாவிப்போம். தற்போது 'சாடி' மாத்திரம் எமது ஆவணக் காப்பகத்தில் இடம்பெற்றுள்ளது.




ஐயா, அம்மா, பெரிய ஐயாவின் மகள் ஆச்சி அக்காவுடன்,
நானும் சகோதரர்களுடன்

எனது அம்மாவின் தாய்மாமன் கந்தசாமி வைத்திலிங்கம், தபால் திணைக்களம் மேலதிகாரியாகப் பணிபுரிந்தவர். வைத்திலிங்கம் அப்பா தெணியம்பையிலுள்ள தனது மரு மக்களுக்கு (சகோதரியின் பிள்ளைகளான) அம்மாவிற்கும் சின்னம்மாவிற்கும் இரண்டு அறைக் கல்வீடு கட்டிக்கொடுத் திருந்தார். பாய்க்கப்பலில் இறக்கு மதி, ஏற்றுமதி வர்த்தகர் ஆனந்தமயில் மகள் தங்கராணியை அவர் திருமணம்செய்து அவர்களுக்கு பதினொரு பிள்ளைகள் அவர்களின் மூத்தபுதல்வி இந்திராணியை, தண்டையல் கதிரிப்பிள்ளையின் மகன் க.துரை ரெத்தினம் பட்டதாரி ஆசிரியர் திருமணம்செய்தார். பின்நாளில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து சேவைசெய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்திலிங்கம், தங்கராணி, குடும்பத்தினருடன்



திரு. திருமதி. வைத்திலிங்கம் (அம்மாவின் மாமா, மாமி)
அருகில் எனது அம்மா

எனது தந்தையின் தாய்மாமன் இளையபெருமாள். இவர் வல்வெட்டித்துறையில் மின்சார இயந்திரம் வைத்திருந்து 'ஜெயா' லைற் நடத்தி பிரபல்யம் அடைந்தவர். இன்று கோயில் களுக்கு தனியாக மின்சார இயந்திரம், கழகங்களுக்கு தனியான மின்சார இயந்திரங்கள் வைத்துள்ளனர். இந்த வளர்ச்சிக்கு இவருடைய தொழிலும் வழி காட்டியாக இருந்துள்ளது.

எனது தந்தையார் இளம்வயதில் பல பொதுசேவை களில் ஈடுபட்டவர். இரண்டாம் உலகப் போரின்போது பொது மக்களின் தொண்டர் சேவையில் கடமையாற்றியவர். வல்வை நெடியகாடு பிள்ளையார் கோயில் நிர்வாக சபையிலும் பணி புரிந்தவர். வல்வையில் கைத்தெறி நெசவுநிலையத்தை ஆரம்பித்து முன்நின்று நடத்திய குழுவினரில் ஒருவர். வல்வை சனசமூகசேவா நிலையத்தில் பணியாற்றியதோடு வல்வை நகர சபையின் தேர்தலில் பஜார் வட்டாரத்தில் தெரிவு செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பட்டு(1953-1956) தலைவராகப் பணியாற்றினார். வர்த்தகராக வும், பின் நாட்களில் திருகோணமலை துறைமுகத்தில் இலிகிதராக கடமையாற்றினார். இவர் பிள்ளைகளை படிப்பித்து திருமணம்நடத்தி பேரப்பிள்ளைகளைக் கண்டு 1990ம் ஆண்டு தனது எழுபத்தைந்தாவது வயதில் இடப்பெயர்வு காரணத் தால் பருத்தித்துறை, புற்றளையில் காலமானார். எனது தாயார் பார்வதிப்பிள்ளை தனது குடும்ப வாழ்வில் கணவன் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார்.

## பாடசாலை வாழ்க்கை


எனது கல்வி வல்வை சிவகுரு வித்தியாசாலையில் ஆரம்ப மாகியது. இப்பாடசாலை 1889ம் ஆண்டில் கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஆலடியிலுள்ள வைத்தீஸ்வரன் கோயிலுக்குரிய காணி யில் தொடங்கிய ஆங்கிலப் பாடசாலை. பின்னர் சிதம்பராக் கல்லூரி என்ற பெயரில் ஊரிக்காட்டிற்கு மாற்றப்பட்டபொழுது அதே இடத்தில் திரு.ஞா.தையல்பாகர் அவர்களால் முதல்நிலை மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பாடசாலையாக மாற்றப் பட்டது. அப்பாடசாலை ஆலடிப்பள்ளிக்கூடம் என்றபெயரில் விளங்கிய பாடசாலை பின்நாட்களில் சிவகுருவித்தியாசாலை யாக மாறியது. சிவகுருவித்தியா சாலையில்தான் நான் ஆரம்பக் கல்வியைக் கற்கத்தொடங்கினேன். அப்போது திக்கம் அல்வாய்ப் பகுதியிலிருந்த வி.துரைராசா, தலைமை ஆசிரிய ராகப் பணியாற்றினார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் வகுப்புகள் ஆரம்பிக்கமுன்பு மாணவர்களாகிய எம்மை அம்மன் கோயில்வாசலுக்கு வரிசையாக அழைத்துச் செல்லப்பட்டுஅங்கு தேவாரம், திருவாசகம், சிவபுராணம் பாடி பஜனை முடித்து திரும்பி பாடசாலை ஆரம்பமாகும் நடைமுறை இருந்தது. அப்போது தான் முன்னைய நூற்றாண்டு பழமைவாய்ந்த கோபுரம் இடித்து அகற்றப்பட்டுக் கொண்டிருந்ததை நேரில் பார்த்தது இன்றும் நினைவிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நான் படித்தபோது சிதம்பராக் கல்லூரியின் முகப்புத் தோற்றம்.




சிவகுருவில் 5ம் தரம் சித்தியடைந்ததும் 6ம் வகுப் பிற்கு சிதமாபராக்கல்லூரிக்கு சென்றேன். சிதம்பராவில் திரு.தையல்பாகர் முகாமையாளராகவும், தென்இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட வண்ணமாமலை ஐயங்கார் அவர்கள் அதிபராகவும் இருந்தகால கட்டத்திலிருந்து திரு.அருள்சுந்தரம் (தையல்பாகர் அவர்களின் புதல்வர்) அவர்கள் அதிபராகக் கடமையாற்றி பின்னர் திரு.எஸ் .சத்தியமூர்த்தி அதிபராக இருந்ததுவரை நான் சிதம்பராவில் கல்வி யைத் தொடர வாய்ப்புக்கிடைத்தது. ஆங்கிலம் உடுப்பிட்டி அரியம் மாஸ்டரிடமும், உயிரியல் இரத்தினவடிவேல் மாஸ்டரிடமும், சித்திரம் பாலாமாஸ்டரிடமும், விளையாட்டு தியாகராசா மாஸ்டரி டமும் படித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288453

13964



அப்போது எமது பாடசாலையில் விஞ்ஞான மன்றம், இலக்கிய மன்றம் போன்றவை மாதம் ஒருமுறை மாறி மாறி நடை பெறும். இலக்கிய மன்றத்தில் பத்திராதிபராகக் கடமை புரிந்த வேளையில் பலருடைய கட்டுரைகளைப் படிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அந்த அனுபவங்களுடன் முதன்முதல் தந்தை செல்வநாயகம் அவர்களால் நடத்தப்பட்ட 'சுதந்திரன்' தமிழரசுக் கட்சியின் பத்திரிகையில் "எனது கிராமம்" என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதுமாறு விளம்பரம் வந்தபோது, நான் "எனது கிராமம் வல்வெட்டித்துறை" என்ற தலைப்பில் எழுதி எனது கட்டுரை பிரசுரமாகியது. அன்று எழுதிய அக்கட்டுரை தான் எனக்கு நூல்களின்மீது ஆர்வம் ஏற்பட்டது. பாடசாலைக்குச் செல்லும் காலங்களில் வீட்டில் பொருளாதாரக் கஷ்டம் இருந்த வேளையில் நானும் எனது சின்னண்ணா சண்முகசிகா மணியும் எமது ஊரிலும் அயல் கிராமங்களிலும் கட்டிட வேலைகளுக்குப் பாவித்த சீமந்து பை களைவாங்கி கட்டி தலையில் சுமந்து வீட்டிற்கு கொண்டுவந்து அதை பல அளவுகளிலும் வெட்டி ஒட்டி எமது ஊரிலும் அயல் ஊர்களிலும் உள்ள கடைகளிற்கு கொடுப்போம். வெள்ளிக் கிழமை களில் தட்டிவானின் பின்புறம் ஏற்றி செல்வச் சந்நதிகோயிலடியிலுள்ள கடைகளுக்கு கொடுத்துவிட்டு பாடசாலைக்குச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு சிலவேளைகளில் தாமதமாகச் சென்றால் உடுப்பிட்டி இரத்தினம் ஆசிரியர் (மாணவர்கள்கட்டுப் பாட்டாளர்) நடவடிக்கை எடுக்காமல் வகுப்பிற்குச் செல்ல அனுமதித்துவிடுவார். காரணம் அவரும் வெள்ளிக்கிழமை காலை கோயில்சென்று பின்னரே பாடசாலைக்கு வருவது வழக்கம். ஒரு தடவை பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் இல்ல அலங்காரமுகப்பிற்கு 'தாஜ்மஹால்' வடிவில் நண்பர்களுடன் நானும் சேர்ந்து தயாரித்தோம். இரண்டாம் இடம் பெற்றுக்கொண்டது.




பாடசாலை இல்ல அலங்காரப் போட்டியில் மேலே ஏறி நிற்பது நான்

எம்மவர்களுக் கெல்லாம் இதற்கு வழிகாட்டியாக சித்திர ஆசிரியர் 'பாலா' மாஸ்டர்தான். நாம் படிக்கும்போது எனது அண்ணா யோகசிகாமணியும் படித்துக் கொண்டிருந்தார். அவருடன் ஆ.சிறீதரன், சு.கமலரங்கன், தி.பரமசிவம், கு.அப்பாத் துரை, வி.பாலசேகரம்(முட்டாசிஅண்ணா)ஆகியோர் உற்றநண்பர்கள். 1961ம் ஆண்டு தந்தை செல்வநாயகத்தின் தலைமையில்(தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம்) தமிழரின் உரிமை அறப்போராட்டம் யாழ்நகரில் தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வதற்காக மேல்வகுப்பு மாணவர் களான அண்ணா, அவரது நண்பர்களுடன் நானும் எனது நண்பர்க ளும் சேர்ந்து லொறியில் ஏறிச்சென்றோம். அன்று க.துரைரெத்தினம் (பா.உ)தலைமையில் க.சபாரத்தினம் வல்வைப்பட்டினசபை தலை வர், வல்வை மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந் தனர். எமது ஊரிலுள்ள எஸ்.வி.சுப்பிரமணியம் சோடா, குளிர் பானங்களை சத்தி யாக்கிரகத்திற்கு வந்திருந்த மக்களுக்கு கொடுத்தபோது நாமும் வாங்கிக்குடித்தோம்.



1961ம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொள்ள யாழ்நகர் நோக்கி செல்லுதல் (தொப்பியுடன் துரைரத்தினம் M.P)

2000 பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்த நேரம் கல்லூரி கட்டிட விஸ்தரிப்பிற்காக பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர், பழைய மாணவர்சங்க உறுப்பினர், வல்வை மக்களும் இணைந்து இரண்டு, மாடிக்கட்டிடங்களைக் ஒரேநேரம் கட்ட ஆரம்பித் தனர். அப்போது மாணவர்களாகிய நாமும் அந்தக்கட்டிட வேலைக்கு சிரம தானமாக பலபணிகளைச் செய்திருந்தோம். அன்று சீட்டுக்குலுக்கல், நாடகங்கள் மூலமாகவும் பணம் சேர்க்கப்பட்டது. சீட்டுக்குலுக்கலில் அதிகம் விற்பனை செய்து ஹெலியன்ஸ் நண்பர்கள் முத்துச்சாமி, காந்திதாசன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.தர்மராஜா, ஜெயபாலன், நான் உட்பட வேறு பலரும் இயங்கி முதல்பரிசைத் தட்டிச்சென்றோம். பின்நாட்களில் ஹெலியன்ஸ் நாடக மன்றமாகமாறியது. அதேவருடம் வல் வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலைக்கு மாடிக்கட்டிடம் ஒன்று வர்த்தகர் விக்ஷ்ணுசுந்தரம் அவர்களால் கட்டப்பட்டு திறப்புவிழா **1965**ம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. அப்போது சுகாதார அமைச்சர் உட்பட பா.உறுப்பினர்களான சிவ சிதம்பரம், துரைரெத்தினம், அமிர்தலிங்கம் போன்ற அரசியல் தலைவர்களும் கலந்துகொண்டனர். அதில் நானும் கலந்து கொண்டேன். காரணம் அப்போதே நான் அரசியலில் ஈடுபட ஆரம்பித்துவிட்டேன். அந்தத் திறப்புவிழாவின் போது திரு.அமிர்தலிங்கம், திரு.துரைரெத்தினம், திரு.சிவசிதம்பரம் மூவரும் உரையாற்றியிருந்தனர். அதன்பின்பு மறுவருடம் **1966**ல் சிதம்பராவின் இரண்டு மாடிக்கட்டிடத்தின் திறப்புவிழா சிறப் பாக இரண்டுநாள் விழாவாக நடைபெற்றது. அதில் உரை யாற்றிய சிவ சிதம்பரம் மாடி வைத்தியசாலையில் பிறக்கும் பிள்ளைகள் மாடிபாட சாலைகளில் படிக்க வசதியாக கட்டிய வல்வை மக்கள் புத்திசாலி என பெருமை கொள்வதாகக் கூறினார்.

ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்திலும், வளர்ச்சியிலும் வடமராட்சிப் பகுதிக்கு முக்கியபங்கு உண்டு. சுருக்கமாக மூளை வளத்திற்கு இலங்கையில் பெயர்பெற்றது வடமராட்சி என்றே கூற லாம். இப்பகுதியில் அமைந்துள்ள கல்லூரிகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இந்த அடிப்படையில் சிதம்பராவும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதில் சிறிதும் ஐய மில்லை. எமது கல்லூரியில் மாணவர்கள் கல்வியால் உயர்ந்து நீதித்துறை, நிர்வாகத்துறை, வைத்தியத்துறை, பொறியியல் துறை, கணக்கியல்துறை, கப்பற்துறை, அரசியற்துறை, விளை யாட்டுத்துறை, வர்த்தகத் துறை போன்ற எல்லாத் துறைகளிலும் கடமையாற்றி கல்லூரிக்குப் புகழ் சேர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனிசிறந் தனவே' இந்தத்தாரக மந்திரத்தை எமக்குப்படிப்பித்த சிதம்பராக் கல்லூரி நூற்றாண்டுகள் நிறைவை நான் இங்கு வந்தபின் அறிந்து மிக்கமகிழ்ச்சியடைந்தேன். நூற்றாண்டு நிறைவினை முன்னிட்டு நூற் றாண்டு நிறைவு மலர் ஒன்று வெளியிட்டனர். அந்தவிழா மலருக்கு கனடாவிலிருந்து வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வயித்திய லிங்கப்பிள்ளை **(1843 - 1901)** அவர்களின் வாழ்க்கை வரலாறுபற்றிய கட்டுரை எழுதி யனுப்பி மலரில் இடம்பெற்றிருந்தது மிகுந்த திருப்தி அளித்தது.


வாலிபப்பருவத்தில் எனது முதல்வேலை யாழ்ப்பாணம் வடமராட்சியில் உடுப்பிட்டி வல்லை நூற்றல் நெய்தல்ஆலை. பெரிய அளவில், பின்நாட்களில் ஜப்பான் நாட்டிலிருந்து தரு விக்கப்பட்ட (Power loom) மின்சாரத்தில் இயங்கியதறியில் வேலை செய்தேன். இதனை தொண்டைமானாறு வர்த்தகரான ராஜ சேகரம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகசபை நடாத்திக்கொண்டிருந்தது. அதன் செயலாளராக திரு.ச.ஞான மூர்த்தி ஜே.பி அவர்கள் கடமை யாற்றினார். அவரின் உதவி யுடன் அதில் வேலைக்குப் சேர்ந்து 2 வருடங்கள் வேலை செய்தேன். அத்தொழிற்சாலையில் விதம்வித மான வர்ணத்து வாய்கள் சாரிகள், வேட்டிகள், துணிகள், தயாரிக்கப் பட்டு வட கிழக்கு மாகாணங்கள், அதைவிட கொழும்பு, மற்றும் தென்பகுதி பலஇடங்களுக்கும் அனுப்பப்பட்டு வந்தன. அங்கு இரவு பகலென இரண்டு நேரவேலை நடைபெற்றது. அதில் இரவுநேர வேலை ஆண்கள்மாத்திரமே. வேலை. வல்வையிலிருந்து வேலுப் பிள்ளை மனோகரன், எசமான் அருணாசலம், தொண்டை மானாறு ஞானபண்டிதர், கோபிநாதன், அம்பிகா, உடுப்பிட்டி மணியம்மென இன்னும் பல அயல்கிராமங்களைச் சேர்ந்தவர் களும் பணியாற்றினோம். அப்போது நெசவுசாலையின் உற் பத்திக் காட்சியறையும் விற்பனையும் நல்லூர் திருவிழாவின் போது போடப்பட்டபோது பலதிருவிழாக்களை இரவும் பகலும் பார்க்கும்சந்தர்ப்பம் கிடைத்தது. சிவராத்திரியின்போது அங்கு வேலைசெய்த நண்பர்களுடன் திருக் கேதீஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்குச் சென்று பாலாவி நீர்ஓடையில் குளித்து கோயில் சென்று பாடல்பெற்ற கேதீஸ்வரனை வணங்கி வந்தோம். அதன்பின்பு இன்றுவரை திரும்பச்செல்லும் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை.

வீட்டுப் பொறுப்புக் காரணமாக கப்பலுக்குச் செல்வ தற்கு முடிவெடுத்தநேரம் ஆரம்பப்பயிற்சி கப்டன் அம்பலம் மாஸ்டர் வீட்டில் பயிற்சி நடைபெறுவதைக் கேள்விப்பட்டு சனி, ஞாயிறு பயிற்சி வகுப்புக்களுக்கும் சென்றேன்.



கப்டன்.அம்பலம் மாஸ்டர் வீட்டில் நடாத்தப்பட்ட மாலுமிகள் பயிற்சி வகுப்பில் நானும் பங்குபற்றியபோது

அங்கு பயிற்சி எடுத்து முடித்தபின்பு முதல் குழுவினரில் ஒருவராக கொழும்பிற்கு அனுப்பப்பட்டோம். எனது அண்ணா குடும் பம் கொழும்பில் தெஹிவலவில் வசித்தபடியால் எனக்கு அங்கு தங்குவதற்கு வசதியாக இருந்தது. மற்றைய நண்பர்களும் தங்கள் வசதிக்கேற்ப வெவ்வேறு இடங்களில் தங்கினார்கள். அந்தநாட்களில் கொழும்பில் இன்ரகொண்டினல், ஒபரோய் ஆகிய ஹொட்டல்கள் கட்டுமான வேலைகளில் தொண்டை மானாறைச் சேர்ந்த அம்பிகைபாகர் நில அளவையாளரின் மகன் திரு.குலோத்துங்கன் இன்ஜினியர் அவர்கள் எயர்கொண்டிஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளை இரண்டு இடங்களிலும் செய்துகொண்டிருந்தார். திரு.மணிவாசகர் (மணி அண்ணா)எங்களில் விருப்பமான வர்களுக்கு அதில்வேலை செய்ய வாய்ப்பு பெற்றுத் தந்தார்.

அதில் கோ.ஜெயாலன், நான், செல்லையா.ரவி, நாகமுத்து பாலேந்திரனுட்பட 7,8 பேர் வேலைசெய்து கொழும்பில் பல அனுபவங்களைப் பெறும்வாய்ப்புக் கிடைத் தது. அந்தநாட்களில் மதிய உணவு 75சதம். இரண்டாம் தடவை யும் சோறு கறி பரிமாறுவார்கள். ஒரு நாள் சம்பளம் ஆறு ரூபா.



கொழும்பில் ஹோட்டலில் வேலை செய்தபொழுது
நானும் எனது நண்பர்களும்.

அண்ணா யோகசிகாமணி கொழும்பு வைத்திய சாலையில் MLTயாக வேலைசெய்து LLB படித்து முடித்து சட்டக்கல்லூரி யில் படித்துக் கொண்டிருந்தார். சிறீமா பண்டாரநாயக்கா பிரதமராயிருந்த காலம் அரிசி, பாண், சீனி எல்லாம் தட்டுப் பாடான காலம். இவை வாங்கு வதற்கு Queவில் நின்று வாங்க வேண்டும். அந்த நாட்களில் திரு.மணிவாசகம் அவர்கள் திம்பிரிகஸ்சயவில் வசித்துவந்தார். நான் பொழுது போக்காக தெகிவளையிலிருந்து நடந்தே இவர் வீட்டிற்குச் செல்வேன். எனது நண்பர்களும் வருவார்கள். அந்த நாட்களில் எனது நண்பன் ஆ.மனோகரன் கொழும்பில் அரச சாராயக் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். நாங்கள் ஊர் நண்பர்களும் ஒன்றாகக்கூடுவோம். அரசியல் பிரச்சினை இல்லாதகாலம். கொழும்பில் பல நிகழ்வுகளிலும் பார்வை யாளராகக் கலந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலேசியா சென்றபோ மணிஅண்ணாவின் வீட்டு விருந்தில்

ஒரு நாள் எனது அதிக்ஷ்டம் மணிவாசகம் அண்ணா வீடு சென்றபோது அவர் நீங்கள் கப்பலுக்குப் செல்லத்தாயாரா? என்றார். நான் ஆம்தயார் என்றவுடன் நாளை எங்கள் சிலிங்கோஹவுஸி லுள்ள ஞானக்கோன் officeஇற்கு வா அவுஸ்திரேலியாவிற்குப் போக வேண்டிவரும் என்றுமட்டும் கூறினார். அங்கு சென்றபோது 17,18 பேரில் எனக்குத் தெரிந்தவர்கள் இருவர் மட்டுமே. அவர்கள் அம்பலம் மாஸ்டர் அவர்களும் கனகேந்திரன் மட்டுமே. மற்றவர்கள் யாவரும் புதியவர்களாயிருந்தனர். எங்கள் எல்லோரிடமும் கடவுச் சீட்டுகளை வாங்கிவைத்து 3 நாட்களின்பின் அவுஸ்திரேலியா, சிட்னி நகருக்கு விமானச்சீட்டுக்களை தந்தார் திரு ஞானக்கோன் அவர்கள். திரு. தாமோதரம் மணிவாசகர் அவர்கள் தொழிலதிபர் திரு. பி.பி.ஞானக்கோன் அவர்கள் உதவியுடன் பல நூற்றுக் கணக்கான எம்போன்ற இளைஞர்களை வர்த்தக கப்பலுக்கு அனுப்பி வல்வையின் பொருளாதாரத்தை உயர்த்திய பெருமைக்குரியவராவார்.

இன்று வல்வையில் பல கப்பல் உத்தியோகத்தர்கள் உருவாகி இருப்பதற்கும் மணி அண்ணாவின் சேவையேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலேசியா சட்டத்தரணி கிருபா.ரட்ணசிகாமணி, திரு.மணிவாசகர் நண்பர்களுடன் நான்


பயண ஏற்பாடுகளை முடித்து நாம் விமானநிலையத்தில் எல்லோரும் சந்தித்தோம். கூடவே மணி அண்ணா அவர்களும் எங்களுக்கு உதவியாக அவுஸ்திரேலியாவரை வந்தார். இதுவே எனது முதல் விமானப்பயணமாகவும் அமைந்தது. எங்கள் பயணம் சிங்கப்பூர் சென்று அங்கிருந்து மறுவிமானத்தில் மலேசியா சென்று அங்கு வேறுவிமானம் மூலம் அவுஸ்தி ரேலியா மல்பேன் நகரிற்குச் சென்றோம். அங்கு seaman clubஇல் ஓரிரவுதங்கி மறுநாள் விமானத்தில் சிட்னிநகரை சென்றடைந் தோம். யாவரும் ஒரு பஸ்ஸில் ஏற்றப்பட்டு ஒரு ஹோட்டலைச் சென்றடைந்தோம். 10 நாட் களின்பின் Dry dock இல் உள்ள Supreme Trader என்ற கப்பலிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.



வலதுபக்கம் மயிர் வளித்து பெனியனுடன் இருப்பது நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்றே நான் O.S ஆக தளத்தில் வேலையை பொறுப் பெடுத்துக் கொண்டேன். அங்கு இரும்பு வளை யங்கள் ஏற்றிக் கொண்டு இந்தோனேசியா, ஜகாத்தா சென்றோம். போகும் வழியில் எனக்கு வீல் பிடிக்கப்பழக்கி பின்னர் நானும் பிடிக்க ஆரம்பித்தேன். அங்கு பொருட்களை இறக்கியபின்பு கப்பல் மலேஷியா, போட்கிளாங் நோக்கி பயணித்தது. அங்கு சென்ற தும் எனது பெரியப்பா குடும்பத்தினரைப் பார்க்கலாம் என்ற ஆர்வத்தோடு இருந்தேன். விடுமுறைதினமான சனி அன்று நான் போர்ட் கிளாங்கி லிருந்து மலேசியா நகரிற்கு வாடகைக்காரில் சென்றேன். பின்பு அங்கிருந்து வேறொருவாடகைக் கார்மூலம் அவர்கள் வீடு சென்றுபோது முதன்முதலாக என்னைக்கண்டதும் பெரியப்பா கட்டி அணைத்து சந்தோஷமடைந்தார்கள். ஒருநாள் அங்கு தங்கி திங்கட்கிழமை கப்பலுக்கு வேலைக்கு திரும்பி விட்டேன். கப்பல் புறப்படும் நாளன்று பெரியப்பா குடும்பத் தினர் கப்பலிற்கு வந்தார்கள். உறவினரான மணி அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் officer's mess இல் அவர்களை உபசரித்தார். அதன்பின் அவர்கள் எங்களை வழியனுப்பிவிட்டு வீடு திரும்பினார்கள். இந்தக்கப்பல் கென்னியாவில் கஜூ ஏற்றிக்கொண்டு தூத்துக்குடி துறைமுகம் சென்றது. அப்போது வேலை செய்யும் நண்பர் களுடன் இரவு வாடகைக்காரில் திருச்செந்தூர் முருகனைத் தரிசித்துவிட்டு தியேட்டரில் சிவாஜி நடித்த படமும் பார்த்து கப்பல் திரும்பினோம். ஒருவருடம் இதே கப்பலில் வேலை செய்தபின்பு விடுமுறையில் கொழும்பு திரும்பி னேன். மீண்டும் கிறீக்கப்பலில் ஏறுவதற்காக கொழும்பு சென்று மக்கனன்ஸ் ஏஜன்ட்மூலமாக ஜப்பான், டோக்கியோ சென்று Tarpon Swift கப்பலில் ஏறினேன். அந்தக்கப்பல் கனடா, அமெரிக்கா போன்ற இடங்களுக்கு சென்று அந்த நாடுகளையும் பார்க்கக் கூடிய வாறு இருந்தது. Sirdhana Fortune, Singha Fortune, Saudi Fortune, Suprem Star, Petro Star, Abdullah, Achillet இப்படி பல கப்பல்களில் வேலைசெய்து ஏழுவருடங்களின் பின்பு 1981ம் ஆண்டு ஊர் திரும்பியநேரம் திருமணம் முடிவாகியது. எமது அம்மாவழியில் உறவினரும் வல்வை இயற்றமிழ்ப் போதகா சிரியர் வயித்தி லிங்கபிள்ளை(புலவர்)யவர்களின் பூட்டப் பிள்ளைகளான டாக்டர்.சி. சிதம்பரநாதன், பத்மலோஜனி ஆங்கிலஆசிரியை ஆகியோரின் மூத்த



எனது மாமா Dr.சிதம்பரநாதன், மாமி பத்மலோஜனி (ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் உமாவுக்கும் எனக்கும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது திருமணத்தை வல்வை வைத்தீஸ்வரர் ஆலயப் பிரதமகுருக்கள் பரமேஸ்வரர் நடாத்தி வைத்தார். எனக்கு ஒரு மைத்துனர் பத்மநாதன், இரு மைத்துனியர் நளாயினி, ராதிகா ஆகியோர். திருமணத்திற்கு திரு.மாவை.சேனாதிராஜாவும் வந்து எங்களை வாழ்த்தியிருந்தார்.



288453

**1982**ல் மாசிமாதம் எங்களுக்கு ஆண் குழந்தை கார்த்தி கேயன், மந்திகை வைத்தியசாலையில் 7 மாதத்தில் பிறந்து 5 நாட்களில் தவறினார். இது எங்களை ஆழ்ந்த கவலைக்குள்ளாக் கியது. அதன்பின் திரு.ஞானகோன் அவர்கள் மூலம் சவூதி அரேபியாவில் Petro Star எண்ணைக் கப்பலில் ஒன்றரைவருடமும் பின்பு திரு.ரங்கவடிவேல் மூலமாக National companyயில் ஒரு வருடம் வேலைசெய்து ஊர் திரும்பினேன். அந்தநாட்களில் ஈழப் போராட்டம் நடைபெற்றகாலம். **1984** September மாதம் **12**ம் திகதி எங்களுக்கு சந்திரசேகர்(சந்துரு) பிறந்தார். இரண்டாவது மகன் சௌமியன் **1986** March மாதம் **18**ம் திகதி பிறந்தார். எனது மனைவியின்வழியில் அடுத்த தலைமுறையில் வந்த முதல் குழந்தைகள் சந்துரு, சௌமியன் தான். பிள்ளைச் செல்வர் களுடன் வாழ்ந்த காலங்கள் பொற்காலம். அவர்களின் விளை யாட்டும் விவேகமும், புத்திசாதுரியமும் கண்டுரசித்தோம். அவர்களது மழலைக் கதை கேட்டு இன்புற்றோம். அளவிலா ஆனந்தமான காலம். சந்துரு வல்வை நெடியகாடு பாலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைத் துவங்கினார். அந்த நாட்களில் பிரச்சினை மிகவும் வலுவடைந்த நேரம் நான் கப்பல் ஏற ஆயத்தம் செய்வதற்காக கொழும்பிற்கு சித்தி வீட்டிற்கு குடும் பத்துடன் சென்றோம். சித்தியும் சித்தப்பாவும் (புவனலோஜினி யும் நடராஜசிவமும்) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பாளர்கள். சௌமிக்குட்டி திம்பிரிகஸ்சயவில் பாலர் பாடசாலைக்குச் சென்றார். நான் அங்கிருந்து கப்பலுக்கு வெளிக் கிட மனைவியும் பிள்ளைகளும் சித்தியுடன் இருந்தார்கள். பாட்டா, பூப்பாட்டிக்கும் சந்துரு, சௌமியன் செல்லப்பிள்ளை களாக இருந்தார்கள். எனது மாமா மாமியும் டாக்டராகவும் ஆங்கில ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்கள். இருவரும் எங்களை குடும்பத்தை நான் கப்பல் செல்லும் வேளைகளில் நன்றாக கவனித்தார்கள்.



சந்துருக்குட்டியின்
முதலாவது பிறந்தநாள்



சௌமிக்குட்டியின் இரண்டாவது பிறந்தநாள்

நாட்டில் யுத்தம் காரணமாக Achillt என்ற கப்பலில் கப்பல்தள போசனாக 1990ல் ஏறி அல்ஜீரியா சென்று பிரான்ஸ் நாட்டிற்குச் சென்ற சமயம் அங்கு இறங்கி ஒரு சுப்பர்மாக்கற்றில் வேலை செய்தேன். அங்கு நான் இருந்தபோது பிரான்ஸ் நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்ட ஈபிள்ரவரின் 100வது பிறந்ததினவிழா கொண்டாடப்பட்டது. அதில்நானும் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத் தது. 3 வருடங்கள் அங்கிருந்துவிட்டு மனைவி பிள்ளைகளின் அன்பின் காரணமாக நானே ரிக்கற் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். இரண்டு வருடங்கள் ஊரிலும் கொழும்பிலுமாக இருந்துவிட்டு மீண்டும் கப்பல் ஏறும் சந்தர்ப்பம் கிடைத்தது. கப்பல் அமெரிக் காவில் விசா எடுத்து 15 பேரளவில் சென்றோம். அவர்கள் எங்களை அமெரிக்காவில் இறங்குவதற்காக ஏற்பாடு செய்தார்கள். அதில் ஒரு பகுதியினர் 1992 மார்கழியில் கனடாவிற்கு வந்து சேர்ந்துவிட்டோம் மனைவி பிள்ளைகளை நான் ஸ்பொன்சரில் கூப்பிட்டேன். பிள்ளைகள் கனடா வந்து 4,5 வகுப்பில் படிக்க ஆரம்பித்து பின்பு High school R.H.King இல் இருவரும் Grade 12 முடித்து சந்துரு Waterloo பல்கலைக்கழகத்தில் உயிரில் படித்து கொண்டிருக்க சௌமியன் Centrenial college இல் தனக்கு விருப்பமான இயந்திரக்கலையில் சேர்ந்து படித்து கொண்டிருந்தார். விடுமுறை நாட்களில் இருவரும் வேலை செய்து வீட்டிற்கும் உதவி புரிந்து சந்தோஷமாக வாழந்தபோது 2004 ல் நால்வரும் இலங்கை இந்தியா(தமிழ்நாடு) சென்று பின்னர் வல்வையில் எமது வரலாற்று கண்காட்சியையும் நடாத்தி வந்திருந்தோம். 2005 செப்ரெம்பர் 23 ம் திகதி Waterloo வில் நடந்த விபத்தில் இருவரும் எம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். இங்கு வந்த பின்பு எனக்கு பரிச்சயமான ஸ்பிரே பெயின்ற் வேலை செய்தேன். அதன் பின் பல இடங்களில் வேலை செய்து தற்சமயம் ஓய்வூதியம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது எமது பிள்ளைகளின் நினைவாக ஊரில் நாம் ஆரம்பித்த ஆவணக்காப்பகத்தை பராமரித்துக் கொண்டு இருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே மேடையில் தேர்தல் பிரச்சாரம்

*1965*ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் எமது பருத்தித் துறை தொகுதிக்குத் தமிழ்க்காங்கிரஸ் கட்சிசார்பில் பருத்தித் துறை நகரசபைத் தலைவர் திரு.நடராசா அவர்களும் கம்யூ னிஸ்ட் கட்சி சார்பில் திரு.கு.மோதிலால்நேருவும், தமிழரசுக் கட்சி சார்பில் திரு.க. துரைரெத்தினம் அவர்களும் போட்டி யிட்டனர்.

தொண்டமானாறு மக்களால் பெரிய கடற்கரை மைதானத் தில் ஒரேமேடையில் தமது கொள்கைகளை விளக்குமாறு ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் மூவரும் அரைமணித்தியாலம் தனித் தனியே பேசி முடிந்தபின்பு பதில் உரையாக ஐந்து நிமிடங்களும் பேசினர். பெரும்திரளான மக்கள் கலந்துகொண்டு இப்படியான பொதுமேடைப் பிரச்சாரம் எங்கும் நடந்தது இல்லையென மக்களும் பத்திரிகைகளும் அன்று பாராட்டின. இக்கூட்டத்தில் சென்ற நான் திரு க.துரைரெத்தினம் அவர்கட்கு மாலை அணிவித்தேன்.

## ஆனந்தன் தலைமையில் நடந்த உண்ணாவிரதம் 1965:

*1965*ம் ஆண்டு வேம்படியருகே சாலையோரமாக நடந்து கொண்டிருந்த திரு.வேலும்மயிலும் என்ற வர்த்தகரை வேகமாக வந்த இராணுவ வாகனம் அடித்து இறந்தார். வாகனசாரதியோ அதில் இருந்த சிப்பாய்களோ அதைப்பற்றி அக்கறைப்படாது வாகனத்தை நிறுத்தாது சென்றுவிட்டனர். மறுநாள் திரு.வேலும் மயிலும் அவர்களின் இறுதிக்கிரியை நடந்தபோது பெருந்திர ளான மக்கள் வணக்கம் செலுத்தினர். கிரியைகள் முடிந்தபின்னர் மக்கள் அனைவரும் இராணுவத்தினருக்கு எதிராக அமைதியான முறையில் கோஷங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலமாக சனசமூகசேவா நிலையம்வரை சென்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஆழிக்குமரன் ஆனந்தன் தலைமையில் காலஞ்சென்ற வேலும்மயிலும் குடும்பத்தினர்க்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் இதுபோல் மீண்டும் நடக்காது என்று அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்றும் கோரி பத்து இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தோம். உண்ணாவிரதம் இருந் தவர்களில் நானும் (ந.நகுலசிகாமணி) கோ.ஜெயபாலன், இ.அமரசேனாதிபதி, சந்திரலிங்கம்(மானாஅண்ணா), ச.காந்திதாசன் குட்டிமணி அண்ணா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னர் அரசகுழுவொன்று உண்ணாவிரதம் இருந்தவர்களைச் சந்தித்துப் பேசியது. யாழ் அரசஅதிபர் டி.ஆர்.ஒ, வல்வை இராணுவமுகாம் பொறுப்பதிகாரி, வல்வைப் பொலிஸ் அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். வல்வைப் பொதுமக்கள் சார்பில் பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் சமூகமளித்தார். பின்னர் தாம் அரசுடன் பேசி நடவடிக்கை எடுப்ப தாகவும் உண்ணா விரதத்தைக் கைவிடும்படியும் கேட்டனர். அதன் பின் மூன்று நாட்களின்பின் உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. ஆனந்தன் விளையாட்டுவீரன் மட்டுமல்ல தமது மக்களுக்களின் உரிமைப் போராட்டத்திலும் கலந்து கொண்ட போராளியு மாவார்.

## வர்த்தகப் பிரமுகர் வ.இ.சிவஞானசுந்தரம் படுகொலை 1967


வல்வையில் நடுநாயகமாக அமைந்திருக்கும் சனசமூக நிலையம் வல்வையில் பாராளுமன்றம்போல் விளங்குகின்றது. எமது கலாச்சாரத்தின் ஏற்றத்திற்கு உழைக்கும். அதே வேளையில் பல அரசியல் நடவடிக்கைகளிலும் நிலையம் ஈடுபட்டு வந்தது. வல்வை மக்கள் அடிக்கடி இராணுவத்தினராலும் பொலிசாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் துன்புறுத்தப்பட்டு வந்தனர். ஒருமுறை தனதுமகன் கைதுசெய்யப்பட்டுத் தாக்கப்பட்டுத் துன்புறுத்தப்படுவதைக் கேள்வியுற்றதாய் நீதி கேட்கப் பொலிஸ்நிலையம் சென்றபோது தாக்கப்பட்டார்.

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஊர் மக்கள் ஆளாகி வரும் கொடுமைகளைக் கண்டித்தும் சுமுகமான தீர்வுகாண வேண்டும் என்றநோக்குடன் நிலைய மண்டபவாயிலில் **1967**சித்திரை **8**ம் திகதி மாலை **6**மணியளவில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. நிலையத்தின் தலைவர் திரு.ச.ஞானமூர்த்தி (சமாதான நீதவான்) தலைமை தாங்க



வல்வை சந்தியில் முன்பு அமைந்திருந்த
வாசிகசாலை

எமது அந்நாள் பா.உ திரு.க.துரைரத்தினம் வல்வை நகரசபைத் தலைவர் திரு.மு.இரத்தினவடிவேல் ஆகியோரும் அன்று நிர்வாக சபையில் இருந்த திரு.கனக.மனோகரன், நான் உட்பட பலரும் கலந்து கொண்டோம். பொலிசாருக்கு எதிரான கூட்டம் ஆகையால் பொலிசாரின் அனுமதிக்கு விண்ணப்பிக்க முற்படவில்லை.

ஏழரை மணிக்கு பொலிசாரும் இராணுவத்தினரும் ஆயுத பாணிகளாக வந்து பொதுமக்களைத் தாக்கினார்கள். அன்று ஈழப் போராட்டம்.... ஏன் மக்களுக்கு துப்பாக்கி பற்றியே தெரியாத காலம். பெரியவர்கள், இளைஞர்கள், பெண்களுட்பட யாவரும் கடைகளிலுள்ள வெற்றுப்போத்தல்களாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்களாலும் திருப்பித்தாக்கினார்கள். பாராளுமன்ற உறுப்பினர் உட்பட நூற்றுக்குமேற்பட்டவர்கள்



பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம்

நிலைய மண்டபத்தினுள் அகப்பட்டிருந்தனர். வீதியால் வந்துகொண்டிருந்த ஆர்.வி.ஜி.சிங்கம்பீடி உரிமையாளர் திரு.வ.இ.சிவஞானசுந்தரம் அவ்விடத்திலேயே துப்பாக்கிக் குண்டுக்குப்பலியானார்.பல பொதுமக்களும் காயமடைந்தனர். ஆத்திரம்டைந்த இளைஞர்ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சார்ஜண்ட் இராஜரெத்தின மும் பலபொலிசாரும் காயமடைந்தனர். இராணுவத்தினரால் கடைகள் தீ மூட்டப் பட்டன. நூற்றுக் கணக்கான துவிச்சக்கர வண்டிகள் சேதமாக்கப் பட்டன. சம்பவம் நடந்தவுடன் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் அவர்களுக்குச்செய்தி அனுப்பப் பட்டது. சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்துவந்து நிலையத்தில் அகப்பட்ட யாவரையும் விடுவித்தார்.

மறுநாள் அதே இடத்தில் பிரேதபரிசோதனை நடக்கும்போது பொதுமக்கள்மீது பதட்டமானநிலையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முற்பட்டவேளையில் தமது சிம்மக்குரலில் \Put all your guns down ஆங்கிலத்தில் சிங்கம்போல (இவரை “உடுப்பிட்டிச் சிங்கம்”மென அரசியல்மேடைகளில் கூறுவார்கள்) கர்ஜித்து சுடமுற் பட்ட பொலிசாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்கவைத்ததோடு அவ்விடத்தில் பிரசன் னமாகியிருந்த எஸ்.பி.சுந்தரலிங்கத்தைப் பார்த்து நீர் பொலிசாரைக் கட்டுப் பாட்டில் வைத்திருக்காவிடில் பின்னர் பதில்சொல்லவேண்டி வரும் என்று எச்சரித்து நிலமையைக் கட்டுப்படுத்திய சம்பவத்தை வல்வைமக்கள் இன்றும் நன்றியுடன் நினைவிற் கொள்வர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பத்திரண அவர்கள் மீதும் இராணுவத்தினர்மீதும் யாழ் நீதிமன்றத்தில் காலஞ்சென்ற வ.இ.சிவஞானசுந்தரம் சார்பாகவும், மக்கள் சார்பாகவும் சட்ட மேதை ஜி.ஜி.பொன்னம்பலம், திரு.மு.சிவசிதம்பரம் வழக்குரை ஞராகச் செயற்பட்டனர். *1968* சித்திரை 8இல் நடந்த இந்தப் பயங்கரமான பழையநிகழ்வை நினைவூட்ட இன்றும் வல்வைச் சந்தியில் காலஞ் சென்ற சிவஞானசுந்தரம் அவர்களின் தந்தை திரு.வ.இராமசாமிப் பிள்ளை அப்பா அவர்களால் கட்டப்பட்ட நினைவு இளைப்பாறு மண்டபம் நிமிர்ந்து நிற்கிறது.

## 1969ம் ஆண்டு உடுவிலில் நடந்த தமிழரசுக்கட்சி மாநாட்டில்...

*1969* ஏப்பிரல் மாதம் 7,8ம் திகதிகளில் உடுவிலில் தமிழரசுக்கட்சியின் வருடாந்தமாநாடு நடைபெற்றது. அந்த மாநாட் டில் வல்வெட்டித்துறை தமிழரசுக்கட்சி இளைஞரணி சார்பில் இரண்டுநாட்களும் கலந்துகொண்டு அங்கு வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு தொண்டராக பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

கிழக்கு மாகாணத்திலிருந்து இராசதுரை, இராச மாணிக்கம் இப்படிப்பல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து சிறப்பு விருந்தினராக சிலம்புச் செல்வர். மா.பொ. சிவஞானம் அவர்கள் அழைக்கப்பட்டார். இவர் இந்திய சுதந்திரப்போராட்ட வீரரும் தமிழறிஞரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம.பொ.சி வல்வைக்கு விஜயம் செய்தபொழுது

சிலப்பதிகாரம் மீது மிகுந்த பற்றுக்காரணமாக சிலம்புச் செல்வர் என பட்டம் சூட்டி அழைக்கப்பட்டார். வல்வை வாலிப முன்னணி சார்பில் விடுத்த அழைப்பின் பேரில் வல்வெட்டித் துறைக்கு வந்து பிரபல வர்த்தகர் அ.சி.விஷ்ணுசுந்தரம் அவர்களின் இல்லத்தில் ஒரு இலக்கியச் சொற்பொழிவாற்றினார். அங்கு விருந்துபசாரம் நடை பெற்றபோழுது வல்வெட்டித்துறை இளைஞர்கள் ஆழ்ந்த தமிழறிவு உள்ளவர்களாக இருப்பதோடு அறிஞர்களை மதிக்கும் பண்பும் விருந்தோம்பும் மகிழ்ச்சி தருகின்றது என சந்திப்பில் கலந்துகொண்ட வல்வை இளைஞர் களை விழித்துக் கூறினார்.

## தமிழ்த்தலைவர்களின்
## வல்வை ஒற்றுமை மாநாட்டில் 7-02-1971

ஈழத்தமிழர்களிடையே பிரிவினை வளர்க்க அவர்க ளின் கட்சி அரசியல்களும் காரணங்கள் ஆகின. முதலில் இளைஞர் காங்கிரஸ், அதன்பின்பு இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி, திரு.சி.சுந்தரலிங்கத்தின் ஈழத்தமிழர் ஒற்றுமை முன் னணி, காவலூர் திரு.வ.நவரத்தினம் அவர்களின் தமிழர் சுயாட்சிக் கழகம், மலைநாட்டுத் தமிழர்களுக்கு இலங்கை இந்தியக்காங்கிரஸ் என்பன பிரதான கட்சிகளாக இருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தமிழினம் இழந்தது எத்தனையோ. 1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட வேளையில் தமிழ்க்கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் ஒன்று படுத்துவதற்காக பிரதம நீதியரசராகவும், இடைக்கால மகா தேசாதிபதியாகவும் பதவி வகித்த திரு.செ.நாகலிங்கம்(கியு.சி) அவர்கள் பெரும்பாடுபட்டார். அவரது முயற்சிகள் பயனளிக் காத நிலையில் கட்சிகள் தொடர்ந் தும் பிளவுபட்டு தங்களுக்குள் மோதிக் கொண்டனர்.

1972ஆம் ஆண்டில் தமிழினத்தின் சில அடிப்படை உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் புதியகுடியரசு யாப்பு அமுலுக்குவர இருந்தது. அந்த நிலையில் தமிழ் காங்கிரஸ்கட்சி, தமிழரசுக்கட்சி, ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய நான்கு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் வல்வைப் பெரி யார்களும் இளைஞர்களும் ஈடுபட்டு அதற்கான தேதியும் குறித்தா யிற்று. 7-02-1971 அன்று அந்தவாரப் பத்திரிகைச் செய்திகளெல் லாம் ஒற்றுமைக் கூட்டம் பற்றியதாகவே இருந்தது. அன்று தமிழரசு வாலிபமுன்னணியில் தொண்டனாக இருந்த நானும் ஏனையோரும் வல்வை வீதிகள் எங்கிலும் தலைவர்களை வரவேற்று வாசகங்க ளும் எழுதி, ஒற்றுமையை வலியுறுத்தி சுவரொட்டிகளும் ஒட்டி, பதாதைகளும் கட்டினோம். பிரபலவர்த்தகர் திரு.செல்லத்துரை. தங்க வடிவேல் அவர்களின் மாடிவீட்டில் இதற்கான ஒழுங்குகள் செய் யப்பட்டன. பத்திரிகை ஆசிரியர்களும் பெரும் திரளான மக்களும் வல்வையில் கூடினார்கள்.

பிற்பகல் இரண்டுமணியளவில் தலைவர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள் வரத்தொடங்கினார்கள். மக்கள் ஒவ்வொரு தலைவர் கள் வரும்போதும் கைதட்டி ஒற்றுமையை வலியுறுத்தி கோக்ஷம் எழுப்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.அ.அமிர்தலிங்கம், திருமதி.மங்கையர்க்கரசி.அமிர்தலிங்கம், திரு.மு.சிவசிதம்பரம், அடங்காத்தமிழர் திரு.சி.சுந்தரலிங்கம். சுயாட்சிக்கழக திரு.வ.நவரத்தினம், மற்றும்பல பாராளுமன்ற உறுப்பினர்களும், யாழ்மேயர் திரு.நாகராசா, பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு.ந.நடராசா, எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு.க. துரைரத்தின் உட்பட யாவரும் வருகைதந்தனர். நீண்டநேரக் கலந் துரையாடலின் பின்பு தமிழ் மக்களின் ஆகக்குறைந்த பட்சக்கோரிக் கையாக ஆறு அம்சக் கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டு அதில் யாவரும் கையெப்பம் இட்டனர்.

பின்னர் திரு.செ.தங்கவடிவேல் அவர்கள் வீட்டில் அளித்த இராப்போசனத்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது. பின்பு தந்தை செல்வா மூலம் ஆறு அம்சக்கோரிக்கை அரசிற்கு அனுப்பப்பட்டது. அப்போது பிரதமராயிருந்த திருமதி.பண்டாரநாயக்கவிடமிருந்து அதற்கான பதில்வராத நிலையில் திரு.செல்வநாயகம் பாராளுமன் றத்தில் தமிழ்மக்கள் இந்த அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்ள வில்லை என்றும், தனது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும், நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் அரசு தன்னுடன் போட்டியிட வாய்ப்புத் தருவதாகவும் கூறிவெளியேறினார். இரண்டரைவருடங்கள் கழித்து **06-02- 1975** இல் நடந்த இடைத்தேர்தலில் தமிழீழம்தான் தமிழ் மக்களின் இறுதி முடிவு என அரசுக்கும் வெளியுலகத்திற்கும் அறிவித்து தேர்தலில் நின்று அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார்.

அன்று ஏற்படுத்திய ஒற்றுமையால் **1977**ல் தமிழர் விடுதலைக் கூட்டணி மன்னார் தொடக்கம் பொத்துவில் வரை வட கிழக்கின் **18** தொகுதிகளை அறவழியில்வென்று முதல்தமிழ் எதிர்க் கட்சித் தலைவராக திரு.அ.அமிர்தலிங்கம் தெரிவுசெய்யப்பட்டு சர்வ தேசரீதியிலும் பின்னர் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுடனான ஒப்பந்தம் ஆகிய வற்றில் முக்கிய பங்கெடுத்து தமிழினப்போராட்ட வரலாற்றில் இடம் பிடித்தார். (இந்த ஒற்றுமை ஏற்பட முன்நின்றுழைத்த பெரியவர்கள் அமரர்கள் திரு.ச.ஞானமூர்த்தி, திரு.அரு.சபாரத்தினம், திரு.வேற் பிள்ளை ஆகிய மூவருமாவார்கள்.

## வேலணையில் கறுப்புக்கொடிப் போராட்டத்தில்... 1973

இலங்கை குடியரசான பின்னர் வடபகுதி வரும் அமைச் சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத்தெரிவிக்கும் போராட்டத் தில் ஈடுபடுவதாக அப்போதைய தமிழர்விடுதலைக் கூட்டணி முடிவு செய்தது. தீவுப்பகுதியான வேலணையில் அமைந்த பாடசாலையில் புதியகட்டிடத்தை அப்போதைய தபால்மந்திரி செல்லையா குமார சூரியர் திறந்துவைக்க விருந்தார். தெரிவுசெய்யப்பட்ட தொண்டர்களே பங்குபற்றக் கூடியதாக இருந்தது. வல்வை இளைஞர்களுக்கு தீவுப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கா.பொ.ரத்தினம் அவர்களிட மிருந்து, எமது பாராளுமன்ற உறுப்பினரூடாக அழைப்புக் கிடைத்தது.

*1973* தை முதலாம்திகதி எமது பா.உ திரு.க.துரைரெதத் தினம், திரு.ச.ஞானமூர்த்தி அப்பா, (தம்பி என்று நாம் அப்போது செல்லமாக அழைக்கும்) வே.பிரபாகரன் நான், கணபதிப் பிள்ளை விதானையார், குலநாயகம் உட்பட 75 இளைஞர்கள் இரண்டு தட்டி வானில் வேலணையில் திரு.கா.பொ.இரத்தினம் அவர்களின் வீடு சென்றோம். எங்களைக் கண்டவுடன் அங்கு இருந்த தலைவர்கள் சந்தோஷப்பட்டனர். எங்களெல்லோருக் கும் சிற்றுண்டி, தேநீர்வழங் கப்பட்டு கலந்துரையாடினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கா.பொ.இரத்தினம் ஊர்காவற்றுறை. கிளிநொச்சி
முந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்

அதன்பின் எங்களுடைய பெயர்கள் முகவரிகள் பாதுகாப்புக்காக எடுக்கப் பட்டன. கறுப்புக்கொடிகள் தரப்பட்டன.

பின்பு தலைவர்களான திரு.அமிர்தலிங்கம், திரு.மு.சிவ சிதம்பரம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு கூடிய யாவரும் அணிவகுத்து ஒரு பனங்கூடல் வழியாக சென்று கொண்டிருந்தோம். பாடசாலையை அண்மித்ததும் பாடசாலை திறப்புவிழாவை ஒழுங்கு செய்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களான அரசகை யாட்களும், அப்போதைய யாழ் பொலிஸ்அதிபரும் பொலிசாரும் துப்பாக்கிசகிதம் வழி மறித்தனர். பொலிசார் துப்பாக்கிரவைகளை நிரப்பி சுடுவதற்கு ஆயத்தம் செய்தனர். தமது பெல்ட்டுக்களை கழற்றி கையி லெடுத்து தாக்குவதற்கும் ஆயத்தம் செய்தனர்.

அன்றைய யாழ் பொலிஸ்அதிபர் திரு.ஆரியசிங்கா அவர்கள் திரு.அமிர்தலிங்கம் அவர்களிடம் தயவுசெய்து விழா மண்டபத் தினுள் வரவேண்டாம் எனக்கேட்டுக் கொண்டார். ஷநீங்கள் மந்திரி வரும்பாதையில் வேலணை பழைய பேருந்து வண்டி நிலையத்தில் நின்று உங்கள் எதிர்ப்பைக் காட்டுங்கள்; என்று பலதடவை வினய மாகக் கேட்டுக் கொண்டதன்பின்பு அவர் கூறிய இடத்தில் எதிரே நின்று "குமாரசூரியரே திரும்பிப்போ" எனக் கோஷமிட்டு கறுப்புக் கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிவிட்டுத் திரும்பினோம்.

வேலணை கறுப்புக்கொடிப் போராட்டமே பிரபாகரன் அறவழியில் கலந்துகொண்ட முதல்அறவழிப் போராட்டமும், தலை வர் அமிர்தலிங்கம் தலைமையில் அவர் கலந்துகொண்ட போராட்ட முமாகும். அன்று நடந்த சம்பவங்களைப் பார்த்ததும் தம்பி பிரபாகரன் அறவழியில் நம்பிக்கை இழக்கக் காரணமாக வும் இருந் தது எனலாம்.

## ரேவடிக்கடற்கரையில்
## தமிழர் கூட்டணியின் வெற்றிவிழா 1977

1977ம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி வெற்றிவிழாவை வல்வை ரேவடிக்கடற்கரை மைதானத்தில் கொண்டாட வல்வை வாலிபர்களும் ஊர்ப் பெரியவர்களும் ஏற்பாடு செய்தனர். விழாநடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் வவுனியா பா.உ திரு. தா.சிவசிதம்பரத்தின் இல்லத்தில் எதிர்க்கட்சித் தலை வரை தெரிவுசெய்யக் கூடி யிருந்த வேளையில் திரு.கனக. மனோகரனும் நானும் புகையிரத வண்டியில் சென்று எமது அழைப்பை உறுதிசெய்து திரும்பி யிருந் தோம்.

வீதிகள் எல்லாம் வரவேற்பு வளைவுகள், வாழை தோரணங்கள், மின்சார அலங்காரம் செய்யப்பட்டு வல்வை மாநகரம் விழாக்கோலம் பூண்டு காட்சியளித்தது. சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்ட வல்வை ரேவடிமைதானத்தில் மேடையில் திரு.ச.ஞானமூர்த்தி (அப்பா) அவர்கள் தலைமை யில் விழா ஆரம்பமாகியது. திரு.கனக.மனோகரன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட திரு.அமிர் அண்ணனையும் மற்றும் பா.உறுப்பினர் களையும் மைதானம் முழுவதும் பெரும்திரளான மக்களையும் கவி பாடிவரவேற்றார். அன்று திரு.அமிர்தலிங்கம் அவர்களுக்கு நான் அசோகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வெள்ளை) பூவினாலான பெரியதொரு மாலையை அணி விக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

திரு.அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின்பு உரையாற்றிய முதலாவது பொதுக் கூட்டமாக அது அமைந்திருந்தது. மறுநாள் அதிகாலைவரை விழா நீடித்தது. தலைவர்களுக்கும் வெளியூர்ப் பிரதிநிதி களுக்கும் இரவு விருந்து அருமைச்செல்வம்(பக்கர் அண்ணா) வீட்டில் வழங்கி உபசரிக்கப்பட்டது.

## 1981ன் மதுரை மாநாடும் மனம் நிறைந்த நினைவுகளும்

உலகத்தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கு ஈழத்து (ஈழத்தில் அவதரித்த தமிழ்முனிவர்) தனிநாயகம் அடிகள் ஆற்றிய பணிகளே, முதலாவது மாநாடு கோலாலம்பூரில் நடை பெற்றது. அப்போதைய மலேசியப்பிரதமர் துங்கு அப்துல். ரஹ்மானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரண்டாவது மாநாடு தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் முதலமைச்சர் சி.என்.அண்ணாத்துரை அவர்களின் தலை மையில் கலைஞர் கருணாநிதியின் வழிநடத்தலின் கீழ் பேரெழுச்சிவிழாவாக நடைபெற்றது. மூன்றாவதுமாநாடு பாரிஸ்நகரில் அரசியல் கலப்பின்றி அறிஞர்களின் ஆய்வரங்கமாக நடந்தது. யாழ்ப் பாணத்தில் 1974ல் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு அரசின் எதிர்ப்புக்குமத்தியில் மக்கள்விழாவாக பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது. அந்த மாநாடு நடை பெற்ற நாட்களில் வவுனியாவிலிருந்து வடபகுதி முழுவதுமே விழாக்கோலமாக திகழ்ந்தது. மாநாடு இறுதி நாளன்று ஐம்பதாயிரத் திற்கு மேற்பட்ட மக்கள் கூட்டம் மாநாட்டிற்கு வந்த அறிஞர்களை வழியனுப்ப மக்கள் திரண்டனர். சென்னையைச்சேர்ந்த பேராசிரியர் நைனர். முகம்மது தமிழின் இனிமைபற்றிப்பேச மெய்மறந்து சுவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்த மக்கள்மீது வெறிகொண்ட பொலிசார் மிருகத்தனமாக தாக்கினர். அப்போது மின்சாரக்கம்பிகள் அறுந்துவிழுந்ததின் காரண மாகவும் பொதுமக்கள் நெரிசலின்காரணமாகவும் மக்களில் பதி னொருவர் பலியானார்கள் ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

1980ன் டிசம்பரில் வர்த்தகக்கப்பலில் வேலைசெய்து விட்டு விடுமுறைக்கு திரும்பியிருந்தவேளையில் பத்திரிகை களில் ஜனவரியில் ஐந்தாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு தமிழக அரசால் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடத்தப் படுவதாக அறிந்தேன். மேலும் நான் சார்ந்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள்பலரும் எதிர்க் கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் குடும்பமும், எமது பா.ம.உறுப்பினரும் சிறப்புவிருந்தினராக செல்வதையும் அறிந்தேன்.



யாழ்ப்பாண தமிழாராய்ச்சி மாநாட்டில் 1974 ல்
பேராசிரியர் நைனர்.முகம்மது பேசும்போது.

நானும் பார்வையாளராக செல்ல விரும்பி, அவர்களுடன் செல்ல ஒழுங்கு செய்து ஆயத்தமானேன். நாட்கள் நெருங்க யாழ்ப்பாணம் புகையிரதநிலையம் சென்று மன்னார் ஊடாக அங்கிருந்து கப்பல் மூலமாக செல்வதற்கு பயணச்சீட்டுப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றேன். அங்கிருந்து ஜனவரி மூன்றாம்திகதி காலை மன்னார் துறைக்குச் சென்ற எங்கள் யாவரையும் மன்னார் பா.உ.திரு.சூசை தாசன் வழியனுப்பி வைத்தார். எல்லோரும் தமிழ்நாடு பெற்ற கணிதமேதை ராமானுஜம் அவர்களின் பெயரைத்தாங்கிய கப்பலில் நாம் ஏறினோம். எங்களுடன் வந்தவர்கள் பா.உ சிவ சிதம்பரம், க.பொ.இரத்தினம், வி.என்.நவரத்தினம், வீ.ஆனந்த சங்கரி, கோவை.மகேசன், ஈழவேந்தன், யாழ்ப்பாண மேயர் விஸ்வநாதன் குடும்பம். மற்றும் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் என ஐம்பது பேரளவில் வந்தனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.திருமதி.துரைரெத்தினம்(பா.உ), திரு.திருமதி.க.பொ.இரத்தினமும் நானும்



திருவரங்கம் கோயில் தங்கக் கோபுரத்தின் முன்னால்
நிற்பது கா.பொ.இரத்தினம் தம்பதியினரும் நானும்



சரஸ்வதிமஹால் நூல்நிலையத்தைப் பார்வையிட்டபோது.
படம் 2ல் ஈழவேந்தன், திரு.துரைரெத்தினம் தம்பதியினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வரத்தில் இறங்கியவுடன் எல்லோரையும் மாணவர் பேரவைத்தலைவர் திரு.ஜனார்த்தனம் மற்றும் அரசஊழியர்கள் யாவரும், சென்றவர்கள் யாவருக்கும் மாலையணிவித்து வரவேற்று புகைவண்டியில் மதுரைக்கு அனுப்பி வைத்தனர்.

## வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் வெளியீட்டு விழா -1997ல்

புலம்பெயர்ந்து கனடா ரொரொன்டோ மண்ணில் வாழ்பவர்கள் ஒருவகையில் முற்பிறப்பில் பல நன்மை செய்தவர்கள் என்று கூறினால் மிகையாகாது. வாரம் ஒரு விழா, கலைப்படைப்புகள் என்று ஏராளம்.

இவையனைத்தும் நம்மவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று எழுதினால் மிகையாகாது. அந்தவகையில் வல்வெட்டித் துறையைத் தாயகமாகக் கொண்ட திரு.நகுலசிகாமணி அவர்கள் நீண்டகால முயற்சியின் பயனாக எழுதி வெளியிட்டுள்ள 'வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்' அவ்வூர் மக்களிலும் பார்க்க ஏனையவர் களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமென்றே கூறவேண்டும்.

'வல்வெட்டித்துறை' ஊரின் வரலாற்றுத் தொகுப்புக் களை பல ஆண்டுகளாக தம் ஊரிலும் பின்னர் புலம் பெயர்ந்த நாட்டிலும் சேகரித்து அதனை நூல் உருவில் கொண்டுவந்து 1997 ஜூலை 26ம் திகதி சனிக்கிழமை வெளியிட்டுவைத்தார்.

இவ்வெளியீட்டு விழா ரொராண்டோ மரினாமண்ட பத்தில் "தந்தை செல்வா" அரங்கில் சட்டத்தரணி கனக.மனோ கரன் தலைமையில் கச்சிதமாக இடம்பெற்றது.விழா ஆரம்பம் முதலே மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம். திரு,திருமதி .சிதம்பரநாதன், திரு.திருமதி.ஜெயபாலன் தம்பதியினர் குத்து விளக்கேற்றினர். திருமதி.திருமறைச் செல்வி பத்மநாதன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி.ஆனந்தன் இயற்றிய தமிழ்தேசிய கீதத்தைப் பாடி மகிழ்வித்தார். செல்வன்.சந்திரசேகர்.நகுலசிகாமணி வரவேற்புரையாற்றி அனைவரையும் வரவேற்றார்.



திரு.திருமதி.சிதம்பரநாதன் தம்பதியினர் விளக்கேற்றினர்



எனது நண்பர் திரு.திருமதி.ஜெயபாலன் தம்பதியினர் விளக்கேற்றினர்.

13964

பேச்சாளர்கள் என்று பெரியபட்டியல் ஒவ்வொருவ ரும் குறிப்பிட்ட நேரத்திற்குள் தங்கள் கருத்துக்களை கூறி மலர்வெளியீட்டிற்கு உயிர்கொடுத்தார்கள். கலாநிதி.பாலசுந்தரம், சாமி.அப்பாத் துரை, சட்டத்தரணி கரிகாலன், சட்டத்தரணி த.ஸ்ரீபதி, சந்திர மோகன், ஈழநாடு ஆசிரியர் பரமேஸ்வரன் என பலரும் தமதுகருத் துக்களை வெளியிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி.திருமறைச்செல்வி.பத்மநாதன் பாடுகிறார்



திரு.கரிகாலன் நவரத்தினம் உரை தமிழ்த்தாய் வாழ்த்து ஆற்றினார்


செல்வர்கள். சௌமியன். நகுலசிகாமணி, எஸ்.சபேஷ் ஆகியோரின் வயலின் இசைநிகழ்ச்சி சபையோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தி யது. மற்றும் செல்விகள்.அனிதா, விஜிதா ஆகியோரின் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.



செல்வன்.சந்திரசேகர் நகுலசிகாமணி வரவேற்புரையாற்றுகிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.கனக மனோகரன்



திரு.ந.நகுலசிகாமணி



முன்நாள் நகரசபைத் தலைவர் எஸ்.சுந்தரலிங்கம்
முதல் பிரதி பெறுகிறார்.
முன்நாள் நகரசபைத் தலைவர் நடனசிகாமணியின்
மகன் நகுலசிகாமணியிடம் முதற்பிரதியைப் பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்விகள்.அனிதா இரத்தினம், விஜிதா இரத்தினம் அவர்களின் நடனநிகழ்வு



செல்வன். சௌமியன்.நகுலசிகாமணி,
செல்வன்.எஸ்.சபேசஷ் ஆகியோரின் வயலின் இசைநிகழ்வு

கலாநிதி.பாலசுந்தரம் உரை ஆற்றும்போது இது போன்ற நூல்கள் பல்வேறு மக்களிடமிருந்தும் வெளிவரவேண்டும். திரு.நகுல சிகாமணியின் இம்முயற்சி வரவேற்கப் படவேண்டிய விஷயமென்றும் நம் ஆய்வாளர்கள் சிலர் விட்டதவறுகள் முன்னர் பல்வேறு பிளவுகளை ஏற்படுத்தி இருந்தன. உண்மை யிலேயே தென்னகத் திலிருந்து வந்தவர்களினால் ஏற்பட்ட ஊர்ப்பெயர்கள்தான் சில வடக்கில் உள்ளன என்பதை நிரூபிக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக இருந்ததாகவும் கூறினார்.

இந்நூலின் முதல்பிரதியை வல்வெட்டித்துறை முன்நாள் நகரசபைத் தலைவர் எஸ்.சுந்தரலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அவரைத் தொடர்ந்து கமலாபெரியதம்பி மற்றும் ஊர் பெரியவர்கள், வெளியூர் நண்பர்கள் யாவருக்கும் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டது.



திருமதி வல்வை எழுத்தாளர் கமலா.பெரியதம்பி சிறப்புப் பிரதியை பெறுகிறார்

நிகழ்சி நிறைவில் நகுலசிகாமணி நன்றி தெரிவித்துப் பேசுகையில்தாம் இந்நூலைத் தயாரிக்க சேகரித்த விபரங் கள்பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டார். சிற்றுண்டியும் குளிர்பானமும் வழங்கி உபசரித்தனர்.



திருமதி.உமா விஜிதாவுக்கு நினைவுப்பரிசு வழங்கினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நுழைவாயில்

*ஒரு பிரதேசத்தின் வரலாறு ஒரு நாட்டின் வரலாறாகும். தான் பிறந்த மண்ணின் வரலாற்றை சரியாகப் பதிந்து வைக்காத சமுதாயம் தனது வரலாற்றை இழந்த சமுதாயமாகிவிடும். ஆய்வுகள் தகவல்கள் பழம்பெரும் நூல்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். ஈழத்தமிழர் தந்தை செல்வா வல்வையிலும் ஈழத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் எம்மைவிட்டு நீங்கும்வரை 1977ம் ஆண்டு வரை சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். யாரிடமும் அவரது பேச்சு ஒலிநாட கிடையாது. ஆனால் இன்று எமது போராட்ட வரலாற்றை புகைப்படம் வீடியோப் படமாக பேணிப்பாதுகாப்பது கௌரவத்திற்கு உரியவர்கள்.*

*ஆனால்! இது எமது பிறந்த மண்ணின் காவியம். நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற சொத்து. பல அரசுகளுடைய மூர்க்கத்தனமான அடக்குமுறைகளை பல நூற்றாண்டுகளாக போராடிய மக்களின் வரலாறு. ஈழத்தமிழர் தாயகத்தின் ஏனைய பகுதிகளுக்கில்லாத ஒரு சிறப்பினை அதற்கு வழங்கி. அதுவே ஈழத்தமிழரின் முழு நிலையிலான தலைவிதியை நிர்ணயிக்கும் ஒரு பொறுப்பினையும் ஏற்றிருக்கும் சமூகத்தின் கதை இது. எதிர் காலத்தில் மழுங்கடிக்கப்பட்டு வெறும் மனப்பதிவுகளாக மட்டும் இருந்துவிடக் கூடாது. புதிய பரம்பரையினருக்கு தெரிந்து கொள்வதற்காக நிலைப்படுத்த வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட நூல்.*

*வல்வெட்டித்துறையின் வரலாற்றுச் சுவடிகளின் முதல்பதிப்பு 1997ம் ஆண்டில் வெளிவந்த பின்பு பூமிப்பந்தின் பலபாகங்களிலும் வாழும் எனது மண்உடன் பிறப்புக்களினதும், ஆர்வலர்களினது கரங்களிலும் தவழ்ந்து உவந்தும் காய்த்தும் விமர்சனம் செய்துள்ளனர். பல அன்பர்கள் கடிதமாகவும் நீண்ட கட்டுரை வடிவிலும் கூடவே நூலாகவும் அறியத் தந்தார்கள். அதுவே ஆக்கிய எனக்கு பெறுமதியானது. எல்லோருக்கும் நன்றி வரலாறு முடிவதில்லை. இரண்டாம் பதிப்பில் கடந்த ஒன்பது வருடம் பலவற்றைத் தேடி. இணைத்துள்ளோம் என அடக்கத்துடன் அறியத்தருகின்றோம்.*

*இந்நூலை எமது 25வது வருட திருமணநிறைவு நாளில் வெளிக்கொணர பணியாற்றிக் கொண்டிருந்த நேரம் வரலாற்று ஆவணக்காப்பகத்திற்கு பல வழிகளில் உதவி புரிந்தும் தமிழ் ஊர்ப்பற்றுடன் வாழ்ந்து எவ்வளவோ நிலைநிறுத்த இருந்த வேளையில் எம்மை விட்டு வரலாற்றுக்கே வரலாறாகிவிட்ட எமது இரு கண்களாகவும், எமது வாரிசுகளாகவும், எமது செல்வங்களாகவும் இருந்த செல்வர்கள் ந.சந்திரசேகர். (சந்துரு). ந.சௌமியன் (சுமி) ஆகியோருக்கும். யாழ்கோட்டை சமரில் மாவீரரான செல்வன் யோகசிகாமணி ராகவன் ஆகிய மூன்று சகோதரர்களுக்கும் இம்மாபெரும் நூலை சமர்ப்பிக்கிறோம்.*

*காடுகளில் மலைச் சோலைகளில் கபிலப்புலவன் கண்டறிந்து குறிஞ்சிப் பாட்டில் கோடிட்டுக்காட்டியுள்ள மலர்களையெல்லாம் பறித்தெடுத்து எம் மனம் பறித்த வல்வை வரலாற்றுச் சுவடுகள் மீது மாரியெனப் பொழிந்து மீண்டும் உங்கள் கைகளில் தவழவிடுவதில் வரலாற்றுக் கடமையாகக் கொள்கின்றோம்...*

*நன்றி*

**இவ்வண்ணம்**
**வல்வை ந-நகுலசிகாமணி**
**உமா நகுலசிகாமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை



நண்பர் நகுலசிகாமணி யாழ்ப்பாணத்தின் கேந்திர மான வல்வை நகரைப்பற்றி ஒரு நூல் வெளியிடுவதைப் பாராட்டு கின்றேன். வல்வை இலங்கையின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்றது.

1938ம் ஆண்டு அமெரிக்காவிற்கு அன்னபூரணி என்ற கப்பலை இயந்திரம் இன்றிச் செலுத்திச் சென்ற பெருமை வல்வைப் பெரியார்களுக்குண்டு. அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுடைய போராட்டங்களில் முக்கியமான பல நிகழ்ச்சிகள் வல்வையில் நடந்ததென பலரும் அறிவர். 1956ல் இலங்கையின் ஆயுதப்படை யினர் தமிழ் மக்களை அடக்குவதற்கு யாழ்ப் பாணத்தில் பல இடங்களுக்குச் சென்றபொழுது வல்வைக்கும் வந்தார்கள். வல்வை மக்கள் ஆண்களும் பெண்களும் ஆயிரக் கணக்கில் திரண்டு அப்படைக்கு முகம்கொடுத்தார்கள். அவர் களுடைய ஒற்றுமையையும், ஆர்வத்தையும், துணிச்சலையும் பார்த்த கேணல்.சேரம் வல்வைக்குள் பிரவேசிக்காமல் வேறு வழியாகச் சென்றுவிட்டார். 1961ல் சத்தியாக்கிரகத்தை தந்தை செல்வா அவர்கள் ஆரம் பித்துவைத்த கட்டம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. 1968ம் ஆண்டு வல்வெட்டிப் பொலிசாருடைய அட்டூழியத்தைக் கண்டித்து ஒரு பொதுக் கூட்டம் நடத்திய பொழுது அக்கூட்டத்தைக் கலைக்க வந்த பொலிசார் தியாகி சிவஞானசுந்தரத்தைப் படுகொலை செய்தார்கள். இவ்வேளை யில் மக்கள் விசேடமாக இளைஞர்கள் எதிர்த்துத் துப் பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு பொலிசார் காயமடைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக அரசினுடைய மூர்க்கத்தனமான அடக்குமுறை களை எதிர்த்துப் போராடிய துணிச்சல்மிக்க வாலிபர்களைக் கொண்டது தான் வல்வை நகரம்.

**1972**ம் ஆண்டு ஸ்ரீமாவோ அரசு ஆக்கியபுதிய அரசியல மைப்புத் திட்டத்தில் தமிழ்மக்களை முற்றுமுழுதாகப் புறக் கணிக்கப் படுவதை எதிர்த்து தமிழர்களின் ஒற்றுமையை உருவாக்கவேண்டு மென வல்வைப் பெரியவர்களாகிய வேற் பிள்ளை, சபாரட்ணம் ஞானமூர்த்தி அப்பா போன்றவர்கள் முன் நின்று அன்று செயற்பட்ட தமிழ்க்கட்சிகளின் தலைவர்களை ஒன்று சேர்த்து தமிழர் கூட்ட ணியை உருவாக்குவதற்கு முன்னின்றுழைத்தார்கள். அவர்கள் இட்ட வித்து பெருமரமாகி வடக்குகிழக்கு தமிழ் மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணி யாகத் திகழ்கிறது. இந்தத் தியாகத்துணிவு வரலாற்றில் வந்த வர்கள்தான் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள். அதனைப் பின்தொடர்ந்து வல்வை இளைஞர்களும் வடக்கு கிழக்கு மாகாணத்து தமிழ் இளைஞர்களும் தமிழ்மக்களின் உரிமையை வென்றெடுக்க ஆயுதம் தாங்கிப்போராடுகிறார்கள். இவர்கள் வல்வை யைச் சேர்ந்தவர்கள் என்றகாரணத்தால் ஆயுதப்படையினரும் விமானப் படையினரும் வல்வையை குண்டுவீசியும் ஷெல் தாக்கு தல்களினாலும் அழித்துக் கொண்டுவருகிறார்கள். ஆனால் வல்வை மக்கள் மனம் தளராமல் தமிழ்மக்களுடைய உரிமைப் போராட் டத்திலும் தமது பங்கைச் செலுத்திவருகிறார்கள். இப்படியாக துணிச்சலும் தமிழார்வமும் தியாக உணர்வும் கொண்ட மக்களைக் கொண்டதுதான் வல்வை நகரம்.

நமது தமிழ்மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் இயக்கம் நிச்சயம் வெற்றிபெறும். அந்த வெற்றியில் வல்வை மக்களுடைய பங்களிப்பு மிகவும் பெரியது. தமிழினம் முழுவதும் வல்வை மக்களை நன்றியுடன் போற்றிப் பாராட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலைப் பொருத்தமாக நண்பர் நகுலசிகா மணி எழுதுகிறார். ஏனென்றால் இந்த நடவடிக்கைகளில் எல்லாம் அவர் முக்கியபங்குகொண்டவர். வல்வையின் சரித்திரத்தை நன்றாகறிந் தவர். எனவே இவரது முயற்சிவெற்றி பெற பாராட்டுகிறேன்.

வணக்கம்

*07-07-1997*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

### மாவை சேனாதிராஜா
### (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



வல்வெட்டித்துறை தனியானதொரு பண்பாட்டின் உறைவிடம். வல்லவர்களின் துறை வல்வெட்டித்துறை என்றால் மிகையாகாது. திரைகடல் ஓடியும் திரவியம்தேடுவதில் வல்லவர் கள் மட்டுமல்ல வரலாற்றில் பல தசாப்தங்களுக்கு முன்னரே கப்பல்கட்டும் தொழில் நுட்பத்தில் தலைசிறந்தோரையும் அத்தகைய கப்பலில் அமெரிக்கா வரை நெடுங்கடற்பயணம் செய்த வீரதீரச்செயல்களைச் சாதித் தோரையும் கொண்டதுதான் வல்வை பூமி.

*1960*களின் தொடர்ச்சியாய் இருபது ஆண்டுகளுக்கு மேல் வல்வை மக்களுடன் குறிப்பாக இளைஞர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. அதனைவிட எனது நீண்டகாலச் சிறை வாழ்க் கையில் வல்வை தந்த தியாகிகள் உடனிருந்தவர்கள் பலர் இன்று எம்முடன் இல்லை. தமிழின விடுதலைக்கு உயிர் கொடுத்தவர்கள் அத்தியா கச் செம்மல்கள். அந்த பசுமையான நினைவுகள் இதயத் தில் இன்றும் வாழ்கின்றன.

சொந்தவாழ்க்கையிலும் சரி, பொதுவாழ்க்கையிலும் சரி அந்தமக்களிடம் தனியானதொரு மண்வாசனை மிளிரத்தான் செய் தது. அன்பு, நட்பு, விருந்தோம்பல் எனும் சிறந்திருந்த அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்க ளிடம் எந்தவொரு செயலிலும் ஒரு இலட்சியப்பிடிப்பும் திடசங் கற்பமும் விஞ்சியிருந்ததை அளவிடலாம்.

1972ல் தமிழ் இனவிடுதலை வரலாற்றில் ஓர் ஜனநாயக அரணை தமிழர் விடுதலைக் கூட்டணியை கட்டியெழுப்புவதில் வல்வைச் சான்றோர் ஆற்றிய பணி மகத்தானது. 1977ல் பொதுத் தேர்தலிலும் கூட சாதி பேதங்களுக்குச் சாவுமணி அடிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதில் குறிப்பாக வல்வை இளைஞர்கள் ஆற்றிய பணியை மறந்துவிட முடியாது. இன்று உலக வரைபடத்தில் வல்வெட்டித்துறை முத்திரை பதித்துள்ளது என்றால் ஒரு முக்கிய காரணம் உண்டு. அதுதான் இலங்கைத் தமிழின விடுதலைப் போருக்குத் தலைமை கொடுத்து சாதனை படைத்துள்ள வரலாறாகும்.

தம்பி நகுலசிகாமணி எங்களை நினைத்து வாழ்த்துச் செய்தி கேட்டு எழுதியமை மனதில் நெகிழ்ச்சியையும் ஆதங்கத் தையும் ஏற்படுத்தியது. நாம் ஒன்றாக இருந்து பணிபுரிந்த காலங் களை எண்ணும்போது கண்கள் குளமாகின்றன. உங்களின் வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் வரலாற்றுப் படைப் பாக வெளிவரும் என்று நம்புகிறேன். வரலாறு தொடரும் மலர் மணம் கமழும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

வணக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் வயித்தியலிங்கபிள்ளையின் (100)நூற்றாண்டு விழாவும்

## இரண்டு பழம்பெரும் நூல்களுக்கு மறுவாழ்வு

இயற்றமிழ்ப் போதகாசிரியர் அவர்களின் நூறாவது (சிரார்த்த) ஆண்டுவிழா சட்டத்தரணி கனக.மனோகரன் தலைமையில் 27-4-2002 அன்று கனடா கந்தசுவாமி ஆலயத் திருமணமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் யாழ்ப் பாண வைபவகௌமுதி (1918), அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தரலங்காரமூலமும் ச.வயித்தியலிங்கபிள்ளை எழுதிய உரை யும் (1912) மீள் பதிப்புகள் வெளியிடப்பட்டன.






மண்டப வாசலில் நுழைந்ததும் பூக்கோலத்தின் நடுவே புலவரின் படமும், நிறைகுடமும் வந்தோரை வரவேற்றன. பலதரப்பட்ட பிரமுகர்களால் மண்டபம் நிறைந்து காணப்பட்ட இவ்விழாமேடை கனடா தேசியக்கொடியும், நெய்தல் நிலமான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மக்களின் பாரம்பரியமான கப்பல் தொழிலை நினைவுகூரும் வகையில் கப்பல் கொடிகளா லும் (international code flags) அலங்கரிக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் ஒரு பகுதியில் வல்வையின் வரலாற்றுப் புகைப் படக் கண்காட்சியும் எல்லோரையும் கவரும் வகையிலிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் வெளியீட்டிற்கு வருகை தந்தவர்கள்



கனடா கந்தசாமி கோயில் குருக்கள் அவர்களால் நகுலசிகாமணி கௌரவிக்கிக்கப் படுகிறார், கனடா கந்தசாமி ஆலயநிர்வாகசபைத் தலைவர் எஸ்.பொன்னுச்சாமி

நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் பிள்ளையவர்கள் எழுதிய கந்தரலங்கார விரிவுரையானது இக்கால சைவசமய வழி பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கும்பொக்கிஷ நூலாகும். அன்பர்கள் யாவரும் பூஜை அறையில் பாதுகாப்பாக வைத் திருக்கும் நூல்க ளோடு இந்நூலையும் சேர்த்து பாதுகாப்பாக படித்துப் பெருவாழ்வு பெறுவீர்களாக என தமது ஆசியுரையில் தெரிவித்தார்.

வரவேற்புரையை திரு.விஷ்ணு.செல்வம் நிகழ்த்தினார் அடுத்து திரு.கனக.மனோகரன் அவர்கள் தமிழர் நாம் எம் வரலாற்றை பாதுகாக்கத்தவறிவிட்டோம். சங்கிலி மன்னன் சங்கிலி குமாரன் எப்போது இறைமையைப் பறிகொடுத்தனர் என்பதில் எல்லாம் குழப்பம். இந்நிலையில் நண்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலசிகாமணி இவ்விரு நூல்களையும் வெளியிடுவது வரவேற்கத்தக்க விடயம் என்று கூறியதுடன், நண்பனின் மனைவி போதகாசிரியரின் நான்காவது வழித்தோன்றல் என்று உறவுத்தொடர்பையும் கூறி தமது தலைமை உரையை சுருக்கமாக முடித்தார். பின் அடுத்தபேச்சாளரை அறிமுகப்படுத்தி அழைத்தார். இவர் முற்றும் துறந்த அடிகளாய் இருப்பவர். ஆனால் தனிநாயகம் அடிகளைப்போல், விவேகானந்தர் அடிகளைப் போல் முத்தமிழைத் துறக்காமல் தமிழுக்கு பெரும் தொண்டாற்றுபவர் எனக்கூறி மேடைக்கு அழைத்தார்.

பேராசிரியர் அருட்திரு.ஜோசப்.சந்திரகாந்தன் அவர்கள் இந்நூல்கள் வாசிப்பதற்காக, கற்பதற்காக, கிரகிப்பதற்காக, மனித ஞானத்தால் உட்பெறுவதற்காக எழுதப்படுபவை என்று தனது உரையை ஆரம்பித்தார். ஆசுகவி வேலுப்பிள்ளை அவர்கள் அறி வுத்திறனோடு ஆராய்ந்துள்ளார். வயித்தியலிங்கம் அவர்களின் கொள்கை தமிழ்மக்கள்மீது கொண்டிருந்த பற்றும் அன்பும் மிக உயர்வாக இருந்துள்ளது. இவர் தமிழையும் சமுதாயத்தையும் ஆழமாக அறிந்து ஆற்றிய தொண்டினையும், நுணுக்கமாக தனது உரையில் ஆராய்ந்து கூறினார்.

மேலும் அடிகளார் தமதுரையில் தாயகத்தை விட்டு தமிழர்கள் அதிகமாக வாழும் நாடு இது. இங்கு கலாச்சாரம் மொழியின் சிறப்புகள் பண்பாட்டின் தூரங்கள், இலக்கியச் சிறப்புகள், இலக்கியத்தின் பெருமைகள், ஆழமாக ஆணித்தர மாக ஆரம்ப காலத்திலேயே நிலைநாட்டப்படவேண்டும். பாட சாலை மாணவர்களாலும், பல்கலைக்கழக மாணவர்களாலும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும் கூறினார்.

தமிழ்மக்களைப் பொறுத்தளவில் காலத்திற்குக் காலம் அவர்களின் தேவை கருதி ஆயிரக்கணக்கான நூல்கள் வெளி வந்தாலும், பயன்தரும் அரிய நூல்கள் இன்னும் இளைய தலை முறையினருக்குக் கிடைக்காமல் போகின்றன. எனவே அவ்வாறான பழைய நூல்களை பாதுகாத்து அவ்வப்போது மறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரம் செய்ய வேண்டும் என்றும், இன்று திரு.வே.பிரபாகரன் அவர்களைப்பெற்ற வல்வைமண்ணில் முன்தோன்றிய பேரறிஞருக்கு விழாவெடுப்பது பாராட்டத்தக்கது என்றார்.

உதயன் பத்திரிகை ஆசிரியர் தமதுரையில் மண்டபம் நிறைந்த மக்களைக் காணும்போது நண்பர் நகுலசிகாமணியின் நல்ல குணாம்சத்தைக் காட்டுகின்றது என்றும், பேராசிரியர் சந்திரகாந்தன் அவர்களினுரையை மேற்கோள்காட்டி யாழ்ப் பாண வைபவகௌமுதியின் சிறப்புகள் பற்றியும், வயித்திய லிங்கம் பிள்ளையின் சிறப்புகள் பற்றியும் குறிப்பிட்டார்.

சுபாசினி நடராசா என்ற மாணவி முருகன் பதம் நடனம் ஆடினார். அதனைத் தொடர்ந்து உலகத்தமிழ் படைப்பாளிகள் கழகத்தைச் சேர்ந்த திரு.தங்கவேல் அவர்கள் ஆசுகவி.வேலுப் பிள்ளை அவர்களின் சிறப்பைப் பற்றியும் யாழ்ப்பாண வைபவ கௌமுதி நூல் பற்றியும் உரையாற்றினார். இவரைத் தொடர்ந்து முன்நாள் மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சூசைதாசன் யாழ் வரலாறுபற்றி நீண்டதொரு கருத்தாழம் மிக்க உரையை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து பல்கலாச்சார ஆலோசகர் மகாஜனா முன்நாள் அதிபர் திரு.கனகசபாபதி அவர்கள் இயற்றமிழ்ப் போதகாசிரியர் காலத்தில் யாழ்ப்பாண சமூகத்தின் வேறுபாடுகளைக் களைவ தற்காக நாவலருக்கு எதிராக சாதி நிர்ணய புராணத்தை ஆராய்ந்து தனது கருத்தை தெரிவித்தார். திருமதி கலாநிதி.பார்வதி கந்தசாமி அவர்கள் இயற்றமிழ் போதகாசிரியர் அவர்களின் இலக்கிய சேவை பற்றியும் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பிள்ளையவர்களைப்பற்றி ஆராய்ந்து எழுதிய நூல்பற்றியும் எடுத்துரைத்தார்.

திரு.தம்பையா.சிறிபதி (கனடிய சட்டத்தரணி) போதகாசிரியர் சமயத்திற்காற்றிய தொண்டுபற்றி எடுத்துரைத்தார். வல்வெட்டித் துறைக்கு சேவை செய்யும் நண்பன் நகுலசிகாமணி அவர்களுக்கு வல்வெட்டித்துறை சமுதாயம் என்றும் கடமைப் பட்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசுகவி வேலுப்பிள்ளை அவர்களின் பேத்தி திருமதி. இராஜேஸ்வரி சிவலிங்கம் அவர்களுக்கும், பிரபாகரன் அவர் களின் சகோதரி வினோதினி.ராஜேந்திரம் ஆகியோருக்கு யாழ்ப் பாண வைபவ கௌமுதி நூலையும், மற்றும் வயித்தியலிங்கம் பிள்ளையவர்களின் பூட்டப்பிள் ளைகளான னுச.எஸ்.சிதம்பர நாதன், வி.இந்திரசிகாமணி (கனடிய சட்டத்தரணி) சுந்தரலங் கார நூலை முதற் பிரதி களாகவழங்கப்பட்டன. திருமதி.இரா ஜேஸ்வரி தனது பேரன் அந்தக் காலத்தில் கடல்கடந்து மலேசியா நாட்டிலும் புகழ்பெற்று விளங் கினார் என்றும் ஒடியல்கூழ்பற்றி பாடியபாடலையும் பாடிக்காட்டி இறுதியாக கவியினால் விழாக்குழு வினரையும் பாராட்டினார்.

திரு.த.சிறீஸ்கந்தராஜா, திரு.வயிரமுத்து திவ்விய ராஜன், திரு.க.அழகையா, திரு.எஸ்.சிவசோதி, செல்வன். கீர்த்தனன். திவ்வியராஜன் ஆகியோர் பங்குபற்றி இசைத்த கீதங்கள், நெய்தல் நிலத்துடன் தொடர்புடையனவாக இருந்ததுடன் மண்டபத்தில் கூடியிருந்த சபையோர்களால் தாளமிட்டு பாடும்வகையில் வரவேற்பைப் பெற்றிருந்தது. செல்லரித்திருந்த நூலை சீர் படுத்தித் தந்துதவிய திரு. சாவையம்பதி இ.சுப்பிரமணியம் அவர்களுக்கும் தமிழ் சமய இலக்கிய சேவைக்காக திரு.கனக. மனோகரன்(சொல்லேந்தி) அவர்களுக்கும் கலைப்பணிக்காக திரு.வை.திவ்வியராஜன், திரு.த.சிறீஸ்கந்தராஜா, அவர்களுக்கும் இயற்றமிழ்ப் போதகாசிரியர் நூற்றாண்டு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது. இறுதியாக திரு.ந.நகுலசிகாமணி பல சிரமங் களுக்கு மத்தியில் இவ்வாறான பணியாற்றுவதையிட்டு கனடா கந்தசுவாமி ஆலயத்தின் சார்பில் சிவசிறி நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களாலும் கோயில் நிர்வாக சபைத்தலைவர் திரு. எஸ்.பொன்னுச்சாமி அவர்களாலும் கௌரவிக்கப்பட்டார். திரு.நகுலசிகாமணி நன்றி உரையாற்றியதுடன் விழா இனிது நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தநிறுத்தம் நடைபெற்ற காலத்தில் கனடாவில் இயங்கும் வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தின் ஒளிப்படக் கண்காட்சியும் நூல்களின் அறிமுகமும் வல்வை அ.மி.பாடசாலையில் 2004இல்

வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தினரின் நூறு வருடங் களுக்கு மேற்பட்ட கடலோடி வணிக வரலாற்றின் முக்கியத்துவம் வாய்ந்த கருவிகளும் மற்றும் சமய சமூக அரசியலில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஒளிப்படங்களாகவும் சரித்திர சம்பவங்கள் இடம்பெற்ற நூல்கள் அறிமுகமாகவும் வல்வை அ.மி.பாடசாலை மண்டபத்தில் 18-07-2004 அன்று சிறப்பாக நடைபெற்றது.

கண்காட்சியை எமது பிள்ளைகள் சந்துரு, சௌமியன் இரு வரும் சிறப்பாக ஒழுங்குபடுத்த, வல்வை மாவட்ட வைத்திய அதி காரி திரு.க.மயிலேறும்பெருமாள், சிதம்பரா உதவி அதிபர் செல்வி. ஞா.மரிசிலின் பிள்ளை ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். இதனைத் தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அ.மி.பாட சாலை, மற்றும் சிதம்பரா, சிவகுரு, மகளீர் ஆகிய பாடசாலை மாணவர்கள் பார்வையிட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.சிவாஜிலிங்கம், முத்துமாரிஅம்மன் ஆலய பிரதம குரு சோ.தண்டபாணித்தேசிகர், சட்டத்தரணி சோ.காண் டீபன், ஆசிரியர்கள் ஊர்ப்பெரியவர்கள் வருகைதந்து சிறப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வல்வெட்டித்துறை வரலாற்று ஆவண காப்பகம்

## கனடா

வல்வெட்டித்துறை வரலாற்று நூல்கள் அறிமுகமும்

படக்காட்சியும்

இடம்:- அமெரிக்கமிசன் பாடசாலை
வல்வெட்டித்துறை

**காலம்: (18.7.2004) ஞாயிற்றுக்கிழமை**

**காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை**

வல்வையின் வரலாற்று பழைய நூல்களையும் வரலாற்றுப் புகைப்படங்களையும் இலவசமாக பார்வையிடுமாறு பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெணியம்மை
வல்வெட்டித்துறை

இப்படிக்கு
ந. நகுலசிகாமணி

அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr.மயிலேறும்பெருமாள் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்



முத்துமாரி அம்மன் ஆலயக்குருக்கள், திரு.மு.தங்கவேல் மற்றும் நாம்.

இளைய தலைமுறையினர் தமது முன்னோர்கள் தமக்கு விட்டுச்சென்ற வரலாற்றினை, சாதனைகளை ஆர்வத்துடன் பார்வை யிட்டு அதன் விளக்கங்களையும் கேட்டு அறிந்து குறிப்பு எடுத்துச் சென்றது அவர்களது முன்னேற்றத்தையும் ஆர்வத்தை யும் எடுத்துக் காட்டியது. அங்கு வைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான வரலாற்றுப் படங்களில் பழமைவாய்ந்த படங்களில் "பழைய அம்மன் ஆலய மும், நூற்றாண்டுகால கோபுரமும்" என்று ஒவ்வொருபடமும் ஒரு சிந்தனைத் துகள்தான். எழுத்தில் வடிக்கப்படும் நூற்றுக்கணக்கான பக்கங்களைஎழுப்பமுடியாத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு உணர்வலைகளை, ஒரு படம் ஒரு கணத் தில் எழுப்பவல்லது. ஒளிப்படங்களுக்கு இரண்டுவரிகளில் திருக் குறள்போல வெளிப்படுத்தியிருக்கும் திரு.கனக.மனோகரனின் இலக் கியத்தமிழை பலரும் பாராட்டினர்.




Dr.திருமதி.பரமசிவம், உமா.நகுலசிகாமணி



தி.சேந்தன், ந.சந்துரு, ந.சௌமியன்,Dr.கமலா பரமசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.சிவாஜிலிங்கம் (பா.உ), வ.ஆ.தங்கவேலாயுதம், நகுலன்



பொ.சிவானந்தம், குட்டித்தம்பி, ஆ.தங்கவேலாயுதம், நகுலசிகாமணி விளக்கிக் கூறுகிறார்

திரு.சிவாஜிலிங்கம் வரலாற்றுச் சுவடுகளைப் பாது காத்து பராமரித்து வைத்திருப்பது எமது இனத்தின் அடிப் படைத்தேவை எனக் குறிப்பிட்டிருந்தார்.

சிதம்பரா உயர்தர மாணவன் செல்வன் ந.உதயச்சந்திரன் வல்வை பற்றிய தகவல்களைத் தேடிக்கொண்டிருந்த எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப அதிர்ச்சியால் பலதகவல்கள் கிடைப்பதற்கு உதவிய இக்கண் காட்சியை மிகவும் ஆர்வத்துடன் பார்வையிட்டேன். என்று குறிப்பிட்டிருந்தார். ஹெலியன்ஸ் நாடக மன்றத்தின் கலைஞர் வெ.முத்துச்சாமி வல்வையின் அரும்பெரும் பொக்கிஷத்தினை பாதுகாப்பது பெரும் சேவை. அதிலும் அந்நியநாட்டில் (கனடா) எம்நாட்டின் பாரம்பரியம் பாதுகாக்கப்படுவது போற்றப்பட வேண்டிய தோர்செயல். வல்வையின் புகழ்சேர்க்கும் உங்களுக்கு நான் தலைசாய்த்து வணங்குகிறேன். ஒரு நாளில் இக்கண்காட்சியைப் பார்த்து நகரின் சிறப்புகளை அறியமுடியாது. பலநாட்கள் பார்த்தால் தான் நகரின் முழுவரலாற்றையும் அறியமுடியும். ஆகவே வல்வை வரலாற்றுக்கூடம் (நூதனசாலை) நிரந்தரமாக ஏற்படுத்தி மாணவர்கள் நாள் தோறும் பார்க்க வசதிசெய்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். யுத்தநிறுத்தம் காரணமாக அங்கு இருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களும் பார்வையிட்டனர்.

அ.மி.பாடசாலை அதிபர் திரு.செல்லத்துரை அவர்கள் நக ரின் வீரவரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட கண்காட்சியைப் பார்க்க சந்தர்ப்பம் ஏற்படுத்தியமைக்கு நன்றி தெரிவித்தார். கனடாவில் எம்மால் வெளியிடப்பட்ட "வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்", மீள்பதிப்புச் செய்யப்பட்ட எமது அதி உயர்வரலாறு அடங்கிய 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' கல்லடி வேலுப்பிள்ளை **1918**, அருண கிரிநாதர் அருளிச்செய்த கந்தரலங்கார மூலமும் இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வயித்திய லிங்கபிள்ளை எழுதிய உரையும் **1912**, யாழ்ப்பாண வைபவ மாலை-மாதகல் மயில்வாகனப்புலவர்-**1884** ஆகிய நூல்களை வரலாறு படிக்கும் மாணவர்கள் வாங்கிச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்துரு சௌமியனின் முதலாம் ஆண்டு நினைவாக 'வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்' 2ம் பதிப்பு வெளியீடு 2006 செப்டெம்பர் 23ம் திகதி ஸ்காபரோ நகரமண்டபத்தில் நடைபெற்றது.**





சந்துரு, சௌமி ஆகிய இருவரின் முதலாம் ஆண்டு நினைவு அன்று அதிகாலை ஒரு மணிக்கு அவர்கள் அகாலமரணம் அடைந்த அதே இடத்தில் பல நூறுக்கு மேற்பட்ட மாணவர்களால் பூக்கள், மலர் வளையங்கள் வைத்து இரங்கல் உரைகள் நிகழ்த் தினார்கள். இதில் சந்துரு, சௌமியனின் பெற்றோர்களும் உறவினர்களும் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் விடுதியில் நண்பர்களினால் உணவு சமைக்கப்பட்டு, பூசைசெய்து நினைவுகூரப்பட்டு வந்தவர்கள் அனைவருக்கும் உணவு வழங்கப் பட்டது.

அன்று மாலை ஸ்காபரோ சிவிக்மண்டபத்தில் ஆறு மணி முப்பது நிமிடமளவில் பெருந்திரளான மக்களுடன் பத்திரிகையாளர், எழுத்தாளர், வரலாற்று ஆர்வலர்கள், நண்பர் கள் முன்நிலையில் ரொராண்டோ தமிழியல் கல்வி நிதிக்காக சேர்.பொன்னம்பலம். அருணாசலம் அவர்களது வாழ்க்கை வரலாறு ***1853 - 1924***, "வல்வெட்டித்துறை வரலாற்றுச்சுவடுகள்" இரண்டாம்பதிப்பு ஆகிய இருநூல்களின்வெளியீடு திரு.அருட் செல்வம் கலையரங்கம் விஷ்ணு தலைமை தாங்க ஆரம்பமாகியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு.பத்மநாதன் சிதம்பரநாதன் வரவேற்புரை ஆற்றினார்.

செல்வி.மெலனி .ரட்ணம், திருமதி.சித்திரா.பீலிக்ஸ் ஆகியோ ரது இனியகுரலில் கனடிய தேசியகீதமும் தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பபட்டது. அமைதி வணக்கத்தின்பின் செல்வச் சந்நிதி பூசகர் திரு.பொன்.புவனேந்திரனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையுடன் குடும் பத்தின்சார்பில் திரு.பத்மநாதன் சிதம்பரநாதன் அவர்கள் ஆங்கிலத் தில் வரவேற்புரை நிகழ்த்தினார்.



நூல் விற்பனைமூலம் கிடைத்த $5000 பணத்தை தமிழ்ப்பணிக்குக்கையளித்தபோது




செல்வன் துஷ்ந்தனின் உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.பொ.கனகசபாபதி அவர்கள் பொன்னம்பலம் அருணாசலம் பற்றிய ஆங்கில நூல்பற்றி தமிழிலும், திருமதி. கலாநிதி குலமோகன், திரு.வணபிதா-ஜோசப் சந்திரகாந்தன் அடிகளார் ஆகி யோர் வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் நூலின் ஆரம்பம் முதல் இறுதிவரை சுருக்கமாக ஆய்வுரை நிகழ்த்தி பலரது பாராட்டைப் பெற்றனர். தமிழ் எழுத்தாளர் இணைய சார்பில் திரு.ஆர்.என். லோகேந்திரலிங்கம் (உதயன் பத்திரிகை பிரதமஆசிரியர்), கடந்த வருடம் இதே நாளில் பெருந்திரளான மக்கள் கூடி அஞ்சலி செலுத்தியதை நினைவு கூர்ந்து வல்வெட்டித்துறையின் படைப்புகளான இரு சகோதரர்களின் நினைவு நாளில் வல்வெட்டித்துறை தொடர் பான நூல்கள் வெளியிடப்படுவது சிறப்பிற்குரியது என்றும் அவர்களின் தந்தையின் வரலாற்று ஆவணக்காப்பத்தின் தொண்டினை பல ஆண்டுகளாக நன்கறிவேன் எனப்பேசினார்.


கனடிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபன திரு.இளையபாரதி, வாழவேண்டிய வயதில் இளம் சந்ததியில் இரு பிள்ளைகளான சந்துரு, சௌமி ஒரே குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பு ஒருவருடம் சென்றாலும் நாம் இன்னும் சோகம் மாறாமல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இங்கு இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருக்கிறோம். இந்த இரு நூல்களையும் அவர்கள் பெற்றோர்கள் ஆக்கியதோடு இதனால் வரும் நிதியை இங்குள்ள பல்கலைக்கழகத்தின் தமிழியல் கல்வி நிதிக்கு வழங்குவது என்பது மிகவும் பெறுமதிவாய்ந்தது. இது எல் லோராலும் செய்யமுடியாதவிடயம் என்றார். கீதவாணி சார்பில் திரு. கணபதி.ரவீந்திரன் (நாடகவேந்தன்) பேசும்போது தமிழ்த் தொழில் நுட்பக்கல்லூரியில் தந்தை நடத்திய வரலாற்றுக் கண்காட்சியில் எனக்கு தனது இருபிள்ளைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் செய்துவைத்தார். அவர்கள் இன்றும் என் கண் முன்னால் நிற்கின்றார்கள் என்றார்.

திரு.கனக.மனோகரன் பேசும்போது சந்துரு, செளமியனின் நற்பண்புகளையும் நல்ல பழக்கவழக்கங்களையும் நினைவுகூர்ந்தார். பின்னர், நகுலனின் உள்ளத்தில் இந் நூலைப் படைக்கும் எண்ணம் கருவாகி கால்நூற்றாண்டின் பின்னர் 1997ல் முதலாம் பதிப்பு வெளிவந்தது. இன்று 23-9-2006ல் கூடிய அர்ப்பணிப்போடு அயரா உழைப்பின் வெளிப்பாடுதான் இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. இந்த அற்புதவெளியீடு தமது புத்திரர்களுக்கு செய்து இருந்தாலும் அவரது பிள்ளைகள் இந்தநூல் உள்ளவரை நிலைத்துவாழ்வரென்று கூறினார். ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் திரு.பரமேஸ்வரன் சந்துரு, செளமியனை நினைவுகூர்ந்து வரலாற்றைப் படைப்பது மாத்திரமல்ல அதை எழுத்தில் வடிப்பதும் எளிதான காரியமல்ல. ஆனால் எதையுமே திண்ணியநெஞ்சோடும் திடம்கொண்டதோளோடும் சந்தித்துப் பழகிப்பபோன அந்த வல்வையின் மைந்தர்களில் ஒருவரான அண்ணன் நகுலசிகாமணி அவர்கள் வல்வையின் வரலாற்றுப் பின்னணியை, மக்களின்வாழ்க்கை முறையை, பண் பாட்டை, சமயப் பழக்கவழக்கத்தை ஈழத்தமிழர் அரசியலில் அவர்கள் போராட்டங் களில் வல்வையர் பங்களிப்பை இன்னும் பல்வேறு விடயங்களை ஆதாரத்தோடு தொகுத்து வழங்கி யுள்ளார். கருத்தில் படியும் வண் ணம் தீட்டியிருக்கிறார். அவர் பணி வாழ்க! என்றுகூறினார். திருமதி .சூசன்.றற்ரி, சென்ரேனியல் கல்லூரி ஆசிரியரும் குடும்பநண்பரு மாவார். இவர் தனக்கு “பத்துவருடங்களாக இவர்களையும் பிள்ளை களையும் நான் நன்கறிவேன். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் பயனடையும் நேரத்தில் இவர்களின் இழப்பு என்னையும் அதிரவைத்தது என்று தனது சிற்றுரையில் கூறினார். வீடு பத்திரிகை ஆசிரியர் த.சிவதாசன், தமிழன் வழிகாட்டி செந்தி, உலகத்தமிழர் படைப் பாளிகள்கழக திரு.வே.தங்கவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நக்கீரன்) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களான செல்வி. ஜோசப்.பீற்றர், செல்வன்.கு.அரிகரன், செல்வன்.சி.துஷ்யந், செல்வி.ரஞ்சிதா ஆகியோரும் சந்துரு, சௌமிய னோடு இருந்த நிகழ்வுகளை நினைவுகூர்ந்தனர்.

நூலைவடிவமைத்த சந்துரு.துரைராசா அவர்களுக்கு நினைவு சின்னம் வழங்கியதோடு சம்பவம் நடைபெற்று ஒரு வருடம் கடந்தபின் இன்நிகழ்வு நடைபெற்றபோதிலும் விழா வில் கலந்துகொண்டவர்கள் முகத்தில் சோகம் நிரம்பியிருந் ததைக் காணக்கூடியதாக இருந்தது.

நிகழ்ச்சியின் இறுதியில் திரு.நகுலசிகாமணி அவர்கள் நான் பட்டதாரியுமல்ல, ஆசிரியருமல்ல, முப்பத்தைந்து வருட மாக நான் தேடிய தேடல்களையும் ஆக்கங்களையும் இப்பொழுது நிறைவேற்றும் சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நன்றி. பேச்சாளர்களுக்கும் நன்றி, பத்திரிகையாளர்களுக்கும், வானொலி, தொலைக்காட்சி ஊடகத்தின ருக்கும் நன்றி, புத்தகத்தை கணினி அமைப்புச் செய்து தந்த காதல் மனைவிக்கும் நன்றி, வந்திருந்த சபையினருக்கும் நன்றி, இந்தப்புத்தகத்தை இரண்டாம் பதிப்பாக வெளிவர என்னைமட்டும் வாழவைத்த இறைவனுக்கும் சிறிய நன்றி, இந்தப்புத்தகத்தை வடிவமைக்க எனது மூத்த மகனின் பெயரைக் கொண்ட சந்துருவை அறிமுகப்படுத்திய வழி காட்டிய செந்திக்கும் நன்றி, எமக்கு இந்த நூலை எழுது வதற்கும் வெளியிடுவதற்கும் எல்லா விதத்திலும் உதவி புரிந்த அன்பர்களுக்கு மிகுந்த நன்றி. எமது செல்வர் களின் விருப்பத்திற்கிணங்க தமிழியல் கல்விக்கு நிதி வழங்க புத்தகம் வாங்கிய அனைத்து நண்பர்களுக்கும் நன்றி. தலைவர் அருட்செல்வம் விஷ்ணு அவர்களுக்கும் நன்றி என நன்றியுரை ஆற்றினார். செல்வன் கி.றொபின் ஆங்கிலத்தில் நன்றி உரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் சிற்றுண்டி, தேநீர் வழங்கப்பட்டு நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் இரண்டாம் பாகம்

## விமரிசனம் கி.செ.துரை

வல்வெட்டித்துறை வரலாற்றுச்சுவடுகள் என்ற நூலை கனடாவில் வாழ்ந்துவரும் திரு.வல்வை.ந.நகுலசிகாமணி அவர்கள் கடந்த 1997ம் ஆண்டு முதலாவது பதிப்பாக வெளியிட்டிருந்தார். இப்போது அதனுடைய இரண்டாவது பதிப்பு. மேலும் சில பல புதிய தகவல்களையும் உள்ளடக்கி வெளியாகியுள்ளது. மொத் தம் 170 பக்கங்களைக்கொண்ட இந்தநூல் கையில் எடுத் தவுடன் படித்து முடித்துவிடுமளவிற்கு ஆவலும் சுவையும் தேடலுமுள்ள சிறந்த நூலாக உள்ளது.

### நெஞ்சை உருக்கும் முதலாவதுபக்கத்தில்.

புத்தகத்தின் முதல்பக்கத்தில் கடந்த 2005ம்ஆண்டு வாட்டலூபல்கலைக்கழகத்தில் வைத்து வன்முறையாளன் ஒருவனால் படுகொலை செய்யப்பட்ட ஆசிரியருடைய இரு புதல்வர்களான சந்துரு, சௌமி இருவருடைய படங்களும், நடுவில் மாவீரர் ராகவன்.யோகசிகாமணி அவர்களுடைய படங்களும் இணைக்கப்பட்டுள்ளன. மூன்று சகோதரர்க ளுடைய படங்களைப் பார்த்ததும், வல்வை வரலாற்றிலி ருந்து அந்தத்துயர நினைவிற்குள்ளேயே மனம் போய்விடு கிறது. அதைவிடப் பெரியவிடயம், இந்த நூலை தனது செல்வர்களின் இழப்பிற்குப் பிறகும், அந்தத்தாயும் தகப்ப னும் இணைந்து வெளிக்கொண்டுவந்திருக்கும் மன உறுதி தான் பெரிதும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

நூலாசிரியரையும், அவரது பாரியாரையும் சென்ற ஆண்டு கனடாவில் சந்தித்தபோது அவர்களின் சோகமான அனுபவங்களை என்னால் வார்த்தைப்படுத்த முடியாமலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தது. இதுபற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பியுடன் பேசிய போது எமது பெரும் எதிரிக்குக்கூட இப்படி ஒரு துயரம் வரக்கூடாது என்று கவலையுடன் கூறியிருந்தார். அந்தச் சோகத்தின் நிலை அப்படியானது. அதுமட்டுமல்ல தனது இருபுதல்வர்களையும் பறிகொடுத்து யாருமின்றி நிற்கும் தாயின் சோகத்தை எப்படிப்பேசுவது. இருவருக்கும் ஆறு தல்தருவது இந்த நூலை வெளிக்கொண்டு வருவதுதான் என்று கூறினேன். இன்று அந்தநூல் எனது கையில் இருப் பதைப் பார்த்ததும் இதயம் கனக்கிறது.

முதலாவது இதழில் இருந்த முகவுரைகளோடு புதிய முகவுரை யையும் இணைத்து எழுதியுள்ளார். மொத்தம் 100 தலைப்புகளில் விடயங்களைத் தொகுத்துக் கொடுத்துள்ளார். திரு.பொ.சிவபெருமான் எழுதிய வல்வை கீதம் என்ற பாடலில் இருந்து ஆரம்பமாகிறது. அடுத்து வல்வையிலுள்ள 33 ஆலயங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்னர் அவை பற்றிய செய்திகள் அழகிய படங்களுடன் பதிவாகியுள்ளன. கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தில் இருந்து தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்வரை இந்த விளக்கம் இடம்பெறுகிறது. இடையிடையே அழகிய வர்ணப்படங்களும் இணைக்கப் பட்டுள்ளன. வல்வை இயற்றமிழ்ப்போத காசிரியர் ச.வயித்திய லிங்கம்பிள்ளை செல்வச் சந்நிதிமுருகன் திருப்பள்ளி எழுச்சியும் இதில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்திரவிழா தொடக்கம் ஆலயங்களின் சிறப்பு விழாக்களை எல்லாம் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

அடுத்து வல்வையின் வீரவரலாற்றைப் பேச ஆரம் பிக்கிறது நூல். ஆதியில் இந்த ஊரில் குடியேறியவர்கள் ஊர்காவலுக்காக இந்தியாவி லிருந்து வந்த போர்வீரர்களே என்று குறிப்பிடுகிறது. பின் கடந்த 385 வருடங்களுக்கு முன்னர் வல்வையில் நடைபெற்ற போரக்களக் காட்சியை யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் இருந்து தருகிறார். அன்று நடைபெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமோதலில் வல்வெட்டித்துறை குளக்கரையில் 1200 பேர் கொல்லப் பட்டனர். கி.மு 145- 101 வரை ஆட்சிசெய்த எல்லாளன் காலத்தில் யாழ்பாடியுடன் வந்த வல்லியத்தேவன் என்பவரால் வெட்டப்பட்டதுறையே வல்வெட்டித்துறை யாகும், என்றுகூறி பட்டினப்பாலையில், வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி நெய்தலொடு வந்த வல்வாய் பஃறி என்றபாடலை உதாரணம் காட்டி வல்வையின் வரலாற்றை சங்ககாலத்தோடு தொடர்புபடுத்துகிறார். பின்னர் மஹாவம்சம், சூளவம்சம் போன்றவற்றில் இடம்பெற்ற வல்வை பற்றிய செய்திகளையும் தருகிறார்.

அதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களை விளக்கி, கப்பலோட்டிகளின் பெயர் பட்டியலையும் வெளி யிட்டுள்ளார். கப்பல் கட்டும் தொழில், பிரபல மாலுமிகள், அமெரிக்காவிற்கு அன்னபூரணிக் கப்பல் கொண்டு சென்ற வரலாறு, முக்கியமான சாதனைகள் படைத்தோர், புலம் பெயர் தமிழர்களின் இன்றையநிலை என்று பெருந்தொகை யான தகவல்களை இணைத்து சிறந்த வரலாற்று ஆவண மாகத் தந்துள்ளார்.

இப்படியான முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டி யவையாகும். தான்பிறந்த ஊருக்கு என்னவரலாறு உள்ள தென்பதைத் தெரியாது வளர்ந்துவரும் இளைய தலைமுறைக்கு இது மிக அவசியம். வல்வை பற்றி புதிதாகவரவுள்ள நூல்களுக்கு இது அடிப்படையான ஆதாரம். நமது இளையோர் இன்றுள்ள அவசர உலகத்தினால் அடிபட்டு போய்விட்டாலும் ஒரு காலத்தில் மறுபடியும் தமது மூலங்களைத் தேடிப் பிடிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு வரும். அந்தத்தருணம் இந்நூல் பொன்நூலாக மின்னும். இந்த நூலைப் படைத்தவரை அவர் களுடைய இதயம் பூமாரி பொழிந்து வாழ்த்தும்.

ஆதிகாலம் முதலே தமிழர்விட்ட மாபெரும்தவறு அவர் களுடைய வரலாறுகளை ஒழுங்குபட பதியாமல் விட்டதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஐரோப்பா வந்துபார்த்தால் சின்னச்சின்ன இனங்கள் எல்லாம் ஆயிரம் வருட வரலாற்றை ஆதாரத்துடன் விளக்கக் கூடிய தகுதியுடன் இருக்கிறார்கள். ஆனால் நம்மிடம் அப்படி யான ஆதாரங்கள் இல்லை. இன்றும்கூட இப்படியாராவது முயற்சிகளில் ஈடுபட்டால் இது தேவையா என்று கேட்கும் பாமரக்குரல்கள் எம்மிடையே மறைந்து விட்டதாகக் கூறமுடி யாது. இப்படியான பொறுப்பற்ற சூழல்கள் நம் கண்களை மறைத்து ஆலமரம் போல் விழுதுகள்விட்டு நிற்கின்றன. இருப் பினும், மனம்தளராது தொடர்ந்து முயலும் திரு.ந.நகுலசிகா மணி போன்ற கதிரவன்களின் ஒளி இலை இடுக்குகளால் புகுந்து வந்து, இருளில் கிடப்போருக்கு ஒளி தருவதுதான் வாழ்வில் உள்ள பெரும் நம்பிக்கையாக உள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து தகவல் களைச் சேகரிப்பது கடினமானகாரியம். அதைவிடக் கடினமான காரியம் இப்பணியைச் செய்வதற்கு ஒரு மனம் வேண்டும். பொருளாதார நெருக்கடி, ஆதரவு நிலை, மக்கள் மன்றுக்கு எடுத்துச்செல்ல வேண்டியநிலை என்று ஏராளம் சிக்கல்கள் இருக் கின்றன. இப்படியான சிக்கல்களை உவந்துபாராட்டி நிதியளிக்க எம்மிடம் அரசில்லை. இதை ஏற்று மக்களிடம் எடுத்துச்செல்ல நமது நகரசபைக்கு வலுவில்லை. இப்படியான முயற்சிக்கு நிதியைத் தேடிப் பிடிக்க முடியாத அவலநிலையில் ஆடும் அவல அரசியல் நிலையென்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்வளவு அவலங்களையும் அடையாளம் கண்டாலும் தளராத மனங்கள் தம்பணியை செய்துவருகின்றன. அதற்கு இந்தநூல் அதிசிறந்த எடுத்துக்காட்டாகும்.

படிக்கும் பலருக்கு மேலும் சில தகவல்கள் தெரிந்திருக் கலாம். வருங்காலத்தில் அவைகளையும் சேர்த்து புதியபதிப்பாக வருமென்ற செய்தி இந்த இரண்டாவதுபதிப் பில் உள்ளது. ஒரு நூல் இரண்டாவது பதிப்புக் காண்பது இன்றைய வெளியீட்டு சூழலில் இலகுவான காரியமல்ல, அந்தச் சிறப்பை இந்த நூல் கண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு விமர்சனமும் ஒருபணியை மேலும் சிறப்புடன் முன்னெடுக்கக் கூடிய ஆலோசனைகளைச் சொல்ல வல்லதாக இருக்கவேண்டும். விமர்சனங்களை ஏற்கவேண்டுமென பேசுவது பலருடைய வாய்களுக்கு வசதியான வார்த்தையாகிவிட்டது. அத்தகையோர் புதிய வழிகூறும் ஞானமுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியம். இந்த நூலுக்கு விமர்சனம்கூற முயலுமுன் அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயம் இதுவாகும்.

வல்வெட்டித்துறை வரலாற்று ஆவணக்காப்பகம் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி சாதனை படைத்துவரும் திரு.திருமதி. நகுலசிகா மணி குடும்பத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

கி.செ.துரை *21-04-2007*
டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனக.மனோகரனின்
# மனோ மணிமலர்கள் வெளியீடு

வல்வை வரலாற்று காப்பகத்தினரால் கடந்த 17.08. 2008 பி.ப கனடாகந்தசுவாமி ஆலயத்தில் வெளியீடு செய்யப்பட்டது. மேற்படி நூல்வெளியீடு கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. தமிழர் ஐக்கிய அமைப்பின் இயக்குனர்களான திரு, திருமதி.குரு. யோகராஜா தம்பதியினர் குத்துவிளக்கேற்ற செல்வி.ம.தாட்ஷாயணி கனடிய தேசிய கீதத்தையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பாடியபின்னர் அமைதி வணக்கத்தோடு ஆரம்பமானது. செல்வச்சந்நிதி ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் பொன்.புவனேந்திரன் ஆசியுரை வழங் கினார். கனக.மனோகரனின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டியதோடு தொடர்ந்தும் நீண்டகாலம் வாழ்ந்து எழுத்துத்துறையிலும் ஏனையதுறைகளிலும் மென்மேலும் பணியாற்றவேண்டும் என இறைவனை வேண்டினார்.




நூல் வெளியீட்டிற்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுச் செயற் பட்ட திரு.நகுலசிகாமணி அவர்கள் மேடையில் அமர்ந்திருந்த பேச்சாளர்களையும் வந்திருந்த சபையோரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைவர் த.சிவபாலு கனக.மனோகரனின் அரசியல் பேச்சுக்களால் மட்டு மன்றி அவரின் வளக்காடு திறனையும் நேரடியாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு அவரின் தமிழ்திறனை மேல்நீதிமன்ற நிதிபதியாக இருந்த அப்துல் காதரே பாராட்டியிருந்தார் என்றால் அவரது இலக்கியத்திறன் நயத்தைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை என்றார். தொனிபொருட் கேள்வி, தூண்டு தொகைவினா, விடையமைவினா போன்ற அருமையான சொற்களை அவர் கையாண்டதைக்கண்டு நான் வியந்த துண்டு, நீதிமன்றில் யூரிசபைத் தலைவராகப் பணியாற்றிய போது இவரது வாதத்திறமையினால் வழக்குத் தள்ளுபடி செய்யப் பட்டதையும் நினைவு கூர்ந்ததோடு மனோகரனின் பேச்சுக்கள் வெட்டொன்று துண்டுரண்டாக இருப்பினும் அவரது உள்ளம் மிகவும் மென்மையானது, கனிவானது, இரக்கம்கொண்டது என்பதனை எடுத்து காட்டினார்.



'கரன்' என்ற பெயராலே உலகாளும்
கம்பீரம்
கனகமனோகரன் நீ தமிழ் தாய்க்கும்
தனி ஆரம் - இதை
வல்வைத்தாய் பெற்றவரென்று வரலாறு
தனி கூறும் - இனி
வருவோர்கள் உனைப்பார்க்க இம் 'மணிமலரே'
வழிகாட்டும்.

தமிழ்நீ பொன். சிவகுமாரன்

தமிழ் நதியை சிறைப்பிடிக்கும் எழுத்தாற்றலும் இலக்கியக் காற்றை மயிலிறகால் வருடும் சொல்லாற்றலும் கனக மனோகரனின் தனி முகவரிகள். பேச்சில் இலக்கியமும், எழுத்தில் மொழி நுக்கியமும் இவருக்குக் கைவந்தகலை. அவரின் தனிமனித வாழ்க்கையும் சரி சமூக சார் வாழ்க்கையும் சரி எதிர்பார்ப்புகளில்லாத எளிமையானவை. சுவாசம், தமிழ், ஊர், இனம், விடுதலையென வேரோடிப்போயிருக்கும் இவரின் பணிப்பிரதேசங்கள் இந்தப் பணிவயல்களில் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு விதத்தில் மற்றவரிடமிருந்து வேறுபட்டு இருப்பதுதான் தனி முத்திரைகள்.

மிகவும் காலம் தாழ்த்தி அவரின் எழுத்துலகத் தேர் தமிழ் கூறும் உலகிற்கு நூலாக வலம் வருகின்றது. அவருக்குள் மறைந்திருக்கும் இலக்கியத்தனம் நூலில் எப்பொழுதோ அச்சு வாகனம் ஏறி வந்திருக்க வேண்டும். இப்பொழுதாவது வருகிறதே என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. பேசுவதற்கு நிறையவும் எழுதுவதற்கு அதைவிட நிறையவும் வைத்திருக்கும் புலம்பெயர்ந்த கொஞ்சப் பேனாக்களில் இன்றும் இளமையும் முதுமையும் நிறைந்துவைத்த பேனாக்கள் உங்களிடம் இருக்கின்றன. எழுதுங்கள் நண்பரே, இன்னும் எழுதுங்கள். வாசிப்பதற்கு மட்டுமல்ல, உங்கள் எழுத்துக்கள் நேசிப்பதற்கும்தான்.

என்றும் அன்புடன்
உங்களை நேசிக்கும் இளையபாரதி

கனக மனோகரன் உடுப்பிட்டி அ.மி கல்லூரியில் என் சக மாணவன். 18 ஆண்டுகளாக இவர் எங்கள் கழைய கிளையில் தீவிர செயற்குழு உறுப்பினன். இதில் தலைவர், காப்பாளர், இயக்குநர் பதவிகளை வகித்தவர். எமது வருடாந்தப் பேச்சுப் போட்டிகட்கு மனோகரன் தான் பொறுப்பாளர். இந்த சகல கலாவல்லுநன் எங்கள் வானவில் விழாக்களில் பட்டிமன்றம், கவியரங்கம், சொல்லாடல், கவிதை நாடகம் போன்ற நானாவித நிகழ்வுகளில் பங்கேற்று மெருகு ஊட்டியவர். 2007ம் ஆண்டில் கழையக்கிளைத் தலைமை வகித்த இவர் எங்கள் லண்டன், கவின் விழா நிகழ்வுகளிலும் பங்கெடுத்து அவற்றை சிறப்பித்துள்ளார். ஆயத்தம் இன்றிப் பேசுவதும் கேட்டவுடன் வாழ்த்து. அஞ் சலிக் கவிதைகளை தருவதும் இவருக்கு கைவந்த கலை.

"வானவில்" கலாநிதி. த. வசந்தகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து கவிநாயகர் வி.கந்தவனம் அவர்கள் தனது தலைமையுரையில் கனக.மனோகரன் மிகச்சிறந்த இலக்கியவாதி. அவர் அரசியல் மேடையில் மட்டுமன்றி பல வாதப்பிரதி வாதங்கள், கவிதா அரங்கங்கள் என அவர் மேற்கொள்ளும் இலக்கியச் சுவைமிக்க நிகழ்வுகளை நான் தலைமைதாங்கி யுள்ளேன். நல்ல எழுத்தாளர். மக்களை நேசிக்கும் இளகிய மனம் கொண்டவர். அவரின் நூலை வல்வை வரலாற்று ஆவணக் காப்பகத்தின் பொறுப் பாளர்களான திரு,திருமதி நகுலசிகாமணி உமா தம்பதியினரின் பணி மகத்தானது! பாராட்டப்பட வேண்டியது என்றார். தொடர்ந்து உரையாற்றும்போது கனக. மனோகரனின் நூலுக்கு ‘கனகமலர்’ என்று தலைப்பு வைக்கும் படி சொன்னேன். ஆனால் அவர் ஒரு வில்லங்கப் பேர்வழி, எதுகை, மோனையைத் தனது எழுத்து நடையில் கையா ளுவதில் வல்லவர் எனவே மனோகரனின் மனோ மணிமலர்கள் என ம. ம. ம என வரத்தக்கதாகத் தலையங்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். தமிழையும், தமிழ் இசையையும் வளர்ப்பதில் இவருக்கு கனடாவில் பெரும் பங்கு உண்டு என்றார்.

சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி அவர்கள் உரையாற் றும்போது சட்டக்கல்லூரியில் நாங்கள் இருக்கும்போது பேச்சுப்போட்டிகளில், எழுந்தமானப் பேச்சுகளில் என்னை வென்றவர். எனக்குத் தொலைபேசி அழைப்பு விடுத்தால் நாயே உனக்கு எத்தனைதரம் அழைப்பது என்று ஏசுவார். நானோ பரதேசி எனக்கு வேறு வேலை இல்லையோ என்றமாதிரி எங்கள் உரையாடல் எப்பொழுதும் இருக்கும். சிலவேளைகளில் எனக்கு முன்னால் இருக்கும் வாடிக்கையாளர்கள் என்னடா என்ற தோரணையில் பார்ப்பார்கள். ஆனால் பின்னர் நான் பேசுவதைக் கேட்டால் நண்பர்களோடுதான் கதைக்கிறார் என்பது புரிந்துவிடும். என்று கூறினார்.

தொடர்ந்து விக்டர் கருணைராஜன் ஆங்கிலத்தில் உரையாற் றினார். என்னை கம்பராமாயணத்தைப் படித்தீர்களா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டபோது எனக்குக் கம்பராமாயணத்தைப் பற்றித் தெரியும் என்றேன். நாங்கள் யாரையும் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டுமேயன்றி அவர்களை மட்டம் தட்டக் கூடாது. எங்கள் இலக்கியத்தை எழுதுபவர்களுக்கு நாம் ஆதரவுகொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும். கனக.மனோகரன் மனிதாபி மானமும் இரக்கமும் கொண்டவர். மக்களை நேசிப்பவர் என்றவர் அவரின் சிறப்பு, செயல்திறன், ஒழுக்கம், தமிழர் கலை கலாச்சாரத்தில் கொண் டுள்ள அக்கறை என்பவற்றை எடுத்துரைத்துப் பாராட்டினார்.

கலாநிதி வசந்தன் அவர்கள் உரையாற்றும்போது மனோகரன் சர்வதேசரீதியில் பிரபலமான ஒரு பேச்சாளர். நாங்கள் ஒரு முறை ஐரோப்பா விற்குச் சென்றிருந்தோம். அங்கு கனக.மனோகரனைக் கண்டவர்கள் அவரின் பேச்சுத் திறனையும் அறிவாற்றலையும் மெச்சிப்பாராட்டியமையை நேரடியாகக் கண்ணுற்றேன். சுவிஸ்சில் இருந்து வந்த மக்கள் நாங்கள் உங்கள் பேச்சைக் கேட்கவந்தோம் என்று பகிரங்கமாகவே கூறினர். அந்தக்காலத்தில் அரசியல் மேடைகளில் ஒலித்த குரலைக் கேட்டிருக்கின்றோம். அதை இன்று கேட்கவந்தோம் என்று அவர் குறிப்பிட்டமை கனக.மனோகரனின் பேச்சாற்றலைப் பறை சாற்றி நிற்கிறது என்றார். அவர் வானவில்லில் பல வடிவங் களில் மேடையேறுவார். நடிகராக, கவிஞராக, பட்டி மன்ற பேச்சாள ராக என்று அவரின் பங்களிப்பு பலவிதம் என்று கூறினார்.

தொடர்ந்து வல்வைமக்கள் சார்பில் வாழ்த்துக் கவிதையை வாசித்துக் கையளித்தார் பொன்.சிவகுமாரன். ஈழ நாடு பத்திரிகை ஆசிரியர் ரி.கே.பரமேஸ்வரன் உரையாற்றும் போது தமிழுக்காக வாழ்ந்த, தமிழருக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்து பாடுபட்ட தந்தை செல்வா தலை மையில் கொண்டு செயற்பட்ட அண்ணன் கனக.மனோகரன் அவர்கள் தமிழ்க் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது பிரதம பேச்சாளராகத் திகழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.கோதை அமுதன், சட்டத்தரணி கனக மனோகரன் அவர் களின் பேச்சாற்றலை பல மேடைகளில் நான் கண்டு கேட்டு வியந்துள் ளேன். அவரைப்பற்றிப் பலர் பல விதமாக பேசக்கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் அவரோடு நெருங்கிப் பழகியபோதுதான் அவர் நேர்மையான கண்ணியமானவர் என்பதைப் அறிந்துகொள்ள முடிந்தது. என்னிடம் பேசும் படி கேட்டபோது ஒரு உண்மையைச் சொன்னார். யாரோ ஒரு பெண்பேச்சாளர் பேசுவதற்குச் சம்மதித்திருந்தார் ஆனால் கடைசிநேரத்தில் அவர் மறுத்துவிட்டார் எனக்குறிப்பிட்டு என்னை நேற்று முன்தினந்தான் கேட்டிருந் தார். அவரது ஒளிவுமறைவற்ற தன்மை என்னைக் கவர்ந் திருந்தது. நான் பேசச் சம்மதித்தேன் என்றார்.

தொடர்ந்து பொ.கனகசபாபதி அவர்கள் உரையாற் றும்போது மனோகரன் சட்டத்தரணிமட்டுமல்ல சிறந்த பேச் சாளரும் இலக்கியவாதியும் கூட. இவரது இலக்கிய நயத் தையும் அறிவையும் கேட்டு வியந்ததுண்டு. அவர் தமிழக முதல்வர் கருணாநிதியின் பேச்சினால் கவரப்பட்டவர். நடிகர் இரா ஜேந்தர் கருணாநிதியின் அடுக்குமொழிகளை உபயோகித்தாலும் வலிந்து சிலசொற்களை உபயோகிப்பதால் அதில் இயல்புத் தன்மை இருப்பதில்லை. ஆனால் கனக.மனோகரன் பேச்சில் அத்தகைய செயற்கையான வலிந்து திணித்து பேசும்தன்மை கிடையாது. இயல்பாக சொற்களைக் கையாளுவதில் வல்லவர். அவரோடு உரையாடுவது தனிச்சுவை. தான் எடுத்துக்கொண்ட விடயத்தை சரியென வாதாடும் திறன்மிக்கவர். இலக்கியப் பாடல்களை உடனடியாகக் கூறி யார் புலவர் எந்த நூல் என்றெல்லாம் கூறும் ஞாபகசக்தி கொண்டவர். அவரின் கட்டுரைகளைப் பதிவாக்கி வெளியிடும் நகுலசிகாமணி குடும்பத்தினர் பாராட்டப்படவேண்டியவர்கள். யாருக்கும் நேர்ந்திராத இழப்பை அவர்கள் பெற்றுக் கொண்டாலும் தங்கள் சேவையைத் தொடர்ந்து செய்வது பாராட்டத்தக்கது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி உசாந்தினி கிருபாகரனின் நடன நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கனக.மனோகரன் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து அவர் பதிலுரையில் தனது நூலை உருவாக்க நண்பன் நகுல சிகாமணியையும் அவர் துணைவியார் உமாவையும் வாயாரப் பாராட்டியதோடு அவர்களின் நச்சரிப்பாலும் தூண்டு தலாலுந்தான் இந்தநூலை வெளியீடு செய்யக் கூடியதாக இருந்தது. அவர்கள் தங்கள் இழப்பை மறந்து சமூகத் தொண்டில் ஈடுபடும் அவர்கள் பணி வல்வை மக்களுக்கு மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பெரும்வாய்ப்பாக அமைந்துள்ளது என்றுகூறிய அவர் தனக்குதவிய, மேடை யில் பேசிய ஒவ்வொருவரையும் பாராட்டி தனது நன்றி கலந்த உரையைநிகழ்த்தினார். அவரது பேச்சு கரவொலியையும் சிரிப்பொலியையும் எழுப்பியது. துணுக்கு களோடும் சிரிக்கவைக்கும் பாணியிலும் பேசுவதில்வல்லவர் என்ப தனை நூல்வெளியீட்டிலும் அவர் விட்டுவைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தின்
### ஈழத்து வரலாற்றுக் கண்காட்சி

08-08-2009 சனிக்கிழமை ஈழத்து வரலாற்றுக் கண் காட்சி கனடா கந்தசாமி கோயில் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விழாமண்டப நுழைவாசலில் இரு குழந்தைகள் இனிப்பு வழங்கி வருவோரை வரவேற்க உள்ளே வட்டவடிவமான மேசையில் சிவந்தறோசா, மஞ்சல் நிறப்பூக்களால் பூக்கோலம் போடப் பட்டிருந்தது. கண்காட்சியில் ஈழத்தின் தலைவர்களான சேர்.பொன்.இராமநாதன் அவர்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திரு.பிரபாகரன் வரையான நூல்கள் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன. அடுத்து 1972ம் ஆண்டு பிலிப்பால் டயோஸ் என்பவர் எழுதிய நூலிலிருந்து யாழ்ப்பாணச் சரித்திர நூல்கள்பலவும் அதனோடு நமது பேராசிரியர்கள் எழுதிய நூல்களும் பார்வைக்கு இருந்தன. அதனோடு தந்தை செல்வாவின் போராட்டத்திலிருந்து தற்போதய போராட்டம் வரையான கண்காட்சியும், ஈழத்தின் பாரம்பரிய வரலாறு களும், Marine Heritage of VVT என்னும் காட்சிகளும் இடம்பெற்றது. இதுவரை ஆவணக் காப்பகம் மீள்பதிப்புச் செய்த பழமை வாய்ந்த பதினொரு நூல்களும் புதிய நூல்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. பேச்சுக்களற்ற, பார்வையாளர்கள் நிறைந்த நிகழ்வாக அமைந்தது. பார்வையாளர்கள் அங்கு வைக் கப்பட்டிருந்த பதிவேட்டில் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்து மனநிறைவோடு சென்றனர். ஆவணக் காப்பகத்தினர் மீள் பதிப்புச்செய்த நூல்களுடன் வேறுபல வரலாற்று நூல்களும் விற்பனைக் கூடத்தில் பார்வையாளர்கள் வாங்கிச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளித்த வல்வை வரலாற்று ஆவணக் காப்பகத்தின் ஆண்டுவிழா! 2011

### நக்கீரன்

கடந்த திங்கட்கிழமை வல்வை வரலாற்றுக் காப்பகம் நடத்திய 13ம் ஆண்டு நிறைவை ஒட்டிய புத்தகக் கண் காட்சியைக் கண்டுகளிக்க நேர்ந்தது. திரு.நகுலசிகாமணி திருமதி உமா.நகுலசிகாமணி இந்த இருவரும் தேனீபோல் திரட்டிய பழைய நூல்கள் புதிதாக அவர்கள் பதிப்பித்து வெளியிட்ட நூல்கள் படங்கள் ஆவணங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. இங்கு மட்டுமல்ல அயல்நாடுகளிலும் இந்தக் கண் காட்சியை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நடத்துகிறார் கள். பழைய நூல்களை உ.வே.சாமிநாதர் சி.வை.தாமோதரம் பிள்ளை பாணியில் தேடிக் கண்டுபிடித்து மறுபதிப்புச் செய்து வெளியிடுகிறார்கள்.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் நாவற்குளி, சுண்டிக்குளி, புத்தூர் போன்ற ஊர்களில் அவஉகள் கட்டிய தேவாலயங்களின் படங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்தபோது 500 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப் பாணம் எப்படி இருந்தது என்பதை பின்னோக்கிப் பாஉக்க முடிந்தது. காலையில் கண்காட்சியும் மாலை கவியரங்கம், கருத் தரங்கம், சிறப்புஉரை, நூல்அறிமுகம் (உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் மற்றும் மாரியம்மன் மான்மியம் 1972) இயல், இசை, நடனம், இரவு விருந்து எனப்பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சபையோரை வரவேற்றல்  திரு.சோமசச்சி சமூகசேவையாளர்



திரு.லோகன் கணபதி நாடா வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.



திரு.நகுலசிகாமணி வரவேற்புரை ஆற்றினார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கு திரு நவம் தலைமையில் திரு கனக மனோகரன், திருவாட்டி. கோதை அமுதன் மற்றும் திரு.த.சிவபாலு "சுவரோடாயினும் சொல்லி அழு" என்றதலைப்பில் கவிதை படித்தார்கள்.



திரு.வே.தங்கவேல் திரு.ஈழவேந்தன், முனைவர் நா.சுப்ரமணியம் ஐயர் உரையாறுகிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்கு திரு நக்கீரன் தலைமையில் பேராசிரியர் சேரன் (கடந்தகாலத்தின் தடங்கள்) முனைவர் நா.சுப்பிர மணியன் (ஆவணப்படுத்தலும் ஆராய்வும்) திரு.மா.க.ஈழ வேந்தன் (சாம்பலில் பூத்த பூக்கள்(யாழ்நூலகம்) உரையாற்றி னார்கள். எல்லோரும் பயனுள்ளகருத்துக்களை முன்வைத்தார் கள். "ஈழத்து இலக்கிய வரலாறு ஈழத்துப் பூதந்தேவனார் என்ற சங்ககாலப் புலவரோடு தொடங்குகிறது. அதன் பின்னர் கிபி. 1310ம் ஆண்டு போசராசரால் இயற்றப்பெற்ற சரசோதிடமாலை. இடையில் ஆயிரம் ஆண்டுகள் எந்தநூலும் எழுதப்படவில்லை. அதற்குக் காரணம் எழுதிய நூல்களைத் தமிழர்கள் பேணத்தவறி விட்டார்கள் என்பதே" என முனைவர் நா.சுப்பிரமணியன் தனது உரையில் குறிப்பிட்டார்.




திருமதி.கோதை அமுதன் உரையாற்றுகின்றபோது

கடந்த காலத்தில் ஆசுகவி கல்லடி. வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய யாழ்ப்பாண வைபவ கௌமுதி, மயில்வாகனப் புலவர் இயற்றிய யாழ்ப் பாண வைபவ மாலை, கருணைக் கோர் அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரலாங்கார மூலமும் வல்லை இயற்றமிழ்ப்போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை அவர்கள் எழுதிய உரை, வல்வெட்டித் துறை வரலாற்றுச்சுவடுகள், பொன்னம்பலம் அருணாசலம் (ஆங்கிலம்) போன்ற நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம் மீள்பதிப்புச் செய்து வெளியிட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்கள் எல்லோரும் ஒரு அரசு அல்லது ஒரு பல்கலைக் கழகம் செய்யவேண்டிய பணியை நகுலசிகாமணியும் அவரது துணைவியார் உமா.நகுலசிகாமணியும் செய்கிறார்கள் என மனதாரப்பாராட்டினார்கள்.



நடந்து வருபவர் பேராசிரியர் சேரன்



வரலாற்று காப்பகத்தின் விழாவில் கலாநிதி நா. சுப்பிரமணியன் புகழாரம்

"முன்னைய காலத்தில் ஆறுமுகநாவலர் போன்ற அறிஞர்கள் வெறும் ஓலைச்சுவடிகளாய் இருந்த பல அரிய படைப்புக்களை நூல்களாக பிரசுரம் செய்த காரணத்தால்தான் நாங்கள் பல விடயங்களை கற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எமது மொழி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் பெருமைகளையும் விரிவாக்கங்களையும் சொல்லும் பல நூல்களை இழந்தாலும் வல்வை நகுலசிகாமணி போன்ற அன்பர்கள் தற்காலத்தில் ஆற்றும் பணிகள் ஆறுமுகநாவலர் போன்றவர்கள் ஆற்றிய பணிகளுக்கு ஒத்தவை அதோடு பாராட்டுக்குரியவை என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்."

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ பீற்றர் அண்ட் போல் விழா மண்டபத்தில் நடைபெற்ற வல்வை நகுலசிகாமணியின் வரலாற்று ஆவண காப்பகத்தின் ஆண்டு விழாவில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய கலாநிதி நா. சுப்பிரமணியன் புகழாரம் சூட்டினார். மேலே காணப்படும் படத்தில் கலாநிதி நா. சுப்பிரமணியன் உரையாற்றுவதையும் அருகில் திருவாளர்கள் ஈழவேந்தன் மற்றும் நக்கீரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

கனடா உதயன் பத்திரிகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தக் கண்காட்சியில் நான் சுவைத்துப்பார்த்த காட்சி குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிடும் 99 வகைப்பூக்கள் ஆகும். சங்க நூல்களில் ஒன்றான பத்துப்பாட்டு நூலின் ஒரு பாட்டு "குறிஞ்சிப் பாட்டு". இது காதலன், காதலியின் நீண்ட பயணம் ஒன்றைச் சொல்லும் சுவையான பாட்டு. இந்நூலின் 61 ஆவது வரியில் தொடங்கி 95 ஆவது வரிவரையிலான பகுதியில் அந்தக் காலப் பூக்களின் விரிவான பட்டியலைக் கபிலர் அழகாக வரிசைப்படுத்தி இருக்கிறார். பூவெல்லாம் கேட்டுப் பார்" என்ற சற்றேபழைய திரைப்படத்தில் இந்தப் பட்டியலைச் சூர்யா ஜோதிகாவிடம் ஒப்பிக்கப் பலர் கேட்டிருக்கலாம்.

உள்ளகம்சிவந்த கண்ணேம் வள்இதழ்
ஒண்செங்காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண்கயக்குவளை, குறிஞ்சி, வெட்சி, செங்கோடுவேரி, தேமா, மணிச்சிகை,
உரீஇநாறு அவிழ்தொத்து உங்தூழ், கூவிளம்,
எரிபுரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங்குடகம்,
எருவை, செருவிளை, மணிப்பூங்குடசம்,
பயினி, வானி, பல்இனர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல்இணர்க் காயா,
விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,
குறீஇப்பூளை, குறுநறுங்கண்ணி,
குருசிலை, மருதம், விரிபூங்கோங்கம்,
போங்கம், திலகம், தேங்கமல் பாதிரி,
செருத்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரந்தை, குளவி, கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை, கல்இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமாரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாட் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தாண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங்குழலி,
கோடல், கைதை, கொங்குமுதிர் நறுவழை,
காஞ்சி, பனிக்குலைக் கள்கமழ் நெய்தல்,
பாங்கஉ, மாரவும், பல்பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்கு இணர்க் கொன்றை,
அரும்பு, அமர் ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழாஅய், சுடர்பூந் தொன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங்குருங்கத்தி,
ஆரம், காழ்வை, கடிஇரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மாஇருங்குருத்தும், வேங்கையும், பிறவும் ....

இத்தனை பூக்களையும் பார்த்து மயங்கி, அவற்றை ஆசை யாகப்பறித்து, மழை கழுவித் தூய்மையாக்கிய பாறையில் குவிப்பதாகக்காட்சி. பொதுவாக, குறிஞ்சித்திணையைப் பாடும் போது, அந்த நிலத்துக்குரிய கருப்பொருள்களைமட்டுமே பயன்படுத்துவார்கள். அதாவது, குறிஞ்சிநிலக்கடவுள், குறிஞ்சி நிலத்துக்கான காலம், பூக்கள், இப்படி. ஆனால், இந்தப்பாட் டைப் பொறுத்தவரை, எல்லாத்திணைகளுக்குரிய மலர்களை யும் தொகுத்துச் சொல்லியிருக்கிறார் கபிலர். அந்தக் காலத்தில் இத்தனை பூக்கள் இருந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிற போதே, இந்த பூக்களெல்லாம் இப்போது என்ன ஆனது என்கிற கேள்வியும் எழுகிறது. இதுகுறித்து யாராவது ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா தெரியவில்லை. பட்டியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாக ஒருமுறை படித்துப்பார்த்தால் காந்தள், கொன்றை, வாழை, தாழை, அவரை, ஆம்பல், தாமரை, தாழை, தும்பை எனச் சில பூக்கள்தான் தெரிகிறது. மற்றதெல்லாம் கேள்வி ஞானம் தான்.

வர்த்தமானன்பதிப்பகம் வெளியிட்டுள்ள புலவர் அ. மாணிக்கனார் உரை, இந்தப் பூக்கள் சிலவற்றைக்குறித்து, மேலதிகத் தரவுகளைத்தருகிறது. “காந்தள்”என்பது குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்கு அடையாளம். ஆகவே, அதை முதலில் சொல்கிறார் கபிலர். “காந்தள் மெல்விரல்” என்று சொல்லாட்சி குறுந்தொகையில் வருகிறது. காந்தள்மலர் மனிதக்கையைப் போலவே இருக்குமாம். மென்மையான மலரான “அனிச்சம்” விருந்தினருக்கு உவமையாக “மோப்பக் குழையும் அனிச்சம்” என்று திருக்குறளில் திருவள்ளுவர் உவமித்திருக்கிறார். “வாகை” என்பது, வெண்மையான மரப் பூ, “வெற்றி வாகை சூடினார்” என்று இப்போதும் சொல்வதன்காரணம், அந்தக் காலத் தில் போர்களத்தில் வெற்றிகண்ட அரசர்கள், தங்களின் வெற்றிக்கு அடையாளமாக, வாகைமலரைச் சூடிக்கொண்டு வலம் வருவார்களாம்! “கோங்கம்“ என்பதிலிருந்து தான் “கொங்கை” என்ற வார்த்தை பிறந்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம், கோங்க மலரின் அரும்பு அந்த வடிவத்தில் இருக்குமாம். “தில்லை” என்பது இன்னொரு மரப் பூ. இந்த மரம் அதிகம் நிறைந்திருந்த காரணத்தால்தான், சிதம்பரத்தைத் “தில்லை” என்று குறிப்பிட்டார்களாம் !

“ஞாழல்” என்பது புலி நகக் கொன்றை, “பித்திகம்” என்பது உச்சி வகுந்தெடுத்த கிளி வைத்துக்கொண்டிருந்த பிச்சிப் பூ. “துழாய்” என்றால் துளசி. “வேங்கை” என்று குறிப்பிடப்படும் மிருகமும் “புலி” என்பதும் ஒன்றா என்று தெரியவில்லை. ஆனால், வேங்கை மலர்கள் விழுந்துகிடக்கும் பாறையை தூரத்தி லிருந்து பார்க்கும்போது அது புலியைப்போலவே தோன்றும் என்று சொல்கிறார்கள். அதுமட்டுமில்லை, வேங்கை மலர்களைப் பறிக்க விரும்புகிறவர்கள், “புலி புலி” என்று கத்துவார்களாம், அந்தச்சப்தத்தைக் கேட்டதும் இந்தச்செடியோ, கொடியோ, மரமோ தாழ்ந்து மலர்களைப்பறிக்க அனுமதிக்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலர் பெருமான் இந்தப் பூக்களைப் பட்டியல் இட்டதால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னை தமிழகத்தில் பூத்துக் குலுங்கிய பூக்களை அறியமுடிகிறது. இன்றும் பெரியோர்களைக் கனம்பண்ண மாலை அணிவித்தலும் பெண்கள் பூக்களைக் கொண்டையில் சூடுதலும் திருமணத்தின் போது தலைவன் தலைவி மாலை மாற்றுவதும் கோயில் குடியிருக்கும் தெய்வங்களுக்கு மலர் தூவி வழிபடுதலும் தமிழை களுக்கே உரிய பண்பாடாகும். கபிலர் வாழ்க!

மேற்படி விழா காலை 10.00 மணியிலிருந்து மாலை 9.00 மணிவரை நடைபெற்று இரவு விருந்துடன் நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்
## IMAGES OF VALVAI

### கனடாவில் பாதுகாத்து இயங்கிவந்த வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம் வல்வையில் "திறப்புவிழா" 2012

மேற்படி நிகழ்வு 7-05-2012 திங்கள் கிழமை யாழ்/வல்வை அ.மி.த.க.பாடசாலையில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணிவரையும் மதியம் 12.00மணி யளவில் திறப்புவிழாவும் விசேட நிகழ்வும் இடம்பெற்றது. கௌரவவிருந்தினராக எமது மண்ணையும் எமது வரலாற் றையும் பாதுகாக்கும் பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம்(தலைவர் வரலாற்றுத்துறை, யாழ்பல்கலைக் கழகம்), யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.மாவை. சேனாதி ராஜா, முன்நாள் பாராளுமன்ற உறுப்பினரும்



பேராசிரியர் ப.புஷ்பரெட்ணம் அவர்கள் ஆவணக்காப்பகத்தை திறந்துவைத்தார்.

முன்நாள் நகரசபைத் தலைவருமான திரு.எம்.கே.சிவாஜிலிங்கம், நகரசபைத் தலைவர் திரு.ந.அனந்தராாஜ் ஆகியோருக்கு மண்டப நுழைவாயிலில் மலர்மாலை சூட்டப்பட்டு, திரு.புஷ்பரட்ணம் அவர்கள் பலத்த கரகோஷத்துடன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். பின்னர் மங்கல விளக்கு ஏற்றப்பட்டு காப்பகத்தின் ஒரு பிரிவான கப்பற்துறையை Captan ஆக பணிபுரியும் திரு.சிவநேசன் அவர்கள் திறந்துவைத்தார். கண்காட்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணக் காப்பகம் மீள்பதிப்புச் செய்த 23 நூல்களும், ஆண்டுரீதியாக வெளிவந்த வல்வைவரலாற்று நூல்களும், கனடாவிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட அன்னபூரணிக்



பா.உதயகுமார், து.மோகனகுரு, சதா.ரவி, ந.ஜெயவீரசிகாமணி ஆகியோர்

கப்பலின் மாதிரிஉருவம், Sextan Navigation Captan bell, Compass, Navigation Flags, எமதுபாரம்பரிய பொருட்களான சாடி, மரவை, பல்லாங்குழி, கபிலரின் குறிஞ்சிப்பாட்டு 99 தமிழ்ப் பூக்கள், தாயகத்தின் கோயில், இலக்கிய வரலாறு ஆகிய வற்றின் வர்ணப்படங்களுடன் கூடிய தொகுப்பும், இன்னும் பல வரலாற்று சான்றுகளும் பார்வைக்கு வைக்கப்பட்டது.


விசேட நிகழ்வில் ந.நகுலசிகாமணி அவர்களின் வர வேற்புரையை அடுத்து நகரசபைத்தலைவர் ந.அனந்தராஜ் தலைமை தாங்கி நடத்தினார். திரு.மாவை.சேனாதிராஜா அவர்கள் தனது வாழ்த்துரையில் "எனது நீண்டகால நண் பன் நகுலசிகாமணி அவர்கள் பாரம்பரியமான வரலாறுக ளைப் பாதுகாத்து வருபவர். அத்துடன் எமது பழமை வாய்ந்த வரலாற்றுநூல்களை அவரின் பாரியாரின் துணை யுடன் மீள்பதிப்புச் செய்து வருபவர். 1997ல் "வல்வெட்டித் துறை வரலாற்றுச் சுவடுகள்" என்ற நூலுக்கு அணிந்துரை தருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் தலைவர் சிவசிதம்பரம் அவர்களையும் கேட்டு எம்மையும் கௌரவித்திருந்தார். 2002ல் நான் கனடா சென்ற






திரு.மாவை.சேனாதிராஜா (பா.உ) பேராசிரியர்.ப.புஷ்பரெட்ணம்

போது அவர் வீட்டில் இரு பிள்ளைகளுடன் ஒன்றாக உணவு அருந்தினேன். பின்னர் அவர்களின்மரணப் பிரிவு என்மனதை மிகவும் தாக்கியது. இன்று அவர்களின் புகைப்படம் காட்சிப படுத்தியது மிகுந்த கவலையை அளிக்கிறது. அவர்களுக்கு எனது அஞ்சலியை செலுத்துகின்றேன். எமது வரலாறுகள் திரிக்கப் பட்டும் எமது மண் அபகரிக்கப்பட்டும் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இந்தப்பணி எதிர்கால சமுதாயத் திற்கு தேவையானதாகும். அவருடைய அர்ப்பணிப்பும் பெருமை மிக்க உழைப்பும், இவற்றையெல்லாம் எவ்வளவு சிரமப்பட்டு இப்பயணத்தில் கொண்டுவந்திருப்பார் என்பது எனக்குத் தெரியும். இவற்றை நாமெல்லாம் ஒன்று சேர்த்து பாது காத்து எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றார்.



திரு.க.சிவாஜிலிங்கம் (பா.உ)



திரு.ந.நகுலசிகாமணி ஆவணக் காப்பக நிறுவனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து சிவாஜிலிங்கம் தனது உரையில் "உலகில் ஒவ்வொரு இனமும் தனது பாரம்பரியமான வரலாற்றைச் சேகரித்து வைத்துள்ளது. எமது இனத்தின் வரலாறு ஒவ் வொரு ஊரின் வரலாற்றிலும் அடங்கியுள்ளது. நாம் அப்ப டிச்செய்யவேண்டும் இப்படிச்செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப் போமே ஒளிய வரலாற்றைச் சேகரிக்கவில்லை. திரு.நகுல சிகாமணி அவர்கள் நான் சிறுவயதாய் இருக்கும்போதே வல்வை சனசமூகநிலையத்தில் வெள்ளி விழாக்கொண்டாடிய சமயத்தில் நிர்வாகியாகச் செயற்பட்டவர். நகுலசிகாமணி தம்பதியினர் தமது இரு பிள்ளைகளின் இழப்பிற்குபிறகும் தொடர்ந்து இப் பணியில் ஆராய்ச்சி செய்து சிறுதளவிலேனும் ஆறதலடை கின்றாரென எண்ண முடிகிறது. பேராசிரியர்.சிவத்தம்பி அவர்கள் வாழ்ந்தபோது "நீங்கள் எமது முன்னோர்களை கௌர விக்க வேண்டும்" என்றுகூறுவார். நான் அவரிடம் "எமக்கு முன்னோர்களின் வரலாறுகள் யாருக்கும் தெரியாது" என்று சொல்லியபோது வல்வை வயித்தியலிங்கபிள்ளை போன்ற பெரியார்களின் வரலாறுகளைக் கூறினார். அப்பெரியவருக்கு நாம் விழா எடுத்துக் கொண்டாடினோம். இன்று நான் இதுவரை கேள்விப்படாத பார்க்கமுடியாத பல பொக்கிஷங்களை, நூற்றாண்டுகள் கடந்த எமது பெரியார்களின் நூல்களை இங்கு எடுத்துவந்து எம்மிடம்ஒப்படைத் துள்ளார். "வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்" அவசியமானது, பாராட்டுக் குரியது. திரு.திருமதி நகுலசிகாமணி உட்பட இதில் உழைப்பவர்களுக்கு எமது பாராட்டுக்கள்" என்று கூறினார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நகரசபை உறுப் பினர் பொ.தெய்வேந்திரன் அவர்களும் வாழ்த்துரையில் இவ் ஆவணக் காப்பகம் எதிர்காலத்தில் முழு இனத்திற்கும் சேவையாற்ற வேண்டும் என வாழ்த்தினார்.

நகரசபைத்தலைவர் ந.அனந்தராஜ் தனது தலைமை உரையில் இவற்றை கனடாவிலிருந்து சேகரித்துக்கொண்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr.கமலலோஜனி.பரமசிவம், தொழிலதிபர் திரு.தி.சேந்தன்.


எனதுமைத்துனர் நகுலசிகாமணியும் அவரதுமனைவி யும் தமது கனவை நிறைவேற்ற ஒரு வரலாற்று ஆவணக் காப்பகத்திற்கான அடித்தளத்தை உருவாக்கியுள்ளனர். இது காலப்போக்கில் வல்வையின் ஆவணக்காப்பகமாக அல்லது தமிழரின் பாரம் பரியத்தை வெளிக்காட்டும் கலை யகமாக, வரலாற்று நூல் நிலையமாக வழர்ந்து வரவேண்டு மென வாழ்த்தினார்.

அடுத்து யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. புஷ்பரட்ணம் அவர்கள் தனதுரையில் நானொரு வரலாற் றுத்துறை ஆசிரியர் என்றவகையில் எமது வரலாறுகளை யும் மரபுரிமைச் சின்னங்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற கனவிற்கு இன்றைய நிகழ்வு ஒருதொடக்கப்புள்ளியா கும். இந்நாள் ஒரு பொன்நாள் என்றும் பார்க்கிறேன். சம காலச் சூழலில் எமது உறவுகள் கடல்கடந்து வாழ்ந்தா லும் எமது மண்ணை நேசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இன்றைய நிகழ்வு ஒரு சிறந்த உதாரணமாகும். இவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியை ஒரு உயர்ந்த பணியாகப் பார்க்கிறேன். இவர்கள் வயதில் முதியவர்களாக இல்லாவிடினும் 20 நூல்களுக்கு மேல் மீள்பதிப்புச் செய்ததோடு அல்லாமல் பலநூற்றாண்டு வரலாறுகளையும் காட்சிப்படுத்தி நம் இளைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்திற்கு ஒப்படைத் துள்ளமை மிகப்பெரிய பணியாகும். இந்தக் காப்பகம் மென்மேலும் வளர நாம் யாவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.




விழாவிற்கு வருகை தந்திருந்த பாடசாலை நூல் நிலையத் திற்கு வரலாற்று ஆவணக்காப்பகத்தினரால் மீள் பதிப்புச் செய்யப்பட்ட நூல்களின் பிரதிகள் வழங்கப்பட்டன. வந்திருந்த மக்கள் அனைவருக்கும் வல்வை வரலாற்று ஆவணக் காப்பகத்தினர் மதிய உணவு வழங்கி கௌரவித் தனர். நிகழ்விற்கு காலை 9.00 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரை பாடசாலை மாணவர்கள், அங்குள்ள அமைப் புக்கள், மற்றும் பொதுமக்கள் அனைவரும் வந்து பார்வையிட்டு தங்கள் விமர்சனங்களையும் கருத்துக்களையும் பதிவு ஏட்டில் பதிவு செய்தனர். இந்த நிகழ்விற்கு வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயில் இந்திர விழாவிற்கு வந்திருந்த புலம்பெயர்ந்த வெளிநாட்டு மக்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறை வரலாற்றைக் கூறும் வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்

கனடாவில் இயங்கிவந்த இந்த ஆவணக்காப்பகம்
நகுலசிகாமணியின் முயற்சியால்
வல்வெட்டித்துறையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**1969** உடுவிலில் தமிழரசுக்கட்சி மாநாடு நடந்தது. மேற்படி மாநாட்டில் குரும்பசிட்டி கனகரத்தினத்தால் முன் வைக்கப்பட்ட ஆவணக்கண்காட்சியும் பெருமளவு மக்களி னால் விரும்பிப் பார்க்கப்பட்டது. அந்த ஆவணக்கண் காட்சி ஈழத் தமிழர்களின் வாழ்வினைச் சித்தரிக்கும் பத்தி ரிகைச் செய்திகள், துணுக்குகள் என்பவற்றின் ஊடாக வரலாற்றுப் பார்வையைக் கொண்டிருந்தது. மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகளிடையே யான பரபரப்பான நேரங்களி லும் ஒரு இளைஞனின் பார்வையில் பட்ட இந்த ஆவணக் கண்காட்சி அவன் மனதைப் பற்றிக் கொண்டது. ஏன்! எங்கள் ஊரின் செய்திகளையும் இவ்வாறு ஆவணமாக்கி னால் என்ன? முடிவு!

அன்றுமுதல் தன் கண்ணில்பட்ட, கைகளிலகப்பட்ட ஊர்ச் செய்திகளையும், தகவல்களையும் சேகரிக்க முற்பட்டார். இவ்வாறு தேடமுற்பட்டபோது இவருடன் உடனிருந்த நண்பர் களான ந.அனந்தராஜ், ச.காந்திதாசன் என்ப வர்களும் கைகொடுக்கவே மூவரின் பயணமும் தொடர்ந்தது. இவர்களின் பயணத்தில் பிறந்ததே “வல்வெட்டித்துறைக் கப்பலின் அமெரிக்கப் பயணம்” என்னும் சிறு கைநூலாகும். இந்நூல் **1974**ல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்திருந்த பேராளர் களுக்கு வழங்கப்பட்டது. வல்வெட்டித்துறை மண்ணின் புகழ் பெற்ற கலாச்சாரத்தை எடுத்தியம்பும் கடலோடிப் பாரம் பரியத்தின் ஓர் அடையாளச் சின்னமாக விளங்கும் புகழ்பெற்ற சுந்தர மேஸ்திரியாரின் அன்னபூரணி அம்மாள் என்ற பாய்க் கப்பலின் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறு குறிப்பாகவே அக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அன்று காணப்பட்டது.

அம்மலரின் அடிக்குறிப்பில் இம்மலரிலுள்ள பொதுக் கட்டுரைகள் யாவும் ந.நகுலசிகாமணி, ச.காந்திதாசன், ந.அனந்தராஜ் ஆகியோரின் தயாரிப்பில் உருவா உள்ள. வல்வை வரலாற்று நூல் வல்வையின் பாரம்பரியம், கலாச் சாரம், பண்பாடு ஆகியவற்றைத் தாங்கிக்கொண்டு விரை வில்வெளிவர இருக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் அசாதாரண சூழ்நிலை கருக் கொண்ட காலம். பொருள்தேடி திரைகடலோடி திரவியம் தேட ஆரம்பித்த காலம். ஆனாலும் மனதில் அடங்காத வல்வையின் ஆவணத்தாகம். இவைகளினூடாக அவரின் தொடரான பயணம்.

நண்பர்கள் திக்கொன்றாய் திசைமாறிப்பறந்தார்கள். திரை கடலோடி திரவியம்தேடிய இவரே கடல்கடந்து1992ல் கனடாவில் குடிபுகுந்தார். புதிய நாடு, வேற்றின மக்கள், ஆனால் வல்வையில் கொண்ட தாகம் தீரவில்லை. இடை வெளியற்ற வேலை நேரங்களிலும் இடைவிடாத தேடுதல் இறுதியில் முன்கூறிய 'வல்வை வரலாற்று நூல்' 23வருடங்கள் கடந்து 1997ல் "வல்வெட்டித்துறை வரலாற்று சுவடுகள்" நூலாக கனடாவில் விரிந்து கொண்டது. வல்வை மண்ணின் வரலாறு, பாரம்பரியம், கல்வி, கலை, கலாச் சாரம் என 57 தலையங்கங்களின் கீழ் விரிந்த அம்மலர் வல்வை மண்ணின் பல்சுவைப் பக்கங்களினை ஆவண மாக்கித் தந்ததுடன் நில்லாமல், கனடாவில் ஈழத்தமிழர் களின் கிராமங்கள் நகரங்கள் என்பவற்றின் சிறப்பினைக் கூறும் பின்வந்த நூல்களிற்கு வழிகாட்டியாகவும் உந்து கோலாகவும் மாறியது.

வல்வெட்டித்துறை பற்றிய செய்திகளை சேகரித்து தொகுத்ததன் மூலம் "வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்" நூல் முதலாம் பதிப்பாக வெளிவந்திருந்தது. தொடர்ந்த தேடுதலில் வல்வெட்டித்துறையின் இலக்கியப் புலமையை பறை சாற்றிவரும் புலவரென்ற பெயக்கேற்ற வாறு மறைந்தபின்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வை 'வயித்தியலிங்கப்புலவர்' எனப்போற்றப்படுபவரின் கந்தரலங்காரம் நூலின் பிரதி யொன்று கிடைத்தது. ஏற்கனவே, 1912ல் இரண்டாம் பதிப் பாக வெளிவந்த நூல் அதன் ஆசிரியர் மறைந்து 100 வருடங்களின்பின் 2001ல் மூன்றாம்பதிப்பாக வெளிவந்தது. இது மேற்படி ஆசிரியரான வயித்தியலிங்கப் புலவரின் புலமைக்கு மகுடம் சூட்டுவதாக அமைந்தது. அத்துடன் வல்வை என்ற பெயரை தன்னுடன் இணைத்துக் கொண்டு வழிகாட்டிய புலவர் போன்று 'கந்தரலங்கார நூலின்' புதிய பதிப்பாசிரியரும் வல்வை ந.நகுலசிகாமணி என தன்னை குறிப்பிட்டுக் கொள்வதும் வாழையடி வாழையாக வல்வையின் பின் வளர்ந்துவரும் புலமைக்கு சான்றாக உள்ளது.

2001ல் வயித்தியலிங்கப்புலவரின் 'கந்தரலரங்காரம்' உரைநடை வெளியிடப்பட்ட நாளில் 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்னும் நூலும் இரண்டாம்பதிப்பாக மலர்ந்தது. வல்வெட்டித்துறை பற்றிய பல வரலாறுகளைக் கொண்ட இந்தநூல் 1918ல் வெளிவந்திருந்தது. யாழ் - வசாவிளான் வேலுப்பிள்ளை(கல்லடி) என்பவரால் எழுதி வெளியிடப் பட்ட யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்னும் இந்நூல் பெயருக் கேற்றவாறு யாழ்ப்பாணத்தின் பல சரித்திரசம் பவங்களின் சான்றாதாரமாகவுள்ளது. வல்வெட்டித்துறை என்றகுடும்பத்தின் பெருமைகளை ஆவணமாக்கிய நகுலசிகாமணி யாழ்ப்பாணச் சமூகத்தின் பெருமைகளை உள் வாங்கி 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' நூலையும் மீள்ப திப்புச் செய்தார். இதன் மூலம் பலருக்கும் பயன்படும் பனுவலை மீளவும் உயிர்ப்பித்துக் கொண்ட பெருமை யைப்பெற்றார். அதுவரை பல வருட காலமாக அவருக்குக் குள்ளே அமைதியாக ஓடிக்கொண்டிருந்த ஆவணம் என்னும் நதி பொங்கிப் பிரவாகித்து புதுவேகம் கொண்டு புரண்டோடத் தொடங்கியது. வல்வெட்டித்துறை ஆவணக் காப்பகம் என்றபெயரில் அது கொண்டுவந்து தந்தவைகள் வரலாறு, இலக்கியம், சமயம், சமூகம், அரசியல் எனப் பல்வேறுபட்டவையாகும்.

ஏடவிழ்ந்தும், செல்லரித்தும் பழகிப்போன பழந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் பெருமை கூறும் நூல்களையெல்லாம் தேடித்தேடி சேகரித்தும் தொகுத்தும் தந்த புரவலன் ராஜராஜசோழன், புலமை மிகு நம்பியாண்டார் நம்பி போன்று இருவரின் ஓர் உருவ மாக திகழ்பவர் ந.நகுலசிகாமணி ஆவார். ஆம் அதனால்தான் உ.வெ.சாமிநாதையரும், சி.வை.தாமோதரம்பிள்ளையும் முன் வந்த நூற்றாண்டுகளில் தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் இல்லாத நிலையில் மீள்பதிப்புத் துறையில் செய்த அரும்பணிபோல் **20**ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தனது பணியை ஆரம்பித்த நகுல சிகாமணி **21**ம் நூற்றாண்டில் தனது பணியைத் தொடர்கின்றார். தமிழ் பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டியபணியை தனிமனி தராக புரியும் இவரின் சாதனை நிகரற்றது. பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் இருந்துதேடிப் பெற்றுக்கொண்ட பல பழம்தமிழ் நூல்களையே இவர் மீள்பதிப்புச்செய்து கொண் டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள், உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் வாழ்க்கையும் ஆக்கங்க ளும் என்னும் இரு நூல்களின் ஆசிரியராகவும் மேலும் நூல்களிற்கு புத்துயிர் கொடுத்த பதிப்பாசிரியராகவும் பவனி வரும் இவர் இவ்வாறான பாதையில் புதிய தளத்தி லும் காலூன்றலானார். பழைய நூல்களில் வல்வைகளின் செய்திகளை தேடுவதாக ஆரம்பித்த இவரின் பயணம் இதற்காக பழைய நூல்களை தேடுவதிலும் சேகரிப்பது மாக விரிந்தது. இதன் பயனாக காலக்கிரமத்தில் இவரது இல்லம் ஒரு நூல்நிலையமாக மாற்றம் கண்டது. பழம் பனுவல் தேடுவோர் நகுலசிகாமணியின் இல்லத்தை நூல் நிலையமாக்கி நாடி வர ஆரம்பித்தனர். கனடாவில் இருப் பவர் மட்டுமன்றி அமெரிக்கா, லண்டன், நியூசிலாந்து, இலங்கை போன்ற இடங்களிலிருந்து வரும் புத்தக ஆர்வ லர்கள் மட்டுமன்றி பல்துறை சார்ந்த பேராசிரியர்களும் இவர் வீட்டைநாடினர். இதனால் இவரிடமிருந்த நூல்கள் ஆராய்ச்சிக்கு உதவும் நூல்களாக மாற்றம் கண்டு எதை யும் உறுதி பட உரைக்கும் ஆவணங்களாக மாறின. "வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்" என்ற பெயரிற்கு இசைந்தாற் போல இவரின் பயணம் தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் ஏற்பட்டிருந்த தற்கால ஓய்வினைப் பயன் படுத்தி 2004ல் குடும்பத்தினருடன் தாயகம் சென்ற இவர் அதுவரை தான் சேர்த்து வைத்திருந்த ஆவணப் பொக்கிஷங் களையும் கொண்டு சென்றார். அவைகளை வல்வெட் டித்துறை அ.மி.கல்லூரியின் வல்வையின் பொதுமக்களிற் கும் விளங்கும் வகையில் காட்சிப்படுத்தினார். அம்மண் ணில் பிறந்து வளர்ந்து கொண்டிருக்கும் அம்மக்களின் உயிரோட்டமாக திகழ்ந்த அக் கண்காட்சியில் பார்வையா ளருக்கான கருத்துப் பதிவு புத்தகமும் இவரால் வைக்கப் பட்டிருந்தது. 1969ல் இவருக்குக்கிடைத்த தாகம்போலவே அந்த மண்ணின் மக்கள் ஒவ்வொருவருக்கும் எங்கிருந்தா லும் இருக்கும். இதற்கு மாற்றுக் கருத்தில்லை. இதன் ஒரு அடையாளமாக அம்மண்ணின் மைந்தர்களில் ஒரு வரின் கருத்து “இக்கண்காட்சியை நிரந்தரமாக்கினால் என்ன?” என்று பதிவு செய்யப்பட்டிருந்தது. அதைப் படித் ததும் நிச்சயம் செய்து கொண்டார். வல்வை மண்ணில் கண்காட்சியாக வைக்கப்பட்ட வல்வையின் ஆவணப் பொருட்கள் வல்வெட்டித்துறையிலேயே நிரந்தரமாக பேணப்பட வேண்டும். அதற்காக ஒரு காட்சியகம் அங் கேயே உருவாக்கப்பட வேண்டும். பெருமைமிகு மண்ணின் வரலாறு, பாரம்பரியம், கலை, கலாச்சாரம் எனத்தேடுவோ ருக்கு வல்வை மண்ணிலேயே ஒரு வாசம் வேண்டும். உறுதியோடு செயல்படலானார். 40 வருடங்களாக மனதில் ஊறிவளர்ந்த கனவு, 20 வருடங்களாக கனடாவில் இயங் கிய கனடா வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம் இன்று வல்வை வரலாற்று ஆவணக்காப்பகமாக எமது மண்ணில் பாதம் பதிக்கிறது. வேரோடி மண்ணோடி விழுதூன்றிய ஆவணக்காப்பகம் எமது மண்ணிற்குப் புதுமை சேர்க்கின் றது. சில பல்கலைக்கழகங்களில் காணப்படும் நூல்நிலையம் தவிர்ந்த ஆவணக்காப்பகங்கள் தேசிய ரீதியாக காணப்படும் தொல்பொருட்காட்சிசாலைகள் தவிர தனி ஊருக்காக எங்கும் ஆவணக்காட்சியகம் இதுவரை இலங்கையில் எங்கும் அமைக்கப்பட்டதாக வரலாறு ஏது மில்லை. அமைக்கப்பட்டதாக வரலாறு ஏதுமில்லை. அமைக்கப் படுமா என்பது சந்தேகமே!

ஆவணக்காப்பகம் அமைக்கப்படுவதற்கு சுருங்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினால் குறிப்பிட்டபிரதேசத்திற்கு நீண்டநெடிய பெருமை மிகு வரலாறும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றாதாரங்களும் ஆவணமாகக் காணப்படவேண்டும். சொல்லவே இனிக்கும் சுவை கொண்ட வல்வை என்ற சொல்லிற்கும் வலிமை அதிகம். வல்வெட்டித்துறை இது பட்டினமோ நகரமோ அல்ல சுவை நிர்வாக அலகுக்கானவை. வல்வெட்டித்துறை இது ஒரு குடும்பப் பெயர். இக்குடும்பத்திற்கு இரண்டாயிரம் வருட நீண்ட நெடிய வரலாறு உண்டு. இலங்கைத்திரு நாட்டின் வம்சவரலாறு கூறும் மஹாவம்சமும் வல்வெட்டித் துறை வரலாறும் கூறும் ஆவணங் களில் ஒன்று சோழரின் வரலாறு கூறும் பட்டினப்பாலையும் வல்வையின் மகிமை கூறும் ஆவணங்களில் இன்னொன்று. இவைபோல் ஆயிரம் ஆயிரம் வரலாறுகள் எம்மிடம் உண்டு. அவைகளின் நிகழ்கால தரிசனமாக இவ் வல்வெட்டித்துறை ஆவணக் காப்பகம் எதிர்காலத்தில்திகழும். வல்வெட்டித்துறை என்ற இனியகுடும்பத்தில் ஏற்றப்படும் குத்துவிளக்கான வல் வெட்டித்துறை ஆவணக்காப்பகத்தை ஏற்றிடும் ந. நகுலசிகாமணி உமா. நகுலசிகாமணி தம்பதியினருக்கு நெஞ்சார நன்றிகள் கூறும் வல்வை மக்களுடன் மக்களாக.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னபூரணிப் படகின் அமெரிக்கப் பயணத்தின் வைரவிழாவும் (1938 -2013) ஆரம்ப நிகழ்வும்

## வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தின் முதலாவது நிகழ்வும்

இரு நிகழ்வுகளும் வல்வைவரலாற்று ஆவணக்காப்பகம் Images of Valvai அமைந்த 'கீதாஞ்சலி' இல்லத்தில் **27-04-2013** காலை **10** மணிக்கு ஆவணக்காப்பக நிறுவனர் ந.நகுலசிகாமணி அவர்கள் தலைமையில் எனது பாடசாலை நண்பரும் உறவினரும் வல்வைக் கோயில்களில் பஜனை செயபவருமான திரு.இ.குக தாஸ் அவர்களின் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது.





எனது பாடசாலை நண்பர் இ.குகதாஸ் தேவாரம் பாடுகின்றார்.



கலைச்சோலை கு.அப்பாத் துரை அவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு நிகழ்வுகளில் ஒன்றான சீமாட்டி அன்னபூரணி யின் அமெரிக்கப்பயணத்தின் 75வது ஆண்டை நினைவு கூரும் வகையில் கப்டன் கலைநேசன், கப்டன் விநாயக மூர்த்தி, கப்பல் பொறியியலாளர் கா.றஞ்சனதாஸ் ஆகியோர் கேக்(cake) வெட்டிச் சிறப்பித்தனர். நகுலசிகாமணி அவர்கள் தமது தலைமையுரையில் "இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம். எமது அன்னை முத்துமாரி அம்மன் திருவிழாவிற்கு வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கும் உறவினர்கள் பலர் இங்கு பெருமளவில் கலந்துகொள்வது மகிழ்ச்சியளிக்கிறது.

இன்று எமது அன்னபூரணி மேற்குநோக்கி அமெரிக்கா சென்று வரலாறு படைத்த வைரவிழாவின் ஆரம்பநிகழ்வை யும், வரலாற்று ஆவணக்காப்பகத்தின் ஒருவருட நிகழ்வையும் சேர்த்துக் கொண்டாடுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. இந்தவிழா ஒரு ஆரம்பநாள். இந்தவருடம் முழுவதும் வல்வையிலும் வெளி நாடுகளிலும் கொண்டாடப்பட வேண்டிய முக்கியநிகழ்வு. அதோடு சென்றவருடம் ஆரம்பிக்கப் பட்ட ஆவணக்காப்பகம் மேலும் வளர்ச்சி கண்டுள்ளது. இணைய தளங்களில் சுற்றுலாத் தளமாகப் பதியப்பட்டு பலர் பார்வையிட்டு வருகிறார்கள். இந்த ஆவணக்காப்ப கத்தினை நீங்கள் அனைவரும் பாதுகாத்து அடுத்த தலை முறையினரிடம் ஒப்படைப்பது உங்கள் கடமை" என்று உணர்ச்சி யுடன் கூறினார்.



அ.யோகானந்தவேல்



ஆ.சிறீதரன் ஆகியோரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்பல்.கப்டன் சிவநேசன், கப்டன்.விநாயகமூர்த்தி,
பொறியிலாளர்.றஞ்சனதாஸ்

வருகை தந்த பிரமுகர்களில் வி.யோகானந்தவேல், சிதம்பராக்கல்லூரி ஆசிரியர், ஆ.சிறிதரன்(பொறியியலாளர்) அவுஸ்திரேலியா, பேராசிரியர் சபா.இராசேந்திரன் சிங்கப் பூர், செ.குட்டித்துரை (மாமாச்சி) லண்டன், கப்பல் பொறி யியலாளர் கா.றஞ்சனதாஸ் வல்வை மாலுமிகள் சங்கத் தலைவர், திரு.கமல் பேராதனைப் பல்கலைக்கழக மாணவன், கு.அப்பாத்துரை (ஆசிரியர்) எழுத்தாளர் ஆகியோர் ஆவணக்காப்பகத்தின் சேவையையும் இதன் முக்கியத் துவம் பற்றியும் உரையாற்றினர். வந்திருந்த அனைவரும் அன்னபூரணி Gloucester துறை முகத்தில் நிற்கும் அழகு மிகு வர்ண Picture post card அனை வருக்கும் வழங்கப் பட்டு கேக், சிற்றுண்டிகள், குளிர்பானங்களும் வழங்கப்பட்டன. அதன்பின்னர் யாவரும் காப்பகத்தில் இந்த வருடம் மேலதிகமாக வைக்கப்பட்டிருந்த வரலாற்று ஆவணங்க ளையும் வரலாறுமிக்கபடங்களையும் பார்த்து வியந்ததோடு எமது புலவர்களின் இலக்கிய சமய வரலாற்று நூல்களையும் ஆவண நினைவுச்சின்னங்களையும் பெற்றுச்சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.கோ.சற்குணபாலன் Bank Manager



பேராசிரியர் சபா ராஜேந்திரன்



முன்வரிசையில் க.வான்மதி, ஜெ.சாந்தி, தி.சிவகாமசுந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிற்குள் நுழைந்த அன்னபூரணி

இலங்கை மாதாவின் சிரசில் அணிந்த முடிபோலத் துலங்கும் யாழ்குடாநாட்டின் உச்சியில் சூடிய சூழாமணி யென இத்தனை திருக்களும் நிறைந்த வல்வெட்டித்துறைக் கடற்கரையில் 27-02-1937ம் தினம் அன்னபூரணி தன் கடல் பயணத்தைத் தொடங்கக் காத்து நிற்கிறாள். திரைகடல் ஓடித் திரவியம் தேடு என்பதே வழக்கம். ஆனால் இங்கே இருந்து கிழக்கு நோக்கிச்செல்லும் கப்பல்கள் திரவியத்தை மட்டுமே தேடிப் போனதில்லை. மன்னுயிர் காக்கும் அன்னத்தையும் தேடித் திரட்டிவந்து அரிசிமூட்டைகளாக இறக்கும். ஆதலால் தானோ இதற்கு அன்னபூரணி எனப்பெயர் சூட்டியுள்ளனர் எனப்பலரும் வியக்கநின்ற நாவாய் கடலைக்கிழித்து மேற்திசை நோக்கிப்போக நகர்ந் தது.

## மேற்திசை நோக்கிய பயணம்

கண்ணுக்கு எட்டும்மட்டும் அன்னபூரணியின் கடற்பய ணத்தை கவனித்தவர்கள் பார்வையில் இருந்துபடிப்படியாக மறைந்ததும் அதில் செல்லும் கடலோடிகளின் மனைவி மக்கள்மனதில் நாளுக்குநாள் துயரம் நிறைகின்றது. விழிநீர் வெள்ளம் வற்றாத வாய்க்காலாக மாறுகின்றது. எண்ணத் திரையி லிருந்து மங்கிப்போன அன்னபூ ரணி அமெரிக்க கனேடிய வட கிழக்கு எல்லைக்கு சொற்ப தொலைவிலுள்ள குளோசெஸ்டர் (Gloucester) துறைமுகத்துள் நங்கூரமிட்டு தனது பயணத்தை முடித்த பெருமிதத்துடன் நிற்கின்றது. இலங்கையிலிருந்து அன்ன பூரணி அம்மாள் என்றசெய்தி மசாசுசெற் (Massachusetts) மாநிலத் தில் பத்திரிகைச் செய்தியாக வருகின்றது. கப்பலைச் செலுத்திவந்தவர்கள் அங்கு வந்துசேர்ந்ததினம் 1-08-1938 எனக்குறித்துக் கொள்கிறார்கள். தமது கடற்பயணத்தை ஒன்றரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடப் பயணம், 18 மாதம், 72 வாரம், 540 நாட் களாகிவிட்டன என நினைத்தாலும் தமக்கு அபயம் தந்த வல்வெட்டித்துறைத் தெய்வமேயெனத் தம் சிரம் தாழ்த்தி கரங்கூப்பி வணங்கு கின்றனர்.

13964

## இது ஓர் பூர்வஜென்ம பந்தம்

அன்னபூரணி பாய்க்கப்பல் இற்றைக்கு எழுபத் தைந்து வருடங்களுக்கு முன்பு நுழைந்த துறைமுகம் உள்ள மாநிலத் திற்கும் (மசாசுசெட்ஸ்) ஈழத்தமிழருக்கும் அதன் பின்னர் 1980 களில் இருந்த தொடர்புகளையும் நாமும் உலகும் அறியும். நிறத் தால், குலத்தால், மொழியால், சமயத்தால் முற்றிலும் வேறு பட்டவர்கள் வாழும் மாநில அரசவையில் ஈழத்தமிழர்கள்படும் துயரங்களை அறிந்து சுதந்திரத்தை இழந்த மக்களுக்கு சுயாட்சி வழங்கவேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி தமிழர் கூட்டணித் தலைவர் அண்ணன் சிவசிதம்பரம் அவர்களை வர வழைத்து அடையாளமாக அதன் தீர்மானத் திறப்பை வழங் கினார்கள். அதன்பின்னர்தான் உலகநாடுகள் இமைகளை இடுக்கியாவது ஈழத்தைப் பார்க்க ஆரம்பித்தன. இந்தப் பரிவுக்கும் அன்னபூரணி அந்தமாநிலத்தே நுழைந்த முன் நிகழ்வுக்கும் இடையில் ஏதோ ஓர் பூர்வஜென்ம பந்தம் உள்ளதோ எனத் தோன்றுகின்றது.

## அன்னபூரணியின் மேற்கத்திய பயணம்

“இன்றிலிருந்து அரைநூற்றாண்டுக்குள் நான் பிறந்து வளர்ந்தநாட்டில் வாழ் ஈழத்தமிழர்களுக்கு பெரும்பான்மை இனத்தவரால் துன்பம் ஏற்படவுள்ளது. அப்போது நீவிர் தான் அவர்களுக்குப் புகலிடம் தரவேண்டும்” என்ற வேண் டுகோளை முன்பாகவே உன்னிடம் சமர்ப்பிக்க வந்துள் ளேன் என்பதுபோல அன்று தனது பாய்களை இறக்கி வைத்து வணக்கம்செய்தாளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேம்புடல்கொண்ட அன்ன பூரணி அன்னை என்றுகற்பனை செய்தாலும் அது முற்றுப் பெற்ற உண்மை என்று இன்று உணர்கின்றோம். பிறந்த கத்திற்கு புகழ் தேடித்தந்த அன்னபூரணி முழுத்தமிழினத் திற்கும் இலங்கைக்கும் புகழ்தேடித்தந்த தமிழர்தம் கடலா ளுமையை விளக்கும் அடையாளச் சின்னமாக வும் நிகழ்ந்து வந்துள்ளாள். அன்னபூரணி குயோசெஸ்டர் துறைமுகத்தில் நுழைந்ததும் அந்த நிகழ்வு மிகப்பெரிய சலசலப்பை ஏற்படுத்தியது. 'பொஸ்டன் குளோப்' என்னும் நாளிதழ் 1938ம் ஆண்டு 8ம் மாதம் 2ம் தினத்தன்று (அப்போது அதன்விலை 2சதம்கள்) வெளியிட்ட செய்தியின் தலைப்பு: பிறிகன்ரைன் முடித்த கடல்பயணம் இலங்கையில் இருந்து வந்த அற்புதமான நிகழ்ச்சி கடல் பயணத்தைப் பற்றிய அரிய தகவல்கள். எழுதியவர்: நாற் ஏ.வறோஸ்.

89அடி நீளமான புளோறன்சி றொபின்சன் என்னும் பிறிகன்ரைன் ரக (அன்னபூரணியின் புதியபெயர்) பாய்க் கப்பல் ஒன்று குளொசெஸ்டர் துறைமுகத்தை அண்மித்து நங்கூரம் இட்டுள்ளது.

அன்னபூரணி பாய்க்கப்பலின் நிழற்படத்துடனான வருகை பற்றிய செய்தி

அன்னபூரணி பாய்க்கப்பல் யாருக்காக யாரால் வல்வெட்டித்துறையிலிருந்து தருவிக்கப்பட்டதோ அவரது வரலாறு:

அன்னபூரணியை இந்துசமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம் ஆகிய இரு சமுத்திரங்களுக்கூடாகவும், அவற்றுக்கு இடைப்பட்ட வங்கக்கடல், அரபுக்கடல், செங்கடல், மத்திய தரைக்கடல், பேர்மியூடாக்கடல் ஆகிய கடல்களுக் கூடாகவும் செலுத்திவந்த திறனும் விறலும்மிக்க வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகள் பற்றியது.

பாய்களின் உதவியுடன் மட்டும் மேற்குச் சமுத்திரங் களின் கடைசி மொத்த காற்றுவழிக் கலம் இதுவே எனலாம். சூறாவளிகள், புயல்கள், தாகம், உணவுப் பற்றாக்குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் மத்தியில் சிதைந்து போகத்தக்க பல அபாய நிலைகளைக் கடந்து வந்த இந்தக் கப்பலின் மேற்தளத்தில், அந்த மதியவேளையில் ஒரு முதிய குளொசெஸ்டர் வாசி, தலைப் பாகை வேட்டி அணிந்த இலங்கையரான ஐந்து வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இந்துக் கடலோடிகள் கனகரெத்தினம். தம்பிப்பிள்ளை அகவை 48, தண்டையல் சின்னத்தம்பி. சிதம்பரப்பிள்ளை அகவை 28, தாமோதரம்பிள்ளை. சபாரத் தினம் அகவை28, பூரணவேலுப்பிள்ளை. சுப்பிரமணியம் அகவை 29, ஐயாத் துரை. இரத்தினசாமி அகவை 24 என்பவர் எனப்பல செய் திகளை அந்தப் பத்திரிகை வெளியிட்டிருந்தது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி ஆங்கிலேயரிடம் இருந்து சுதேச கப்பல் வணிகத்தை ஆரம்பித்த சமகாலத்தில் வல்வெட்டித்துறையில் கட்டிய அன்னபூரணியை அமெரிக்கர் ஒருவர் கொள்வனவு செய்ததையும், அதை தனது நாட்டிற்கு கொண்டு சென்றதையும் ஒப்பிட்டுப்பார்த்தால் வல்வெட்டித் துறைக் கடலோடிகள் மிகமிக கெட்டிக்காரர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தில் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்போம்

## வல்வெட்டித்துறையில் ஆவணக்காப்பகத்தில் இடம்பெற்ற ஒருங்குகூடல்...

எமது அன்னை முத்துமாரியின் தீர்த்தத் திருவிழா வின் மறுநாள் 05- 05- 2015 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு ஊரிக்காடு, ஆவணக்காப்பகத்தில் ஒருங்கு கூடல் நடைபெற்றது. திருவிழாவிற்காக வெளிநாகளிலிருந் தும் மற்றும் கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு மலைநாடு போன்ற இடங்களி லிருந்தும் வந்திருந்த ஊரவர் கள், பெரியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் ஒருங்கு கூடலில் கலந்து சிறப்பித்தனர். ஒருங்குகூடல் ந.சீவரத்தினம் தலைமையில் வணக்கத்துடன் ஆரம்பமாகியது. அவரது தலைமை உரை யைத்தொடர்ந்து கனடாவிலிருந்து வந்திருந்த எனது ஆத்ம நண்பர் திரு. கனக. மனோகரன் உரையாற்றும்போது



திரு.கனக மனோகரன் மற்றும் பிரமுகர்களுடன்



திரு.சிவாஜிலிங்கம், திரு.சீவரத்தினம் Bank manager

"எங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒரு தொடர் வண்டிப் பயணம்போன்றது. பலர்பயணிக்கிறார்கள். சிலர் இடையில் இறங்கிவிடுகிறார்கள். சிலருடன்தான் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பயணம் நடைபெறும். அப்படிசின்னவயதில் தொடங்கிய நட்பு இன்றுவரை தங்கு தடையின்றி தொடரும் நட்பு எனக்கும் நகுலசிகாமணி குடும்பத்தினருக்கும் உள்ளது. இளவயதில் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி, வாசிக சாலை நிர்வாகம் போன்றவற்றில் இணைந்திருந்தோம். அந்த நாளிலிருந்தே நகுலனின் மனப்போக்கை அறிவேன். தலைவர் தனதுரையில் கூறியதுபோல் ஈடுசெய்ய முடியாத மீண்டு வர முடியாத தனதுநிலையில் தனது பெயருக்கு முன்னால் வல்வையை வைத்துப் பலநூல்களை மீள்பதிப்புச்செய்து, என்னுடைய கட்டுரைகளையும் தொகுத்து "மனோ மணி மலர்கள்" என்றநூலையும் வெளியிட்டுள்ளார்



திரு.க.சக்திவேல், திரு.கோ.செல்வநாயகம், திரு.யோகானந்தவேல்,
திரு.கு.அப்பாத்துரை, திரு.மீனாட்சிசுந்தரம் திரு.குலநாயகம், திரு.ரவீன்குமார்,



திரு.கோபி, திரு.ஜெயவீரசிகாமணி, திரு.சக்திவேல், திரு.குகப்பிரசாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் எமது ஊர்வழிவந்த மட்டுநகர் ஈழத்துப்பூராட னாரின் "வல்வெட்டித்துறை கடலோடிகள்" என்ற நூலில் 'வரலாற்று விற்பன்னர் நகுலசிகாமணி' என குறிப்பிட்டுள் ளார். இச்சிறப்பை நண்பர் பெற்றார் என்றால் "வசிட்டர் வாயினால் பிரம்மரிக்ஷி" பட்டம்பெற்றது போலாகும். இன்று தான் இந்த ஆவணக்காப்பத்தின் உள்ளே எனக்கு பார்க்க வரமுடிந்தது. எந்த அளவிற்கு சிரத்தை எடுத்து காலத் தால் அழியக்கூடாத வற்றை, புதையல்களை சேகரித்து நாளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் காவியாக அவர்கள் இருவரும் செய்யும் செயற்பாட்டிற் காக இதயபூர்வமாக நன்றி கூறி அவர்கள் அர்ப்பணிப்பு தொடர எல்லாம்வல்ல முத்து மாரியம்பாள் அனுக்கிரகம் கிடைக்க அந்த இறையருளை இறைஞ்சி அமர்கின்றேன்" என்றார்.




திரு.நகுலசிகாமணி, Dr.சத்தியசீலன் கப்டன்.சிவநேசன், கப்டன்.சண்முகதாஸ், சீவரட்ணம் (Bank manager)



நடுவில் நிற்பவர் லண்டன் குட்டித்துரை (மாமாச்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்துப் பூராடனாரின் "வல்வெட்டித்துறைக் கடலோடிகள்" நூல் முகப்பு
படத்தில் தெரிவது விண்ணிலிருந்து வல்வெட்டித்துறை





திரு.வ.ஜெயவிந்தன், சங்கீதபூசணம்.
வெ.முத்துச்சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துப் பேசிய திரு.சிவாஜிலிங்கம் "இன்று நாம் எமது ஊர்பற்றி இதுவரை கேள்விப்படாத பார்த்திராத பொக்கிஷங் களையும் நூற்றாண்டு கடந்த வல்வைப் பெரியவர்களின் புத்தகங்களையும் எம்மிடம் ஒப்படைத்துள் ளார்கள். இங்குள்ள புத்தகங்களை எடுத்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வல்வைப் புலவர்கள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிச் சமர்ப்பித்துள்ளார் என்பதையறிந்து மகிழ்ச்சியடைந்தேன்" என்று கூறினார்.

திரு.சிவநேசன், திரு.யோகானந்தவேல், திரு.அப்பாத் துரை மாஸ்டர் ஆகியோர் "தம்பி நகுலசிகாமணி இளவயதில் மனதில் உதித்த ஆவணக்காப்பகத்தினை தமது சொந்த நிதியத்தில் நிறுவி பராமரித்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். இங்கு வரும் உல்லாசப் பயணிகளும் இதில் கவரப்பட்டு பார்த்துச்செல்கின்றனர். குறுகிய காலத் தில் யாரும் நினைத்துப் பார்க்க முடியாத மகத்தான சாதனை" எனப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

இறுதியில் நகுலசிகாமணி ஐயா அவர்கள் அங்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூறி அங்கு உரை யாற்றிய அனைவரின் வேண்டுகோளான இக்காப்பகத்தை தன்னால் இயன்றவரை தொடர்ந்து நடாத்தக்கூடிய வழி வகைகளைச் செய்வேன் என்று உறுதி அளித்தார். வருகை தந்தோர் அனைவரும் வியப்புடன் பார்வையிட்டு விருந்தோம்பலில் பங்கெடுத்து இனிய நினைவுகளுடன் திரும்பினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் வரலாற்றுச் சுவடுகள்
# Historical Anecdotes of Sri Lankans Tamils

ந.நகுலசிகாமணி, உமா

*கனடாவில் பலதரப்பட்ட சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் வெளியிடப்பட்டது.*


*கே.சியாமளன்*

கடந்த ஒக்டாபர்-8-சனி மாலை ஸ்கார்பரோ நகர சபை மண்டபத்தில் திரு.வீரசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் திரு.சோமசச்சிதானந்தம்(பொதுநல சேவையாளர்) அவர்களின் தமிழ்த்தாய்வாழ்த்தும், கனேடியதேசியகீதமும் பாடியபின், இலங்கையில் அனைத்துப் போராளிகள் மக்களுடன், சந்துரு சௌமியன் ஆகியோருக்கும் வணக்கம் செலுத்தப்பட்டது.

பின்பு பிரமுகர்களின் உரையும் நூல் அறிமுகமும் ஆரம்பமானது. ரொராண்டோ அண்ணாமலைப் பல்கலைக் கழக பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்கள் வரலாறு பாது காக்கப்படவேண்டிய அவசியத்தைக் கூறி இந்தக்கடின பணியை பலவருடங்களாக நகுலசிகாமணி அவர்கள் ஆற்றி வருவதை நான்நன்கறிவேன் என்றார். அடுத்து பாராளு மன்ற உறுப்பினர் திரு.ஹறி.ஆனந்தசங்கரி இரண்டுநாட் களுக்கு முன்னர் கனடிய பாராளுமன்றத்தில் "தமிழ்மரபு ரிமைமாதம்"பற்றி சட்டவாக்கம் நிறைவேற்றியபின்னர், முதலாவதாக இங்கு வருகைதந்த பொழுது அவருக்கு uncle நகுலசிகாமணி அவர்கள் மல்லிகை மாலையணிந்து கௌரவித்தார். திரு.ஹறி.ஆனந்தசங்கரி உரையாற்றும் போதுதான் இங்குவருவதற்கு முக்கிய காரணியாக இருந்தது, சந்துரு சௌமியன், கனடிய இளையோர் அமைப்பி னூடாக சுனாமி நிதிசேர்ப்பின்போது அதிக பணம் சேர்த்து உதவியவர் என்பதையும், தான் சந்துருவுடன் பழகியநாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சட்டத்தரணி, பா.உ. திரு.ஹரி.ஆனந்தசங்கரி, திரு.ந.நகுலசிகாமணி

இன்றும் என்மனதில் உள்ளது. இவர்களது பெற்றோர் இந்தப் பணியோடு நின்றுவிடாமல் தாயகம்சார்ந்த வேறுபணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்நூலை ஆங்கிலத்திலும் வெளிக் கொணர்ந்திருப்பது மேலும் சிறப்பானதாகும்.




சட்டத்தரணி திரு.கனக.மனோகரன்




சட்டத்தரணி திரு.தம்பையா .ஸ்ரீபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதி கோயில்
பிரதமகுரு பொன்.புவனேந்திரா






சத்தியசீலன்
சேதுமாதவன்

திரு.கனகமனோகரன் தனது உரையில் நகுலன் வரலாற்றுப் புதையல்களைத்தேடி அவற்றை அரும்பெரும் ஆவணக்காப்பக மாக, காவியமாக பொருட்செலவில் ஆக்கி யுள்ளார். வல்வைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் யாவரும் சிதைந்துகிடக்கும் திரு.பிரபாகரன் வாழ்ந்த இல்லத்தையும்வரலாற்று ஆவணக் காப்பகத்தையும் பார்ப்பதற்கு தவறுவதில்லை. எனக்கும் அதைப்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நண்பன் நகுலன் ஔவையின்கூற்றுப்படி "திரைகடல் ஓடித்திரவியம்தேடு" என்பதற்கு அமையதிரவியம் தேடிய தல்லாமல் 18 நூல்களையும் தேடியும், எழுதியும் 18 குழந்தைகளாக நிலைத்துநின்று வாழக் கூடிய குழந்தைகளாக எமக்குத் தந்துள்ளார். அவர்கள் செயற் பாட்டிற்காக எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள். சட்டத் தரணி சிறிபதி "நண் பன் நகுலசிகாமணி நூலில் பலவிடயங்களை எழுதியுள்ளார்கள். அரசியல்பற்றி சமநிலையில் யாரையும் புண்படுத் தாமல் எழுதியமைபற்றிகூறி மறுபதிப்பு வருமாயின் மேலும்பலவிடயங்கள் சேர்த்து வெளிவர வேண்டுமென தனது விருப்பத்தைக்கூறினார். அதன் பின்பு திரு. ஈழவேந்தன், கவிஞர்.கந்தவனம், திரு. பொன்னையா. விவேகானந்தன், உதயன் ஆசிரியர் திரு.லோகேந்திரலிங்கம், திரு.பொன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தக வெளியீட்டிற்கு வந்த சபையோரில் ஒரு பகுதியினர்

புவனேந்திரன். திரு.மு.தியாகலிங்கம் ஆகியோரின் சிறப்பான உரையைத் தொடர்ந்து திரு. லோகன்கணபதி (மாக்கம் நகரசபை உறுப்பினர்) தனது உரையின் இறுதியில் மாக்கம் மேயர் உறுப்பினர்கள் சார்பில் வாழ்த்துமடலை நூலை எழுதிய நகுலசிகாமணி, உமா.நகுலசிகாமணிக்கும் வழங்கினார். அவர்கள்திரு.சேது மாதவன்(வல்வை) ஆங்கிலத்தில் இந்நூலின் சிறப்புப்பற்றி உரை யாற்றினார்.

ஏற்புரையில் நகுலசிகாமணி இன்று பல நிகழ்ச்சிகள் இருந்தும் நேரத்தை இதற்கென ஒதுக்கி தனது அழைப்பை ஏற்று வந்தவர்களுக்கும், இலவசமாக எமது நிகழ்ச்சியை ஒலிபரப்பிய தமிழ்வண், ரிவிஐ, வானொலி கள், பத்திரிகைகள் யாவருக்கும் நன்றிதெரிவித்தார். இலங்கைத் தமிழ் அரசியல் பிரவாகத்தில் அணில்போல நானும்ஒருவன். இலங்கைத்தமிழர் வரலாற்றை ஒருநூலாக எழுதவேண்டும் என்ற விருப்பத்திற்கமைய பின்பகுதியில் 25 பகுதிகள் எமது கடந்தகால அரசியல் வரலாற்றை எழுதியுள்ளேன். நான் திரட்டிய நூல்களை ஆதாரமாகவும் வர்ணப்புகைப் படங்களாகவும் கூடவே ஆங்கிலத்திலும் இருப்பதைக் நீங்கள் காணும்போது தெளிவும் உணர்வும் நெஞ்சில் நிலைத்திருக்கும் என நம்புகிறேன் என கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.லோகன் கணபதியிடம் பாராட்டுப்பத்திரிகை
Councillor - Markham நகரம் திரு.லோகன்.கணபதி அவர்களிடம்
பாராட்டுப்பத்திரத்தை பெறும்போது

மின் அஞ்சல் மூலம் பலர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந் தார்கள். Dr.கேதாரன்.யோகசிகாமணி குடும்பம், சந்திரசிகாமணி (சிவாகுடும்பம்) ஆகியோர் லண்டனில் இருந்து சித்தப்பா! சின்னம்மா! உங்கள் செயற்பாட்டிற்கும் நூல்வெளியீடு சிறப்பாக நடைபெறவும் நல்வாழ்த்துக்கள்.

தமிழ்நாடு மறவன்புலவு: திரு.சச்சிதானந்தன், தமிழறிஞர் (காந்தளகம் அச்சகம் தமிழ்நாடு) அவர்களின் வாழ்த்துச் செய்தி :

"வல்வைத் தமிழர் வளமான இலக்கிய ஊட்டர்கள்
சொல்லில் சுவையைப் பெருக்கும் கருத்துத் தேட்டர்கள்
எல்லைக் கப்பால் கனடாவில் அவற்றைக் காட்டுவோர்
வல்வை நகுலரும் உமையும் தமிழின நாட்டார்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GREETINGS FROM THE CITY OF MARKHAM

On behalf of the Mayor and Members of Markham Council
I am pleased to extend my best wishes to

**MR. NAGULASIGAMANY &**
**MRS. UMA NAGULASIGAMANY**
Authors

on the launch of their book,

**இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள்**
**HISTORICAL ANECDOTES OF SRI LANKAN TAMILS**
on
October 8, 2016 at the Scarborough Civic Centre, Toronto, ON

Thank you for enriching Tamil literature and documenting the history of Sri Lankan Tamils through your book. Your extensive research on the subject and contribution to Canadian Tamil literature is commendable.

Congratulations!

**Logan Kanapathi**
Councillor – City of Markham

டென்மாக் திரு. கி. செல்லத்துரை (எழுத்தாளர், படத் தயாரிப்பாளர்) சுமார் 25 வருடங்கள் கப்பல் மாலுமியாக உலகின் பலஇடங்களுக்கும் சென்ற இவர், போர்காரணமாக கனடாவில் குடியேறினார். ஆனாலும் அவருடைய செயற்பாடு கள் ஓய்ந்துவிடவில்லை. 1997ம் ஆண்டு "வல்வெட்டித் துறை வரலாற்றுச் சுவடுகள்" என்ற நூல் வெளிவந்தபோது இவரை யாவரும் திரும்பிப் பார்த்தார்கள். நூலின்மேல் பல விமர்சனங் கள் வருமளவிற்கு தாக்கமான பணியாக இருந்தது. அதன் பின்பு இரண்டாம் பதிப்பை வெளியிட்டு தற்போது "இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள்" என்ற நூலை உலக மன்றில் புதுவரவு கொடுக்கின்றார். நகுலசிகாமணி அவர்களுக்கும் அவரது மனைவிக்கும் எனது வாழ்த்துக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் தமது வரலாற்றைத் தொலைத்து விட்டார்களா? இல்லையா? வேண்டும் ஒரு விவாதம்



வி.என்.மதிஅழகன்,
கனடா TVI தொலைக்காட்சி நிர்வாகி


வரலாற்றை ஆவணமாக்கும் பணிகளில் அர்ப்பண சிந்தையோடு அயராது பாடுபட்டு வருபவர் ந.நகுலசிகாமணி. அவர் தனது துணைவியார் உமாவுடன் இணைந்து எழுதிய "இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள்" என்ற நூல் அண்மையில் வெளியிடப்பட்டிருக்கிறது. நகுலசிகாமணி உமா தம்பதியினர் தமது புதல்வர்கள் சந்திரசேகர், சௌமியன் நினைவாக எழுதியநூல் "யாழ்ப்பாணத் தமிழரின் மாட்சியும், வீழ்ச்சியும்" தொடக்கம் "வல்வை வர லாற்று ஆவணக்காப்பகம்" வரை நூறு பயனுள்ள கட்டுரைகளின் தொகுப்பாக அமைந் துள்ளது. அவை பக்கச்சார் பற்றவை. நூலின் அதிவிசேடமான தன்மை இதுதான்.

ஸ்காபரோ சிவிக்சென்ரர் மண்டபத்தில் வெகுசங்கை யாக நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவிற்கு நாமும் அழைக் கப்பட்டிருந்தோம். தமிழரசுக்கட்சியின் திருகோண மலை மாவட்ட தமிழரசுக்கட்சி பிரமுகர்களில் ஒருவரான வீரசுப்ர மணியம் தலைமை தாங்கினார். நகுலசிகாமணியும் உமாவும் வெளிநாட்டுத்தமிழ் இளைஞர்களை மனதில்வைத்துத் தொகுத்த நூல். அதனால்தான் ஒவ்வொரு கட்டுரைக்கும் அதில் ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பினை சேர்த்திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது பாராட்டுக்கள். ஆனால் மண்ட பத்தில் இளைஞர் வருகை அருகியிருந்தமை மனதை நெருடவைத்தது. நூல் வெளியீட்டு விழாவில் பேசியவர்களில் பலர் வீரசுப்பிர மணியம் ஆரம்பித்த பாணியில் அரசியல் மணத்தையும் வீசச் செய்தனர். சட்டத்துறை வல்லுனர் தம்பையா.ஸ்ரீபதி வரலாற்றில் இன்னும் சேர்க்கப்பட வேண் டிய பலவிடயங்களை நூலாசிரியருக்கு சுட்டிக்காட்டவும் தவறவில்லை. தம்பையா. ஸ்ரீபதி அவர்கள் நூலை பக்கம் பக்கமாக வாசித்துத் தயார் படுத்திப் பேசியது மிகவும் பாராட்டத்தக்கது.



பார்வையாளர்களில் ஒரு பகுதியினர்

பேராசிரியர் இ.பாலசுந்தரம் பேசுகையில் "தமிழர்க ளாகிய நாம் எமது வரலாற்றைத் தொலைத்து விட்டோம்" எனக்கூறி தமது ஆதங்கத்தை வெளியிட்டார். அவரை அடுத்து வாழ்த்துரை வழங்கிய கவிநாயகர் கந்தவனம் "தமிழர்கள் வரலாற்றைத் தொலைக்கவில்லை" என அழுத்தம் திருத்தமாகக் கூறி தமது எதிர்வாதத்தைப் பதிவு செய்து கொண்டார்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் வரலாற்று நூல்கள் அவ்வப்போது வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. இவர்கள் இருவரும் கூட தமிழர் வரலாற்றைப் பதிவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்கள்தான். இருந்தாலும் ஒரு புதிய விவாதத்திற்கு வழி வகுத்திருக்கிறார்கள். இந்த விவாதம் தொடரவேண்டும். விழிப் புணர்வொன்றுக்கு வழி வகுக்க வேண்டும் என்பதை ஸ்காபரோ றூஜ்பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி. ஆனந்தசங்கரி, இலங்கை முன்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், சட்டத்தரணி கனக மனோகரன் ஆகியோரின் உரைகளும் வலியுறுத்தவே செய்தன. அது அவ்வாறிருக்க "நந்தாப்புகழ் பெற்ற நாய கன்" நடிகமணி வி. வைரமுத்துவிற்கும் இந்நூலிற்கும் இட மளித்திருக்கிறார்கள். அவருடன் நட்புப்பூண்டிருந்த இந்த ஒலிபரப்பாளரின் உள்ளம் உவகையால் பூரிக்கிறது.

நகுலசிகாமணி, உமா இருவரினதும் பணி தொடரட் டும். அதற்கான திராணியை இறைவன் தரட்டும். யாருக் காக எழுதினீர்களோ அவர்கள் அனைவரும் உங்கள் பிள்ளைகள்தான். அவர்கள் தோள்களில் சாய்ந்துகொள்ள உங்களுக்கும் இடம் இருக்கிறது. அந்த உள்ளார்ந்த மனோ பலத்துடன் ஆவணப் பணிகளை இருவரும் முன்னெ டுக்க வேண்டுமென தமிழ் கூறும் நல்லுலகம் எதிர்பார்த் துக்காத்திருக்கிறது.

**கனடாவின் 150ம் பிறந்ததினத்திற்கு 2018 ஜூலை 1ம் திகதி "கனடாவில் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வரலாறும்" என்ற நூல் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களால் வெளியிடப் பட்டது. அந்த நூலில் எமது ஆவணக் காப்பகம் ஒரு பக்கம் இடத்தைப் பிடித்துக் கொண்டது.**

ரொராண்டோவில் இயங்கி வரும் வல்வெட்டித்துறை ஆவணக் காப்பகம் இலங்கை வரலாறு தொடர் பான நூல்களை, கட்டுரைகள் முதலான ஆவணங்களைச் சேகரித்துக் கனடாவி லும் தாயகத்திலும் ஆவணக்காப்பகம் அமைத்து பாதுகாத்து வருகிறது. திரு. வல்வை. ந. நகுலசிகாமணி இரண்டு தசாப்தங் களுக்கு மேலாக இப்பணியைத் துணைவியுடன் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு வருகின்றனர். இவர் கள் 1997ல் "வல்வெட்டித் துறை வரலாற்றுச் சுவடுகள்" என்ற அரிய ஆவணநூலை வெளியிட்டார்கள். இந்நூல் வடமராட்சிப் பிரதேச வரலாற்றை ஆராய்வதற்குரிய அரிய பல தகவல்களைக் கொண்டதாகும். இந்நூல் கிடைப்பது அரியதாகியமையால் மீண்டும் அதனை 2006இல் இரண் டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளனர். 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற நூல் க.வேலுப்பிள்ளை என்பவரால் 1918ல் எழுதி வெளியிடப்பட்டதாகும். இந்நூல் கிடைப்பது அரிதாகிய நிலையில், இதன் முக்கியத்துவம் அறிந்து பழையநூலைத் தேடிப்பெற்று 2001ல் அதனையும் 'கந்தர லங்காரம்' என்னும் 1800இன் பிற்பகுதியில் எழுதப்பட்ட நூலையும் வெளியிட்டிருந் தனர். 2016ல் "இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள்" என்ற நூலை வெளியிட்டனர். ஈழத்தில்வாழ்ந்த தமிழ்ப்பெரியார்கள், ஈழத்து வரலாற்றுத் தலங்கள், அரசியல் வரலாறு, சமயம், இலக்கியம், பண்பாடு எனப்பல்வேறு விடயங்களைத் தேடி ஆராய்ந்து 100 கட்டுரைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் நகுலசிகா மணி எழுதி வெளியிட்டுள்ளார். ஈழத்தமிழர் பற்றிய பல் வேறுவிடயங்கள் இந்நூல் ஈழத்தமிழர் வரலாற்றுத் தரவு கள் கொண்ட அரியதோர் ஆவணமாகும்.





288453

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையில் அகில் எழுதியது:



கொழும்பில் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரினால் வெளிவரும் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையின் 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்த, 175வது சிறப்பிதமிழில் 408ம் பக்கம் எமது ஆவணக்காப்பகம் இடம்பெற்றுள்ளது. கனடாவில் வாழும் திரு.அகில் எழுதியுள்ளார் தமிழ் எழுத்தாளர் இணையம் (tamil authors.com) நடத்துபவர். சிறுகதை எழுத்தாளர். தமிழ் நாட்டில் சிறுகதைகளுக்கான பல பரிசுகளைத் தட்டிக் கொண்டவர்.

**பதிப்பு முயற்சிகள்:**

மறைந்து அழிந்துபோகும்நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்களை தேடி அச்சிட்டுப் பதித்த தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையரைப் போல கனடாவாழ் வல்வை ந.நகுலசிகாமணி பழைய நூல்களைத் தேடிப் பிடித்துப் மீள்பதிப்பித்துவருகின்றார். இவர் பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களை இதுவரை பதிப்பித்துள்ளார். 'வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்' முதலாம் பதிப்பு 1997, 'கந்தரலங்கார மூலமும் வல்வை வைத்தியலிங்க பிள்ளை எழுதிய உரையும்' - 1912, 'யாழ்ப்பாண வைபவகௌமுதி'- வசாவிளான் கல்லடி வேலுப்பிள்ளை -1918, 'யாழ்ப்பாண வைபவ மாலை'- மயில்வாகனப் புலவர் -1884, 'சேர்.பொன்.அருணாசலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவர்களின் வாழ்க்கை வரலாறு', 'வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்'- இரண்டாம் பதிப்பு- *2006*, 'நீச்சல் வீரன் நவரத்தினசாமி'- லியோன்பிள்ளை- *1954*, 'தொண்டைமானாறு செல்வச் சந்நிதியும் வரலாறும்'- செ.நாகலிங்கம் *1974*', 'சிவராத்திரி புராணம் வைத்தியலிங்கபிள்ளை உரை'- *1881*, \S.J.V. செல்வநாயகம் A TRIBUTE"- *1978* - RE - OPENING OF NORTH CEYLON, PORT, - *1951*இ கந்தபுராணத்தில் தெய்வானை திருமணப் படலம்- 'ச.வயித்தியலிங்கபிள்ளையின் உரை- *1889*', 'திருக்குறள் அதிகாரச்சாரமாகிய திருக்குறள் தாலாட்டு' வல்வை கணேச பண்டிதர்- *1919*, 'திருமுருகாற்றுப்படை'- உரை ஆறுமுக நாவலர்- *1853*, 'மறைசையந்தாதி'- நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்- *1913*, 'மாரியம்மன் மான்மியம்'- *1972*, 'உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் வரலாறும் ஆக்கங்களும்'- வல்வை ந.நகுலசிகா மணி- *2010*, கல்வளையந்தாதி மூலமும் உரையும்- பழைய நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்- *2012* முதலான நூல்களை தனி மனிதராக நின்று மீள்பதிப்பு செய்துள்ளார். அதுமட்டுமல்லாது இவர் பல அரியநூல்களை சேகரித்து வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம் என்ற பெயரில் நடத்திருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் ஆவணங்கள் ஆவணப்படுத்துதல் -வரலாறு -அதன் முக்கியத்துவம்

இராசையா மகேஸ்வரன்
(B.A(Hons), Master of Library & information Science)
*சிரேஷ்ட துணைநூலகர், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை*

**அறிமுகம்**

உலகில் சகல நாடுகளிலும் ஆவணக்காப்பகங்கள் உண்டு. ஆவணக்காப் பகங்கள் என்பது குறிப்பேடுகளை, வெளியீடுகளை தொகுத்துவைத்து பாதுகாக்கும் இடமாகும். இன்றைய ஆவணங்களை வருங்காலத்தவர்களுக்கு பாதுகாத்து வழங்குவது இதன் பணிகளுள் முக்கியமானதாகும். இலங்கையில் ஆவணப்பாது காப்புக்கு நீண்டகால வரலாறு உண்டு. மூன்றாம் நூற்றாண்டில் மன்னர் காலந்தொட்டு இலங்கையின் பௌத்த மடாலயங்களிலும், கோயில்களிலும், நூல்கள் பாதுகாக்கப் பட்டும், பயிலப்பட்டும் வந்துள்ளன. மகா விகாரைகள், அபயகிரி விகாரை ஆகியன ஆவணப்பாதுகாப்பு நிலையங்களாக விளங்கி யிருந்தன. இலங்கையில் 3ம் நூற்றாண்டுமுதல் ஆவணப் பாதுகாப்பு ஆரம்பிக்கப்பட்டபோதும் ஐரோப்பிய ஆட்சிக் காலத்திலேயே 16ம் நூற்றாண்டில் ஆவணப்படுத்துதல், நூலகம் என்பன முறைப்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்டைக்காலத்தில் மன்னர்களால் வழங்கப்பட் டவை குறித்து வைத்த ஆவணம் "பின்பொத்"(Pinpoth) என அழைக்கப் பட்டது. இதனை வைத்துக்காத்தவர் "பொத்வருன்"(Poth Varun) நூல்காப்பாளர் என அழைக்கப்பட்டுள்ளனர். கோட்டை இராச்சிய காலத்தில் (1415-1597)மன்னரால் வழங்கப்பட்ட வாய் மூல தண்டனைகளைக் குறிவைத்த "முகவெட்டி" (Mukavetti) என்ற ஆவணம் பயன் படுத்தப்பட்டதாகவும், கண்டி இராச்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் ஆவணங்களை மகாமோட்டி (Maha Moutti) பாது காத்ததாக வரலாறுகளில் காணப்படுகின்றன. இக்காலத்தில் மன்னர்கள் கொடையாக வழங்கிய காணிகளுக்கான ஓலைச் சீட்டு (olai Sittu; 'Cul Put') என அழைக்கப்பட்டதுடன் இவ்வாவணங்களை எழுதுபவரும், பாதுகாப்ப வரும் “எழுதுனர்” (liannah) எனவும் அழைக்கப்பட்ட தாகவும் வரலாற்றில் காணப் படுகின்றது. அநுராதபுரத்தில் மன்னரது இரச்சியநிதிக் கணக்குகள் “பண்டக பொத்தகம்” (PandakaPottagam) என அழைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றினை கூறும் மகாவம்சம், சூளவம்சம் என்பன தீபவம்சம் (Dipawamsa, Attakatha) என்னும் 4ம்-6ம் நூற்றாண்டு ஆவண ஏடுகளைத் துணைக் கொண்டு எழுதப்பட் டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ்ப் பிரிவின் பொறுப்பாளராகப் பணியாற்றும் இ.மகேஸ்வரன் அவர்களால் எழுதப்பெற்று தமிழகத்தில் 2010இல் நடை பெற்ற தமிழ்ச்செம்மொழிமாநாட்டில் வாசிக்கப்பட்டகட்டுரை இதுவாகும். ஆய்வாளரின் அனுமதியுடன் மீள்பிரசுரமாகின் றது. இக்கட்டுரை இலங்கையில் வெளியிடப் பெற்றதும் நூலுருவில் வெளியானதுமான இலங்கையரின் தமிழ் ஆவணங்களின் பதிவேடான இலங்கைத் தேசிய நூல் விபரப்பட்டியலிலை ஆய்வு செய்வதுடன் நூல்தேட்டம் தொகுதிகளுடன் அதனை ஒப்புநோக்குகின்றது.

போர்த்துக்கேயரே(1515-1656) ஆவணப்படுத்துதலை 16ம் நூற்றாண்டில் ஆரம்பித்துள்ளனர். ஒல்லாந்தர் (1640-1796) போர்த்துக்கேயரிடமிருந்து கொழும்பை 1656இல் கைப்பற்றிய போது ஆவணப்படுத்தப்பட்ட ஆவணங்களைக் கையளிக்க மறுத்து போர்த்துக்கேயர்கள் அழித்துள்ளனர். ஒல்லாந்தர் 1660-1662காலப்பகுதியில் ஆவணப்படுத்துனர் (Record Keeper Mr.Pieter de Bitter) நியமிக்கப்பட்டுள்ளார். இக்காலத்தில் பல நிர்வாகப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு என ஆவணப்படுத்துதல் ஆரம்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளது. ஒல்லாந் தர்களிடமிருந்து பிரித்தானியர்(1796 1947) இலங்கையை கைப்பற்றியபோது 1798இல் ஒல்லாந் தரினால் (டச்சுக்காரர்) ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 1815இல் கண்டி இராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப் பட்டபோது கண்டி ஆவணங்கள், அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிர்த்தானியர் ஆட்சிக்காலத்தில் மாவட்டக்காரியால யங்களில் ஆவணக்காப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 1870களில் நூலகங்களும், 1877ல் நூதனசாலையும் நூல கமும் (Museum and Library) ஆரம்பிக்கப்பட்ட பின் உள்ளூர் வெளியீடு கள் சேர்க்கப்பட்டுள்ளன. அச்சகம் மற்றும் வெளியீட்டாளர் சட்டம் 1885ல் கொண்டுவரப்பட்டுள்ளது. இலங்கை 19ம் நூற்றாண்டிலே நூல்கள் ஆவணப் படுத்தலை ஆரம்பித்துள்ளது. 1902ம் ஆண்டு ஆவணக் காப்பாளர் பதவிக்கு ஒருவர் நியமிக்கப் பட்டு கொழும்புக் கச்சேரியில் ஓர் அலுவலகமும் அமைக்கப் பட்டுள்ளது. 1902ம் ஆண்டு ஆவணப்படுத்தலில் ஒரு திருப்பு முனையாக ஆவணப்படுத்தல் மீண்டும் மாவட்டமட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கண்டி, யாழ்ப்பாணம், காலி, கொழும்பு ஆகிய இடங்களில் நூதனசாலைகள் (Museum) ஏற்படுத் தப்பட்டுள்ளன. 1942-1943 காலப் பகுதியில் 2ம் உலக யுத்தகாலத்தில் ஜப்பான் கொழும்பில் குண்டு போட்டதால், ஆவணக்காப்பகம் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதேவேளை பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் (1876- 1947) காலனித்துவ நாடுகளின் வெளி யீடுகள் காலனித்துவப் பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் (Colonail copy right Act) சேர்க்கப்பட்டு பிரித்தானிய நூதனசாலையில் ஆவணப் படுத்தப் பட்டது.

1796 இலிருந்து 1948 வரையிலான காலப்பகுதி வெளியீடுகள், ஆவணங்கள் பிரித்தானியாவில் ஆவணப் படுத்தப் பட்டுள்ளது. 1947 இலங்கை சுதந்திரம் பெற்றபின், சிலகாலம் கல்வியமைச்சின்கீழ் ஆவணக்காப்பகம் காணப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1951*இல் அச்சக பதிப்புச்சட்டம் ("Printing press ordinance" *1951 - 20*ம் சட்டம்) கொண்டுவரப்பட் டுள்ளது. *1952*இல் இலங்கை தேசிய நூல்விபரப் பட்டியலுக்கான உபஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்ட பின், கல்வி அமைச்சிலிருந்து ஆவணக் காப்பகம் உள்ளூராட்சி மற்றும் கலாசாரஅமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. *1962*இல் முதலாவது தேசிய நூற்பட்டியல் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்தே வெளி யிடப்பட்டதுடன், இதன் வெளியீட்டுக்கு பிரித்தானிய தேசிய நூல் விபரப்பட்டியலின் பிரதம ஆசிரியர் திரு.ஏ.ஜெ. வேல்ஜ்ஜின் சேவையும் பெறப் பட்டுள்ளது. *1963* தொடக்கம் வித்தயலங்கார பல்கலைக் கழகத்தில் ஆவணங்கள் ஆவணப் படுத்தப்பட்டு *1975*இல் ஆவணக்காப்பகம் புதியக்கட்டிடத் துக்கு மாற்றப்பட்டுள்ளன. *1974*ம் ஆண்டிலிருந்து தேசியநூற் பட்டியல் தேசிய சுவடிகள் திணைக்களத்திலிருந்து தேசிய நூலகசபை பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

இத்தேசியநூற்பட்டியல் சட்டவைப்பு நூற்சேர்க்கை யின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. *1962* தொடக் கம் *1974*ஆம் ஆண்டு வரையிலான தேசியநூற்பட்டியல் தேசிய சுவடிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள் ளது. *1974*ம் ஆண்டு *48*ம் இலக்கச்சட்டத்தின் மூலம் இத் திணைக்களம் தேசிய ஆவணக்காப்பகம் எனப்பெயர் மாற் றப்பட்டுள்ளது. இதன் நோக்கம், *1974*ம் ஆண்டு *48*ம் இலக்கச்சட்டத்திலும், *1981*ம் ஆண்டு *30*வது இலக்கச் சட்டத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளது. *1885*ம் ஆண்டின் அச்சகம் வெளியீட்டு பதிவுச்சட்டத்திற்கு அமைவாக, அச்சகங்களும் வெளியீட்டாளர் களும் சகலநூல்களினதும் பிரதிகள் ஐந்தினை வழங்கவேண்டும். இன்னுமோர்பிரதி *1952* இலி ருந்து பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திலும், ஒரு பிரதி சுவடிகள் திணைக்களத்திலும் சட்டச்சேர்க்கையாக (Legal depository) ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

*1951* அச்சக வெளியிட்டாளர்கள் சட்டத்தின் பின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973இல், 45வது சட்டமாக தேசியச்சுவடிகள் சட்டம்(The National Archives Low No 48, 1973)கொண்டுவரப்பட்டது. 1973இல், 51வது சரத்துக் கேற்ப இலங்கை தேசியநூலக சேவைகள் சபை (The Sri Lanka National Library service Board) ஸ்தாபிப்கப்பட்டபின், இலங்கையில் வெளியிடப்படும் சகல வெளியீடுகளும் சட்டப்படி இச்சபைமூலம் ஆவணப்படுத்தப் பட்டுவருகின்றன. 1976இல் இலங்கை தேசிய நூலகசேவைகள் (The Sri Lanka National Library Service) உருவாக்கப்பட்டதுடன் 1990ம் ஆண்டில் இலங்கை தேசியநூலகம் (The Sri Lanka National Library) ஆரம்பிக்கப்பட்டது. 1986ம் ஆண்டிலிருந்து இலங் கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர நூல் எண் (ISBN) வழங்கும்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் சர்வதேச தராதரநூல்எண் (ISBN) பெற்றுக் கொண்டால் மாத்திரமே இலங்கை தேசிய நூற்பட் டியலில் (National Bibliography) பதியப்படுகின்றது. இலங்கையைச் சேர்ந்தவர்கள் சர்வதேச தராதர நூல்எண் வேறுநாடுகளில் பெற்றுக்கொண்டால் இலங்கையரது நூலாயினும் இலங்கை தேசியப்பட்டியலில் பதியப்படுவதில்லை.

இலங்கை உள்நாட்டுயுத்தம் நடைபெற்றகாலத்தில் "தமிழ்" பிரதேசத்தின் வெளியீடுகள், ஆவணங்கள் தமிழ் ஈழவிடு தலைப் போராட்ட இயக்கங்களின் மூலம் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. இவை 2009இல் நடைபெற்ற யுத்தத்தினால் அழிந்துள்ளதாகக் கருதப்படுகின்றது. இதேபோல் யாழ்ப்பாணம் குரும்பசிட்டி கனகரத்தினம் என்னும் தனி நபரால் ஆவணப் படுத்தப்பட்ட தமிழ் ஆவணங்கள் பற்றிய தகவல்களையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

**ஆய்வின் பிரச்சினைகள்**

இலங்கையில் தமிழ் ஆவணங்கள் முழுமையாக ஆவணப்படுத்தப்படுவதில்லை. தமிழ் நூல்கள் பல இந்தி யாவிலும் பிறநாடுகளிலும் அச்சிட்டு வெளியிடப்படுவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர நூல் எண் பெறப்படாமையும் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர் களின் அக்கறையின்மையும் போதிய தமிழ் உத்தியோகத்தர் களின்மையும், பாராமுகத்தன்மையும் காரணமாக இலங்கைத் தேசிய நூற்பட்டியலில் தமிழ்நூல்கள் பதியப்பட்டு ஆவணப் படுத்தப்படாதுள்ளன. இதனால் ஆய்வாளர்கள், எதிர்காலச் சந்ததியினர் இவைபற்றி அறிய முடியாதுள்ளனர்.

**ஆய்வு முறை**

வரலாற்றுத் துணையுடன் இலக்கிய வரலாற்று ஆய்வு நூல்களின் ஆதாரங்களுடன் இத்துறைசார்ந்த இரண்டாம்நிலை சான்றுகளுடன் களநிலையில் நேரடி அவதானிப்புகளுடனும், விளக்கநிலை வாயிலாகவும் இவ் வாய்வு மேற்கொள்ளப்பட்டது. "நூல் தேட்டம்" என்ற நூல் பட்டியல் ஆவணம் முதலாம் தொகுதி முதல் ஐந்தாம் தொகுதிவரை அவதானிக்கப்பட்டது. வெளியீட்டாளர்களின் விலைப்பட்டியல்கள், நூல்களிலகங் களில் வைப்பிலுள்ள நூல்கள், வகுப்பாக்கப்பட்டியல்கள் ஆகியன அவதானிக் கப்பட்டன. இவற்றுள் அநேகமானநூல்கள் நூல்தேட்டத்தில் பதியப்பட்டுள்ளதால், நூல்தேட்டப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டே கணிப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த ஆய்வில் துண்டுப்பிரசுரங்கள், பாடசாலை பாட நூல்கள், பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட நூல்கள், வினாவிடைகள் வர்த்தமானி வெளியீடுகள், அரசதிணைக்கள அறிக்கைகள் ஆகியன தவிர்க்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இலங்கைத்தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்துதல் பூரணமாக நடைபெறவில்லை என வெளிக்காட்டல், இலங்கைத் தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்து தலில் உள்ள இடர்பாடு களை கண்டறிதலும், இவற்றினைகளையும் வழிமுறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிதலும் தீர்வுகாண்பதுமே இவ் ஆய்வினது நோக்கமாகும்.

**ஆய்வின்போது கண்டறிந்தவையும் அவதானிப்புகளும்**

"சுவடிகளின் ஆற்றுப்படை" என்ற நான்கு தொகுதி களாக எஸ்.ஏச்.எம்.ஜெமீல் இலங்கை முஸ்லீம்எழுத்தாளர் களது நூல்களை ஆவணப்படுத்தியுள்ளார். ச.ஜோ.செல்வராஜா மட்டக்களப்பு மாவட்ட நூலியல் தொடர்பான வரலாற்றினை ஆவணப்படுத்தியுள்ளார். க.குணராசா (செங்கை ஆழியான்) இலங்கை நாவல்கள் பற்றியும், கனக.செந்தி நாதன், சில்லையூர் செல்வராசன் மற்றும் பேராசிரியர் பூலோகசிங்கம் ஆரம்பகால வெளியீடுகள் பற்றியும் ஆவணப்படுத்தியுள்ளனர். இதே போல் புகலிட மண்ணிலே நூல்களின் பதிவுகளை ஒன்று திரட்டியும் இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களினது பதிவுகளையும் ஒன்று திரட்டியும் இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களினது பதிவு களையும் "நூல் தேட்டம்" என்ற நூல்தொகுதியாக இலண் டனில் உள்ளநூலகர் என்.செல்வராஜா வெளியிட்டுள்ளார். ஆயிரம் நூல்களுக்கு ஒரு தொகுதி என்ற வகையில் ஆறு(6) நூல் தேட்டங்கள் வெளியிட்டுள்ளதுடன் மலேசிய, சிங்கப்பூர்வாழ் தமிழர்களால் வெளியிடப்பட்ட நூல்கள் ஒரு தேட்டமாகவும் வெளியிடப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இலங்கைத்தமிழ் நூல்களை பதிந்து வெளிக்கொணர்தலில் ஈடுபட்டுள்ளார்.

ஆய்வுக்காக உதாரணமாக, 2005ம் ஆண்டினை நோக்கு வோமாயின், "நூல்தேட்டம்" என்ற நூலின் பதியப் பட்டுள்ள தமிழ்நூல்களினை எடுத்துக்கொண்டால்,தொகுதி ஒன்று ஆறுவரை மட்டும் 2005ம் ஆண்டில் 361இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் பதியப்பட்டு காணப்படு கின்றன. இந்நூல்களில் இலங்கையில் 197 நூல்களும், சென்னையில் 99நூல்களும், இங்கிலாந்தில்24 நூல்களும், கனடாவில் 13 நூல்களும், ஜேர்மனியில் 08 நூல்களும், பாரிஸில் 07 நூல்களும், அவுஸ்திரேலியாவில்05 நூல் களும், நோர்வேயில் 03 நூல்களும், டென்மார்க்கில் ஒரு நூலும் வெளியிடப்பட்டதாக பதியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. இது 2005ம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களின் பதிவின் இறுதி முடிவல்ல. பின்தொடரும் ஏனைய தொகுதி களிலும் 2005ஆம் ஆண்டு வெளியீடுகள் பதிப்படவுள்ளன. ஆனால் இலங்கைத் தேசியநூல்பட்டியலில் (National Bibliography) 91 இலங்கைத்தமிழ் நூல்கள் மட்டுமே அக்காலப் பகுதியில் பதியப்பட்டுள்ளன. 270 இலங்கைத் தமிழ்நூல்கள் பதியப்படாது காணப்படுகின்றன. எனவே இலங்கைத் தேசிய நூல்பட்டியலானது பூரணமானதல்ல என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மணிமேகலை பிரசுரம் வெளியிட்டுள்ள விலைப்பட்டி யலில் 72 இலங்கை நூலாசிரியர்களின் நூல்கள் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் இலங்கைதேசியநூல் பட்டியலில் மணிமேகலைப் பிரசுரத்தின் ஒரேஒரு நூல் மாத்திரமே பதியப்பட் டுள்ளது. இது இலங்கை தேசியநூற் பட்டியலானது பூரண மானதல்ல என்பதற்கு மற்றொரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மேலும் புகலிட மண்ணிலே இலங்கைத்தமிழர்களின் நூல்களை ஒன்று திரட்டியும், இலங்கையிலே ஒன்றுதிரட் டியும் ஈழத்தமிழர் தேசியநூல்களின் ஆவணப்படுத்தலினை மேற் கொண்டு வருகின்றனர். இவ்வாறான பணியை மேற்கொள்ளும் அமைப்புகளாவன:

1. ஐரோப்பிய தமிழ்ஆவணக்காப்பகமும் ஆய்வகமும் (European Tamil Document - ation and Research centre- ETDRC) இலண்டன்.

2. உலகத் தமிழ் நூலகம், ஸ்கார்பரோ, ஒன்றாரியோ, கனடா

3. வல்வை (ந.நகுலசிகாமணி) ஆவணக்காப்பகம், கனடா.

4. முல்லை அமுதன் ஆவணக்காப்பகம், லண்டன்.

5. தமிழ்தகவல் மையம் - ஆவணக்காப்பகம், (Tamil Information Centre



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TIC Library), லண்டன்.

6. மலையக ஆவணக்காப்பகம் - புசல்லாவ (இந்தியவம்சாவளி இலங்கையரது ஆவணங்கள்)

7. பிரித்தானிய British Library)

8. இலண்டன் பல்கலைக்கழக நூலகம் - SOAS School of Oriental and African Studies Library, (University of London).

**தமிழ் நூல்களின், வெளியீடுகளின் ஆவணப்படுத்துதலில் காணப்படும் பிரச்சினைகள்**

இலங்கையில் ஆவணப்படுத்துதலில் தொடர்ச்சியின்மை:
இலங்கை தவிர்ந்த பிறநாடுகளில் தமிழ் நூல்கள் வெளியிடுதல்:

2.1.1 நூல்களை வெளியிடுவோர், எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள், குறைந்தசெலவு மற்றும் சந்தைவாய்ப்பு போன்ற பொருளாதாரக் காரணங்களினால் பல இலங்கைத் தமிழ் நூல்களை தமிழ்நாட்டில் வெளியிடுகின்றனர். இவ்வாறு சென்னையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு பதிவுகள் எதுவும் இலங்கையில் இல்லை. இவற்றுக்கு சர்வதேசதராதர எண் பெறப்படுவதும் இல்லை. எனவே இவை இந்தியாவிலும் பதிவுசெய்யப்படுவது இல்லை.
2.1.2 198385ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் அரசி யல் காரணங்களுக்காக பலநூல்கள் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டு இலங்கை தவிர்ந்த பிற நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இவை இலங்கையில் தடைசெய் யப்பட்ட பிரசுரங்களாகும். இவ்வெளியீடுகளின் பதிவுகள் இந்தியாவிலும் இலங்கையிலும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***2.1.3*** *தமிழகத்தில் சென்னையில்வெளியிடுவதற்கான காரணங் களில் பிரதானமானது, சென்னையில் வெளியீட்டாளர்களின் மூலம் வெளியிடப்படும் நூல்களை தமிழக அரசு கொள்வனவு செய்வதே. எனவே எழுத்தாளர்கள் இந்தியாவில் வெளியிட ஆர்வம்காட்டுகின்றனர். இவ்வாறு வெளியீடு செய்யும்போது தமிழகஅரசுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் இரண்டாம் பதிப்புகூட "இரண்டாம் பதிப்பு" என குறிப்பிடப்படாது வெளியிடப் படுகின்றன.*

***2.1.4*** *ஈழத்து எழுத்தாளர்கள் தமது நூல்களில் முதல் பதிப்பினை இலங்கையில் வெளியிட்டு வரையறுக்கப்பட்ட விநியோகம் காரணமாக மீண்டும் தமிழகத்தில் மீள்பதிப்புச் செய்து இந்திய வாசகர்களுக்காக வெளியிடு கின்றனர். மாநிலமொழி அல்லாத நூல்களுக்கு விதிக்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடுகள் இருந்தபோதும், தமிழ் மொழி என்பதால் இலங்கை நூல்களுக்கு கட்டுப்பாடுகள் எதுவும் தமிழ்நாட்டில் இல்லை.*

***2.1.5*** *இந்தியாவில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதரஎண் (ISBN)பெறப்படாமைக்கு வெளியீட் டாளர்கள், அச்சகங்கள் "தீர்வை அல்லது வரி"யிலிருந்து விலக்குப்பெற்று தப்புவதற்காக எனக்கருதலாம்.*

**2.2 புலம்பெயர்ந்தோர் வெளியீடுகள்**

***2.2.1 1786****இல் மலேசியாவின் பினாங்கு தீவினை கைப்பற்றிய பின் ஆங்கிலேயரால் வரவழைக்கப்பட்டு பின் அங்குகுடியேறிய இலங்கைத்தமிழர்களதும்,* ***1950*** *களுக்கு முன் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தொழில் நிமித்தம் குடியேறிய இலங்கைத்தமிழர்களதும் வெளியீடுகள் எங்கும் பதியப்பட வில்லை. மலேசியா வாழ் யாழ்ப் பாணத்தமிழர்கள் "இலங்கைத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்" என்ற வரையறைக்குள்ளும் அடக்கப்படவில்லை.

**2.2.2** உள்நாட்டு தமிழ்ஈழயுத்தம் காரணமாக புலம் பெயர்ந்து இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, டென்மார்க், சுவிற்சலாந்து, கனடா, கென்யா, அவுஸ்திரேலியா, ஐக்கியஅமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், பிஜி போன்ற நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களது வெளியீடுகளும் நூல்களும் எங்கும் பதியப்படாது ஆவணப்படுத்தப்படாதும் காணப்படுகின்றன. புலம்பெயர்ந்த நாடுகளில் புலம்பெயர்ந்தோர் வெளியீடுகள் அந்த அந்த நாடுகளில் தேசியநூற் பட்டியலில் இடம்பெறுவதுமில்லை. ஆவணப்படுத்தப்பட்டிருப்பில் சட்டவைப்பில் வைக்கப்படு வதுமில்லை.

**இலங்கை தேசியநூற்பட்டியலில் பதியப்படாமை**

**3.1** இலங்கையில் வெளியிடப்படும் நூல்களில் சர்வதேசதராதர எண் பெறப்படாதவை தேசிய நூற்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாததுபோல் அச்சகம், வெளியீட்டாளர் சட்டப் படிகையளிக்கப்படாத தமிழ் நூல்களைத் "தேடிப் பெறல்" இடம்பெறுவதுமில்லை.

**3.2** இலங்கையில் கலாசார அமைச்சின் மூலம் சாகித்திய விருது வழங்கப்பட்ட நூல்கள் சிலவற்றின் பதிவுகளும் தேசிய நூற்பட்டியலில் காணப்படவில்லை. முன்னர் இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு மட்டும் சாகித்தியவிருது வழங்கப்பட்டது. தற்போது பல சிறந்த எழுத்தாளர்கள் இலங்கையில் வெளியிடுவது செலவு அதிகமென்ற காரணத்தினால் இந்தியாவில் அச்சிடுகின்றனர். அவற்றுக்கு விருதுகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் இவை ஆவணப்படுத்தப்படவில்லை. தேசிய நூற்பட்டியலிலும் இல்லை. எனவே சட்டவைப்பிலும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. உள்நாட்டு யுத்தமும் அதன் தாக்கமும்:**

*4.1* இலங்கையில் யுத்தசூழல் காரணமாக புலம் பெயர்ந்தோர் தம்நூல்களை இலங்கையில் வெளியிடுவதற்கு பயங்கொள்ளு கின்றனர். ஈழமக்கள் விடுதலைதொடர்பான தகவல்கள் இருப் பின் இலங்கையில் வெளியீட்டா ளர்கள் பலவிசாரணைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியி ருப்பதால் பல நூல்கள் இந்தியாவில் வெளியிடப்பட்டன. தற்போது இந்தியாவிலும் வெளியிடுவது சிக்கலாகியுள்ள தால் ஐரோப்பாவில் வெளியீட்டு முயற்சிகள் சிறப்புப் பெற்றுள்ளன. ஆனால் இவை இலங்கையில் தேசிய நூல் பட்டியலில் சேர்ப்பதற்கு எவ்வித பிரயத்தனமும் எடுக்கப் படவில்லை.

*4.2* ஈழம் என்ற வார்த்தைப்பிரயோகமும் இலங்கையில் நூல் களை அச்சிட்டு வெளியிட பலசிக்கல்களை தோற்றுவித் துள்ளமை மற்றொரு காரணமாகும். வடகிழக் குத்தமிழ் எழுத் தாளர்கள் தமது விடுதலைப்பிரச்சினைகள் தொடர்பான இலக்கிய நூல்களை இலங்கையில் வெளியிடாமல் வெளிநாடு களிலேயே வெளியிட்டனர். இந்தப் பதிப்புத்தளமாக இந்தியாவே அமைந்தது.

*4.3* யுத்தசூழலில் இலங்கை வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் ஈழத்தமிழரின் நூல்களை வெளியிட ஆர்வம் காட்டவில்லை. இவர்கள் எழுத்தாளர்களை அணுகவும் இல்லை. இச்சந்தர்ப்பத் தினை இந்திய வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் பயன் படுத்திக் கொண்டார்கள். எழுத்தாளர்கள், வெளியீட்டாளரின் புறக்கணிப்பும் திணைக்களத்தின் புறக்கணிப்பும், தேசிய சுவடிகள் திணைக்களத்துக்கு தமிழ்நூல்கள் கிடைக்காமை, இலங்கைச் சுவடிகள் திணைக்களத்திலும், தேசியநூலகத்திலும் தமிழில்வேலை செய்யக்கூடிய தேவையான ஆட்பலமின்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன நூற் பட்டியல் தயாரிப்பில் பின்தங்கியநிலை ஏற்பட ஒருகாரணமாகின்றது. இதனால் எதிர்காலசந்ததியினரின் ஆய்வுகளுக்குத் தேவையானபதிவுகள் குறைவடைந்துள்ளமை மாத்திரமல்லாது ஆவணப்படுத்துதல் இல்லாதுபோயுள்ளமை பெரும்குறைபாடு.

**தீர்வும் முடிவுரையும்**

இலங்கையில் நூற்பதிவு இலக்கத்துடன் வெளியீட்டாளர் வெளியிடுவதை ஊக்கப்படுத்த வேண்டும். தமிழக அரசு இலங்கைத் தமிழ்நூல்கள் வெளியிடுவோரை "நூல் பதிவு" இலக்கம் பெறவேண்டும் எனக் கட்டாயப்படுத்த வேண்டும். நூல் வெளியீட்டாளரும் நூல் பதிவு இலக்கம் பெற ஆர்வம் காட்டவேண்டும். நூல்பதிவு இலக்கம் பெறாமல் வெளியிடுவோர் தமது நூல்களை வெளியிடுவதை இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வெளியீடுகள் அனைத்தும் தேசிய நூலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு தேசியநூல் பட்டியலில் பதிவு செய்ய வழி கோலவேண்டும். இதற்காக அரசாங்கத்தினை வலியுறுத்த வேண்டும்.

தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும். பாராமுகப்போக்கு தவிர்க்கப்படவேண்டும். இலங்கையிலும் பிறநாடுகளிலும் சட்டப்படி நூல்பதிவு எண் பெறாத நூல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் நூற்பதிவினை ஊக்குவிக்க வேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனமாக எழுத்தாளர், வெளியீட்டாளர்கள் ஒன்றிணைந்து ஒரு ஆவணக்காப்பகத்தினை தமிழ் நூல் ஆவணப்படுத்தலினை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

புகலிட நாடொன்றில் முழுமையான ஆவணக்காப் பகம் ஒன்றினை நிறுவுதல்வேண்டும். தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ள ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகத்திற்கு (ETDRC) எழுத்தாளர், வெளியீட்டாளர்கள் நூல்களை வழங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடிகள் திணைக்களம், தேசியநூலகம் ஆகியன தமிழ் நூல்களை தேடிப் பெறவேண்டும். மற்றும் சர்வதேச தராதர எண் பெறாத நூல்களையும் தேசியநூல் பட்டியலில் சேர்த்து பதியப் படவேண்டும். மேலும் புலம் பெயர்ந்தவர்களின் நூல்களையும் தேடிப்பெறல் வேண்டும். சுய தணிக்கைக்குட்படாது இலங்கையைச் சேர்ந்த, புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள் நூல் களை சுவடிகள்திணைக் களம், தேசியநூலகம் ஆகியவற்றுக்கு வழங்க வேண்டும்.

தமிழ் சாகித்தியபரிசு மற்றும்விருதுகள் வழங்கும் போது நூல்பதிவு இலக்கம் பெற்றநூல்களைமட்டும் மதிப் பீடுசெய்து பரிசுகள் வழங்கவேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


கனக.செந்திநாதன்,"ஈழத்து இலக்கிய வளர்ச்சி கொழும்பு, அரசு வெளியீடு, (1964)

செல்வராஜா.என், "மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் - தொகுதி -1, ஐக்கியஇராச்சியம் அயோத்தி நூலகசேவைகள், 2007.

செல்வராஜா.என், "நூல்தேட்டம் -தொகுதி -1-5", ஐக்கிய இராச்சியம், அயோத்தி நூலக சேவைகள், 2002 -2008.

செல்வராஜா.என், "வேரோடி விழுதெறிந்து", கொழும்பு, ஞானம் பதிப்பகம், 2009

நடராசா.எப்.எக்ஸ்.சி, "ஈழத்து தமிழ்நூல் வரலாறு" கொழும்பு, அரசு வெளியீடு, 1970.

பூலோகசிங்கம்.பொ., "தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழர் பெருமுயற்சிகள்", கொழும்பு, "குமரன் இல்லம்", 1970.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலட்சுமி,.தி., நிர்மலா.சூ, பூமிநாதன்.த., "சுவடிச்சுடர்", சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2002.

ஜேமீல்.எஸ்.எச்.எம், "சுவடி ஆற்றுப்படை", கல்முனை, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், 1994

Maheswaran.R., (2007) "Bibilometric Study of Tamil Publications in Sri Lanka in 2005", Colombo, University Librarian Association of Sri Lanka.

National Library of Sri Lanka: Colombo; Sri Lanka National Library Service Board, 1995.

Wimalaratne.K,D,G,. "An Introduction to the National Archives in Sri Lanka" Colombo,

Social Science Research Centre, National Science Council of Sri Lanka,1.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக தமிழ்ச் செம்மொழி மாநாடு

## (கோவை - 2010 ஜூன் 23 - 27)ல்


தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி ஆட்சியில் உலகச் செம்மொழி மாநாடு நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டது. கனடாவில் தமிழ்மொழி சார்ந்த அமைப்பின் ஈடுபாடு காரணமாக எனக்கும் எனது மனைவிக்கும் பார்வையாளராகக் கலந்து கொள்ளுமாறு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர், ஒருங்கிணைப்பாளர் மூலமாக அழைப்பு அனுப்பி யிருந்தனர்.


அந்த மாநாட்டில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களும் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். நாமும் அங்கு செல்வதாக முடிவெடுத்து அவர்கள் ஏற்பாட்டில் விசா எடுத்து இந்தியா பயணமாகினோம். செல்லும் வழி யில் விமானம் டில்லிவழியாக சென்னைசெல்லும் பயணம் கிடைத்த தினால் கனடாவில் ticket பெறுநரிடம் தாஜ்மஹால் பார்த்துவிட்டுச்செல்வதற்கு உரிய ஒழுங்கையும் செய்தோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில்லியில் 2 இரவு தங்கி தாஜ்மஹாலையும் பார்த்து கோவை சென்றோம். சென்னையிலிருந்து கோவை விமானநிலையம் சென்றதும் மகாநாட்டுக் குழுவினர் எங்களை எல்லாம் வரவேற்று எங்கள் இருவருக்கும் ஹோட்டல் வசதி, உணவு ஒழுங்குகள் எல்லாம் செய்தார்கள். பாரதி பல்கலைக்கழக மாணவர்கள் காலையில் வந்து பத்திரிகை மற்றும் காலை உணவு, தேநீர், நாங்கள் விரும்பியவாறு கொண்டு வந்து பரிமாறினார் கள். பின்பு விசேஷட பேருந்து மூலம் எங்களை கோவை கொடிசியா மண்டபத்திற்கு ஏற்றிச் செல்வார்கள். விசேட பாதுகாப்பிற்காக பொலிஸ் அதிகாரி ஒருவரை எங்களுக்கு ஒழுங்கு பண்ணியிருந்தார்கள். மாநாட்டில் ஆய்வரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், அரசியல் அரங்கம், கலையரங்கம், புத்தகக் கண்காட்சி, மாநாட்டு ஊர்திப்பவனி இப்படியாக 5 நாட்களும் கலகலப்பாக மனம் நிறைந்த நிகழ்வுகளாயிருந்தன. மாநாட்டில் காலை 10மணிக்கு காலை உணவு, மதிய உணவு 12மணிக்கும் மாலை சிற்றுண்டி தேநீர் 4மணிக்கும் இரவு உணவு 7மணிக்கும் ஒழுங்கு பண்ணியிருந்தார்கள். மாநாட்டு மலர், ஆய்வரங்க கட்டுரை மலர் என பல நூல்கள் அன்பளிப் பாகத் தந்து சென்னைக்கு விமானத்தில் அனுப்பி வைத் தார்கள். இன்றும் ஏ.ஆர்.ரஹ்மானும் இன்னும்பல பாடகர் களும் இணைந்துபாடிய “செம்மொழியான தமிழ் மொழியாம்” என்றபாடல் இன்னும் ரீங்காரம் செய்கின்றது










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













திரு அன்பழகன் பின்னால் நிற்பது நான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.தமிழிச்சி தங்கபாண்டியனுடன் நாங்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி : -

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ்ப்பிரிவுப் பணியாளராகப் பணியாற்றும் திரு.இ.மகேஸ்வரனால் எழுதப்பட்ட மேற்படிக் கட்டுரையில் இலங்கையிலும் புகலிட மண்ணிலும் ஆவணப்படுத்தலினை மேற்கொண்டு வரும் அமைப்புகளில் எமது வல்வை வரலாற்று ஆவணக்காப் பகமும் ஒன்றாகக் கருதப்பட்டு எழுதப்பட்டதற்காக பேரா சிரியர் அவர்களுக்கு நன்றி பாராட்டுவதோடு, தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் அழைப்பின்பேரில் தமிழ்நாடு கோவை நகரில் 2010ல் முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் நடந்த செம்மொழி மாநாட்டில் நாமும் பங்குபற்றியிருந்தவேளை இக்கட்டுரை வாசிக்கப்பட்டது எமது பணிக்கு மேலும் உற்சாகம் அளித்தது.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் அணிந்துரை யுடன் எம்மால் எழுதி வெளியிடப்பட்ட "உடுப்பிட்டிசி சிவசம்புப் புலவர் வரலாறும் அவரது ஆக்கங்களும்" என்ற நூலை அங்கு சிறப்புவிருந்தினராக வருகை தந்த அவரிடம் முதற் பிரதியை வழங்கியதும் எமது நீங்காத நினைவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் நூல்களினூடாக மாற்றுக் கருத்துகள் பற்றிய ஒரு வரலாற்று நோக்கு



என்.செல்வராஜா(நூல் தேட்டம்)
சர்வதேச நூலகவியலாளர்
லண்டன

இலங்கையில் நூலியல்வரலாற்றில் ஒருவர் எழுதிய நூலை அல்லது சிறு பிரசுரத்தைக் கண்டித்தும், மறுதலித் தும், எழுதும் வழக்கம் ஆறுமுகநாவலர் காலம் முதற் கொண்டு இன்றுவரை வழக்கில் இருந்து வருகின்றது. இக்கட்டுரை அத்தகைய சில சுவையான தருணங்களை மீள்பதிவு செய்கின்றது.

இலங்கையில் 1798முதல் 1948வரை நிலவிய பிரித் தானிய ஆட்சிக்காலத்தில் மதச்சுதந்திரம் ஓரளவு வலியு றுத்தப்பட்டு வந்தது. இலங்கையில் பிறக்கும் ஒரு தமிழ்ப் பிள்ளை தான்விரும்பிய மதத்தில் சேர்வதற்கும் பிறப்பால் சைவனாகப் பிறந்த ஒரு தமிழன் கிறிஸ்தவனாகத்தன்னை மதமாற்றம் செய்து கொள்ளவும் பிரித்தானிய ஆளுநர்க ளால் ஓரளவு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. அக்காலகட் டத்தில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட வேண்டுமானால், மக்களை அறிவுபூர்வமாகச் சிந்திக்க வைத்து அவர்களை தம்பக்கம் இழுக்கவேண்டியசூழல் அக்காலகட்டத்தில் நிலவியிருந்தது. இதன் வெளிப்பாடுகளே தமிழ்மொழி அக ராதிகளையும் தமிழ் பழமொழித் தொகுப்புகளையும் ஐரோப் பியர் தேடிச்சேர்த்துத் தொகுத்து வெளியிட்டமைக்குக் காரணமென்பர்.

மேலும் தீவிரமான சைவசமயாச்சாரிகளால் பேணப் பட்டுவந்த சாதிய ஒடுக்குமுறைகளினால் பாதிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்ட தமிழ்ச்சமூகங்களுக்கு தாமே கல்விச்சாலை களை நிறுவி கல்வியறிவைப் புகட்டுவதன் மூலமும் மத மாற்றத்தைப் படிப்படியாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அக்கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அக்காலத்தில் தமது பிறப்பால் சைவர்களாக நிர்ணயிக்கப்பட்டு பாரம்பரிய மரபு களை இறுக்கமாகப் பேணிவந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் சைவசமயத்தவரை சமூகப் புரட்சிசெய்து கிறிஸ்தவராக மதம் மாற்றுவதென்பது பிரித்தானிய, அமெரிக்க கிறிஸ்தவ மதபோதகர்களுக்கு அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

இத்தகைய பின்புலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த மதமாற்றத்திற்குட்பட்ட தமிழ் கிறிஸ்தவப் போதகர்கள் சிலர் 1906 இல் மறுபிறப்பு ஆட்சேபம் என்ற பெயரிலும் 1911ல் மறு பிறப்பு சமாதானம் என்ற பெயரிலும், இரு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தனர். சைவசமயத் தவர்களின் மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கையை மூடநம்பிக் கையாக சித்திரித்து அப்பிரசுரங்களை வெளியிட்டிருந்தனர். அதனால் வெகுண்டெழுந்த யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு.சி.சுந்தரம்பிள்ளை என்பவர் மறு பிறப்புத் தூஷண பரிகாரம் என்ற 192 பக்கங்களைக் கொண்ட விரிவான நூல் ஒன்றை எழுதி அதனை யாழ்ப் பாணம் கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் 1926ல் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். அந்நாளில் இந்நூல் 75 சதத்திற்கு பரபரப்பாக விற்கப்பட்டது.

இதில் மற்றொரு சுவாரஸ்யமான விடயம் என்ன வென்றால் சி.சுந்தரம்பிள்ளையின் நூலை வாசித்துக் வெகுண்ட யாக்கோபு என்பவர் (இந்நூலை ஆக்கியோன் இலங்கை வலங்கைமுக வள்ளுவகுல திலகன் சாம்புவத் திருவாளன் பீ.எம்.யாக்கோபு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) மறுபிறப்புத் தூக்ஷண பரிகாரக் கிலிகோலம் என்ற தலைப்பில் 60 பக்கங்களில் ஒரு எதிர்ப்பு நூலை எழுதி யிருந்தார். முன்னைய நூல் வெளிவந்த அதே 1926ம் ஆண்டு சூட்டோடு சூடாக இந்நூல் அச்சுவேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிர காச யந்திரசாலையில் அச்சிட்டு சுன்னாகம் பரம் பரைப் பறையர் சபை என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டது.

முன்னைய நூல் வெறும் கிலிக்கோலமே என்று காட்டும் மறுப்புரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. இந் நூல் 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. யாழ்ப் பாணம் கொக்கு வில் சோதிடப்பிரகாச யந்திரசாலையும் அச்சுவேலி ஞானப் பிரகாச யந்திரசாலையும் அக்கால கட்டத்தில் யாழ்ப் பாணத்தைத் தளமாகக் கொண்டு இரு வேறு மத ஆதரவு பிரசுரங் களை வெளியிடுவதில் புகழ் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகநாவலரின் வாழ்நாட் காலம் (18-12-1822 - 5-12-1879) 57ஆண்டுகளே. இவரது முதற் சைவசமயப் பிரசங்கம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ் வரர் கோயிலில் 31-12-1847ல் நிகழ்த்தப்பட்டது. அக்கால கட்டம் மதமாற்றத் தினை நோக்காகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் பல சைவ எதிர்ப்பு இயக்கங்கள் செயற்பட்டன. நவீன அச்சகவசதிகள் அவர் களிடம் சிறப்பாக இருந்தன.

இந்நிலையில் சைவத்தைப் பாதுகாக்கும் தனிமனித நிறுவனமாகச்செயற்பட்ட ஆறுமுகநாவலர் 1849ல் நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் சென்னைக்குச் சென்று அச்சி யந்திரம் ஒன்றை வாங்கி வந்தார். வரும்போது அச்சியந்தி ரத்துடன் நாவலர் என்ற பட்டத்தையும் தமிழகத்திலிருந்து பெற்றுக் கொண்டு வந்தார். தனது இல்லத்திலேயே "வித்தியாநுபான யந்திர சாலை" என்ற பெயரில் அச்சகத்தை நிறுவி சைவநூல் களுடன் பல கண்டன நூல்க ளையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டுவந்தார். அவற்றில் பிரபல்யமானது 'சைவதூக்ஷண பரிகாரம்' என்பதாகும். முதற்பதிப்பு விபரம் தெரியவில்லையா யினும் இந் நூலின் எட்டாவது பதிப்பு ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1956ல் வெளி வந்ததை காணமுடிகிறது. 114 பக்கங்களைக் கொண்ட இந்நூல் பற்றி நாவலரின் குறிப்பு பின்வருமாறு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமது சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும், கிறிஸ்துவ பாதிரிகளது பொய்நூலாகிய விவிலிய நூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்க நூலிலே அற்ப மேனும் பயிலாதவர்களுமாகிய சில சனங்கள் (பாதிரிமார்களின்) அத்தூக்ஷணங்கள் ஒக்குமென்று மதிமயங்கி கிறிஸ்து சமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்றார்கள். யாம் அதனைக் கண்டிரங்கி சைவத்தின்மேல் அப்பாதகர்களால் ஏற்றப்படும் தூக்ஷணங்களாலேயே ஒருவரும் கெடாது சைவத்தின் வழியே நின்று உய்யும்பொருட்டு, அத்தூக்ஷணங்கள் எல்லாவற்றையும் நியாயமாகவே களைந்து மெய்யறிவுச்சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவ தூக்ஷண பரிகாரம் என்னும் பிரபந்தத்தை பரம காருணிகராகிய பரமசிவனது திவ்வியப் பிரசாதத்தினா லேயே செய்தோம்". - ஆறுமுகநாவலர் (உபோற்காதம்)

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் **29-04-1888**ல் தாபிக்கப்பட்டதே இலங்கைச்சைவ பரிபாலன சபையாகும். சைவம்பற்றிய எதிர்ப்பிரசாரங்களை காலனித் துவ ஆட்சியில் மதமாற்ற நோக்குடன் மேற்கொண்ட கிறிஸ்தவ பீடங்களின் கருத்தியல் போரை முறியடிக்கும் பணிகளில் ஒன்றாக இச்சபை ஒரு நூலை **1921**ல் வெளியிட்டது. "கிறிஸ்துவர் ஆராச்சியும் சைவநன்மக்கள் கொள்கையும்" என்றநூல் இரு பாகங்களில் வெளிவந்தது. இந்நூலின் ஆசிரியர் த.ஆறுமுகநயினார்பிள்ளை என்பவ ராவார். கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்ட **105** பக்கம் கொண்ட இந்நூல் கிறிஸ்தவர் களால் வெளியிடப்பட்ட மிருகபலி ஆராய்ச்சி, சைவரும் மச்ச மாமிசமும், புதுச்சைவம் ஆகிய மூன்று துண்டுப் பிரசுரங்களின் பேரில் எழுந்த கண்டனக் கட்டுரையாக அமைந்துள்ளது.

இம்மூன்று துண்டுப்பிரசுரங்களும் புலால் உண்ண லுக்கு எதிரான சைவசமயத்தைக் கடைப்பிடிக்கும் மக்கள் வெள்ளிக் கிழமைகளில் மாத்திரம் மச்சம் தவிர்த்தல் எவ்விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமானது என்ற கேள்வியை எழுப்பியிருந்தன. இதற்கான சைவர்களின் சார்பில் வழங்கப்பட்ட அறிவுபூர்வமான பதிலாக இந்நூல் அமைந்திருந்தது.

சைவசமயத்தில் மாத்திரம்தான் இத்தகைய எதிர்ப்பு பிரசுரங்கள் வெளியிடப்பட்டன என்றில்லை. இஸ்லாம் தொடர்பாகவும் அவ்வப்போது கண்டனப் பிரசுரங்கள் வெளியாகியிருக்கின்றன. 1975ல் எம்.எஸ்.எம்.இக்பால், ஏ.இக்பால், எம்.எச்.எம்.க்ஷம்ஸ் ஆகிய மூவரடங்கிய குழு நூல் விமர்சனம் என்ற பெயரில் 80 பக்கங்கள் கொண்ட நூலொன்றை வெளியிட்டிருந்தார்கள். இந்நூல் தமிழர்க ளின் இஸ்லாமிய எதிர்ப்புணர்வினை இஸ்லாமியப் பார்வையில் விமரிசிப்பதாக அமைந்திருந்தது.

இந்த நூலில் காணப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டு களுக்கும் பதிலளிக்கும் வகையில் தமிழ்ப் படைப்பிலக் கியவாதியான எஸ்.பொ வினால் (எஸ்.பொன்னுத்துரை) இஸ்லாமும் தமிழும் என்ற மற்றொரு நூலும் எழுதப்பட்டி ருந்தது. இஸ்லாமிய வாலிபர் இயக்கத்தினால் 26.07.1975 இல் கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற இஸ்லாமியர் எழுச்சி மாநாட்டில் அன்றைய இலங்கையின் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் தலை மையில் இந்நூல் வெளியிடப்பட்டது. இதன் மீள்பதிப் பொன்று 2002 இலும் எஸ்.பொன்னுத்துரை அவர்களால் சென்னையிலிருந்து தமது மித்ர வெளியீட்டகத்தின் வாயிலாக மீள் பிரசுரம் செய்யப் பட்டிருந்தது.

சேர்.பொன்.இராமநாதனின் இலங்கைச் சோனகர் வரலாறு என்ற கட்டுரை நூல் அந்நாட்களில் பிரசித்திபெற் றது. சேர்.பொன்.இராமநாதன் இலங்கைவாழ் சோனகர் இனத்தால் தமிழர் எனவும் மதத்தால் முஹம்மதியர் எனவும் 1885ல் இலங்கை சட்டவாக்க சபையிலும், 1888ல் அரச ஆசிய கழகத்தினரின் (இலங்கைக்கிளை)முன்னிலை யிலும் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை உறுதிப்படுத்துவதாக அந்த வரலாற்று நூல் அமைந்திருந்தது. இந்நூலின் கருத்துக்களை முஸ்லிம் ஒருவர் துணிந்து மறுதலிக்க முன்வந்தார். முஸ்லிம் கார்டியன் பத்திரிகையின் பதிப்பாசிரியராகப் பணியாற்றிய ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் அவர்களே அந்த மனிதர்.

சேர்.பொன்.இராமநாதனின் "இலங்கைச் சோனகர் இன வரலாறு" என்ற அந்தக் கட்டுரையில் காணப்பட்டதவ றுகளைச் சுட்டிக்காட்டிஅவற்றைத் திருத்துவதாகவமைந்த இவரது ஆங்கில நூல் 1907ல் கொழும்பு சோனகர் சங்கத் தின் ஆதரவில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சேர்.பொன்.இராம நாதனின் கூற்று களை மறுத்து, இலங்கைச்சோனகர் இனத் தால் அறபிகளின் சந்ததியினர் என வரலாற்றின் அடிப் படையில் சான்றாதாரங் களுடன் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் தனது கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார்.

யாழ்ப்பாண இராச்சியம் என்றநூல் சி.க.சிற்றம்பலம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக ஒக்டோபர் 1992ல் வெளி யிடப்பட்ட 488 பக்கங்களைக் கொண்ட பாரிய வரலாற்று நூலாகும். கி.பி.16ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் (கி.பி.1505) போத்துக்கேயர் ஈழத்திற்கு வந்தபோது இங்கே மூன்று அரசுகள் காணப்பட்டன என்றும், அவை கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி அரசுகள் எனப் பெயர்பெற்றிருந்தன என்றும் கூறும் இந்நூல், கோட்டை கண்டி அரசுகளைப் போலன்றி யாழ்ப்பாண அரசுக்கு நீண்டதொரு அரசியற் பின்னணி இருந்தது என நிறுவியிருந்தது.

கி.பி.12ம் நூற்றாண்டுகளின் பிற்பகுதிகளில் எழுச்சி பெற்ற இவ்வரசு கி.பி.17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் (கி.பி.619) போர்த்துக்கேயரிடம் போர்முனையில் தன் சுதந் திரத்தை இழந்தது. இக்காலப்பகுதிக்குரிய இவ்வரசின் வரலாறு இந் நூலின் கருப்பொருளாகின்றது. சி.க.சிற்றம் பலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.சிவசாமி, சி.பத்மநாதன், திருமதி.சோ.கிருஷ்ணகுமார், ப.புஷ்பரெட்ணம், செ.கிருஷ்ணராஜா ஆகியோரின் 11 ஆய்வுக் கட்டுரைகளின் வாயிலாக இந்நூல் முழுமை பெற்றிருந்தது.

இந்நூல் வெளியிடப்பட்ட இரண்டாண்டுகளில் இந் நூல் தொடர்பாக மற்றொரு விமர்சன நூல் வெளியிடப் பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண இராச்சியம் நூலும் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளும்: ஓர் விமர்சனம் என்ற தலைப்பில் ஏ.எஸ்.உதய குமார் என்பவர் இந்நூலை எழுதியிருந்தார். மானிப்பாய் உடுவிலில் இயங்கி வந்த Institute of Historical Studies, என்ற நிறுவனத்தின் மூலம் ஜூலை 1994ல் இந்நூலை உதயகுமார் வெளியிட்டிருந்தார். பல்கலைக்கழக ஆய்வொன்றைக் கேள்விக் குள்ளாக் கும் வெளியாரின் முயற்சி என்றவகையில் இந்நூல் அந் நாட்களில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியரும் ஆறுமுக நாவலரும் சமகாலத்தவர். இருவரும் தமிழுக்கும் சைவ சமயத்திற்கும் சேவையாற்றியவர்கள். நாவலர் சாதி இல்லையேல் சமயமில்லை என ஆர்த்தவர். அவருடைய கூற்றுக்களை மறுத்து மாற்றாக சாதிநிர்ணய புராணத்தை வயித்தியலிங்கபிள்ளை வெளியிட்டார். இவருடைய கருத்துக்கள் அன்றைய வரலாற்று ஆவணங்களுக்கு அன்றைய கால நிலைப்பாட்டை தெரிந்து கொள்ள உதவும்.

'வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்' என்ற பெயரில் வல்வை ந.நகுலசிகாமணி அவர்கள் கனடாவிலி ருந்து வல்வை ஆவணக்காப்பகத்தின் மூலம் 1997ல் ஒரு பிரதேச வரலாற்று நூலை வெளியிட்டார். 85 பக்கங்கள் கொண்ட இந்நூல் புகைப்பட ஆதாரங்களையும் உள்ளடக் கியிருந்தது. வல்வை நகர மக்களின் பாரம்பரியம், அரசியல் கலாச்சாரம், பண்பாடு பற்றிய வரலாறு கூறும் 53 ஆக்கங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. அனைத்தும் வல்வை நகரையும் அந்த மண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையும், அங்கு இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்களை யும் ஆவணப்படுத் தும் பத்திரிகைத் தகவல்கள், கட்டுரைகள் என்பனவாகும். ஒரு பிரதேசத்தின் சமூகவரலாற்றை ஆவணப் படுத்தும் பாரிய முயற்சியாக இது அமைந்துள்ளது. இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள கருத்துக்கள் சிலவற்றை மறுத லிக்கும்வகையிலும் தமது குடும்பத்தவருக்கு போதிய இடம் தரவில்லை என்ற கருத்து அடங்கிய அதே ஊரைச்சேர்ந்த மு.வ.பெரியதம்பி அவர்கள் 'வல்வை, வல்வெட்டித்துறை, வல்வைநகர்' என்ற நூலைப் பின் நாளில் எழுதியிருந்தார். வல்வெட்டித்துறை சிவசக்தி வெளியீடாக **2001**ல் **175** பக்கங் களுடன் இம் மறுப்பு நூலை அவர் கனடாவிலிருந்து எழுதி யிருந்தார் இவர் எழுத்தாளர் கமலா.பெரியதம்பி அவர்களின் துணைவர் ஆவார். **10**வருடங்களின் பின் வல்வெட்டித்துறை வரலாற் றுச்சுவடுகள்; என்ற அதே நூலை **2006**ம் ஆண்டு **100** தலைப்புக்களுடன், **168** பக்கங்கள் கொண்ட, விடுபட்டபல விடயங்களும் சேர்த்து இரண்டாம்பதிப்பாக வெளியிட்டார்.

ஒருவர் எழுதியநூலில் தவறுகளிருப்பின் அதனை மற்றொரு நூலின் வாயிலாக அறிவித்து அதனையும் பதிவாக்கும் முயற்சியென்பது வரலாற்றைத் திருத்தி சீர் செய்து எழுதுவதற்கு ஒப்பாகும். தவறுகளையோ கண்டனங்களையோ அறிந்தும் அதனைப் பகிரங்கப்படுத் தாதிருப்பது ஒரு சமூகத்தவறாகும். நூலாசிரியரின் மனம் நோகவைப்பதேன் என்ற எண்ணத்தில் பலரும் அதுபற்றி தமக்குள் பேசிக்கொள்வதுடன் மாத்திரம் நிறுத்திவிடுகின் றனர். இதனால் எதிர்காலத்தில் தவறானபதிவே உண்மை என்றாகிவிடும். மாறாக அறிவுரீதியாகவமையும் இத்தகைய மறுப்பறிக்கைகளும் கண்டனங்களும் ஆரோக்கிய மான தொரு ஆய்வினை எதிர்காலத்தில் மேற்கொள்ள வழி சமைத்துவிடும்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ETDRC

**European Tamil Documentation and Research Centre**

N. Selvarajah
Administrative Secretary

REG. CHARITY No. [illegible]

Mr. N.Nagalingamany
[illegible] Lawrence Ave East #413
Scarborough
Ontario
Canada

30.08.2009

அன்புள்ள திரு. நகுலசிகாமணி அவர்கள் அறிவது!

எனது அறிமுகம் உங்களுக்கு ஏற்கனவே உள்ளதோ தெரியாது. நூல்தேட்டம் என்ற தொகுப்பின் ஆசிரியர் நான். என்னைப்பற்றிய அறிமுகம் இத்துடனுள்ள சிறு நூலின் விபரமாக உள்ளது. வாசித்து அறியலாம். அது முக்கியமல்ல - உங்களது பாரிய ஆவணக்காப்பகப் பணிபற்றிய செய்திகள் எனக்கு எட்டுவதுண்டு. 2000ல் கனடா வந்திருந்தவேளையில் உங்கள் பணிகள் பற்றி நான் பெரிதளவில் அறிந்திருக்கவில்லை யாயினும் இனி ஒருதடவை அங்கே வரும்வாய்ப்பு ஏற்படும் வேளையில் நிச்சயமாக உங்களைச் சந்தித்து உங்கள் ஆவணக் காப்பகத்தின் பணிகள்பற்றித் தெளிவுபெறுவேன் என்பது நிச்சயம்.

இக்கடிதத்தினை நான் எழுதுவதற்கு உந்துசக்தி யாக அமைந்தது இன்று கொழும்பிலிருந்து எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு பத்திரிகைச் செய்திதான் (ஞாயிறு. தினக்குரல் 02.08.2009-அ.சிவானந்தனின் கட்டுரை “வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தின் ஈழத்து வர லாற்றுக் கண்காட்சி”) அதில் உங்கள் தபால் முகவரியும் இருந்ததால் உடனடியாகவே தொடர்புகொள்ளத் துணிந் தேன்.

கடந்த ஒகஸ்ட் 8ம் திகதி நடைபெற்று முடிந்த உங்கள் ஆவணக்காப்பகத்தின் கண்காட்சி சிறப்பாக நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்தியிருக்கும் என்று நம்புகின்றேன். லண்டனிலும் ஒரு ஆவணக்காப்பகத்தினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றேன். 3500 ஈழத்து நூல்கள் வரை என் சேகரிப்பில் உள்ளன. இவை அனைத்தும் நூல்தேட்டம் தொகுப்பிற்காகவும் வானொலி, ஊடக அறிமுகங்களுக்காகவும் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டவையும், இலங்கையி லிருந்து அவ்வப்போது நான் கொள்வனவு செய்தவையுமாகும். இவை தவிர சிறப்பு மலர்களும், பத்திரிகைநறுக்குகளும், அறிக்கைகளும் உள்ளன. இவற்றைக் கொண்டு முடிந்தவரையில் ஒரு ஆவணக் காப்பகத்தை உருவாக்கிப் பாதுகாக்கவேண்டும், இங்குள்ள தமிழ், ஆங்கில ஆய்வா ளர்களின் பாவனைக்கு அவற்றை வழங்க வேண்டும். அதன்மூலம் ஈழத்தமிழர்பற்றியும் அவர்களின் கலை, இலக்கிய, பண்பாட்டு, அரசியல் பாரம்பரியங்கள் பற்றி வேற்றினத்தவர்களும் அறிந்துகொள்ள வழிசெய்யவேண்டும் என்றெல்லாம் கனவு உண்டு. புலம்பெயர் சமூகத்தின் ஆதரவின்றி தனியொருவனாக நின்று எவ்வளவைத்தான் செய்துமுடிப்பது என்ற விரக்தியும் அவ்வப்போது என்னுள் எழாமல் இல்லை.

இவை அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் வர்த்தகத்தையும் பண ஈட்டலையும் முதன்மை நோக்கங்களாகக் கொண்ட எமதுஈழத்துத் தமிழ்ச்சமூகத்தில் ஆவணப்படுத்தி வைத்தல் என்பது விரும்பத்தகாத செயலாகி விட்டது. உங்களையும் என்னையும் போன்ற சில விதி விலக்குகளை நீக்கிப்பார்த்தால் வருமானத்திற்கு வழியில்லாத இந்தப்பணியை ஏன் செய்ய வேண்டும்? அதை அடுத்தவன் பார்த்துக்கொள்ளட்டும், நாம் உழைத்து வீடு வாசல்களுடன் எம்மை வளப்படுத்துவோம் என்ற சுயநல மனப்பாங்கு தான் சமூகத்தில் சராசரியாகக் காணப்படுகிறது. அதனால்தானோ என்னவோ ஈழத்தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளில் கோயில்களும், தமிழ்க்கடைகளும் நூல்களும், புத்தக விற்பனை நிலையங்களும் வளரவில்லை. கோயில்களினாலும் வர்த்தகத்தினாலும் வந்து குவியும் வருவாய் ஒரு ஆவணக் காப்பகத்தினூடாக பெற முடியுமா? வெள்ளை யானை வைத்திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனின் கதை தான் ஆவணக்காப்பகம் நிறுவமுயலும் எங்கள் கதை.

இத்தகைய பின்புலத்திலும் நீங்கள் கனேடிய மண் ணில் நல்லதொரு ஆவணக்காப்பகத்தையும் பேணிவருவ துடன், கண்காட்சிகளையும் வைத்து மெச்சத்தக்கதொரு சமூக அறிவூட்டல் பணியை மேற்கொண்டு வருகிறீர்கள். உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சில சமயங்களில் ஊர்ப்பெயர் கொண்டு ஆவணக் காப்பகம் நிறுவுவதால், பிற ஊர்க்காரர்களிடமிருந்து அந் நியப்படும் வாய்ப்பு ஏற்படக்கூடும் என்று சிலர் கருதக் கூடும். புலம்பெயர்ந்து வாழும் எமக்கு தமிழ்த்தேசிய நூலகமொன்று அமையவேண்டும் என்பது பலரைப்போல எனதும் விருப்ப மாகும். அந்தத் தேசிய நூலகம் கனடா விலா, லண்டனிலா, பாரிசிலா, மெல்போர்னிலா அமைய வேண்டும் என்பது பிரச் சினை இல்லை. உலகெங்கும் தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் அவை சிறிய அளவிலாவது உருவாக்கப் படவேண்டும். அவற்றின் சேகரிப்புகள் பிரதேசரீதியாகச் சிறப்புச் சேர்க்கைகளைக் கொண்டனவாக இருக்க வேண்டும். அது பிரதேசரீதியிலாகட்டும், மதரீதியிலாகட்டும். பரவாயில்லை. அவற்றின் இருப்பும் சேகரிப்பும்தான் முக்கியம்.

காலக்கிரமத்தில் இத்தகைய ஆவணக்காப்பகங்கள் இணைந்து திரண்டு ஈழத்தமிழர்களுக்கானதொரு மாபெரும் தேசிய நூலகமாக அமையும். இலங்கையிலோ, இந்தியா விலோ, மலேசியாவிலோ தமிழர்களுக்கானதொரு தேசிய நூலகம் அமையவாய்ப்பில்லை. அது கருத்துச் சுதந்திரமும் வரலாற் றினைப் பேணிப்பாதுகாப்பதில் அக்கறையும் கொண்ட புகலிடத்தில், சுதந்திரமாக இயங்கும் பல ஆவணக்காப்பகங் களின் சேர்க்கையினாலேயே செயலுருவாகலாம். அதுவே பாதுகாப்பும்கூட. எந்தவித அரசியல் சமய கட்டுப்பாடுகளுக்கும் உட்படாது இந்த ஈழத்தமிழ்த் தேசிய நூலகம் இயங்கவேண்டும். அது மிக முக்கியம். உலகெங் கும் வாழும் ஈழத்தமிழர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது இரண்டாம் மூன்றாம் தலைமுறையினருக்கு மட்டுமல்ல புகலிட தேசங் களின் பாரம்பரிய தேசிய இனங்களும் தம்மிடையே குடி பெயர்ந்து வாழும் அந்நியரான தமிழர்பற்றிய விழிப்புணர் வினை அறிந்துகொள்ள இத்தகைய தமிழ்த்தேசிய நூல கத்தின் பன்மொழி ஆவணச்சேர்க்கைகள் வழிகோலும்.

இது தனியொருவனாகச் செயற்படும் என்னாலோ உங்களாலோ மட்டும் சாத்தியமாகும் விடயமல்ல. அது ஒரே சிந்தனை வீச்சினைக் கொண்ட பொதுநோக்கம் கொண்ட பல தனி மனிதர்களின் இணைவினாலேயேதான் சாத்தியமாகும். அவர்களை உலகளாவியரீதியில் அடையாளம் கண்டு இணை வோம். அந்தக்காலம் விரைவில் உருவாகும். அதுவரையில் உங்கள் பணிகளை எவ்விதத் தடங்கலுமின்றி மேற்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

இத்துடன் எனது அண்மைக்கால நூலொன்றினையும் உங்கள் பார்வைக்கு அனுப்பிவைக்கிறேன். உங்கள் வெளியீடுகள் எதுவும் நூல் தேட்டத்தின் முன்னைய 5 தொகுதிகளிலும் பதியப்படாதிருந்தால் தயவுசெய்து எனக்கு அவற்றை அனுப்பி வைக்கவும். ஆறாவது தொகுப்பில் அவற்றை நிச்சயம் இணைத்துக்கொள்ளலாம்.

லண்டன் வரும் வேளையில் தவறாமல் தொடர்பு கொள்ளவும்.


அன்புடன்
என்.செல்வராஜா,
தொகுப்பாசிரியர் - நூல்தேட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனடா மாதாந்தப் பத்திரிகை "தாய் வீடு" திரு.திலிப்குமார் அவர்களால் வெளியீடு செய்யப்படுவது. நவம்பர் 2016 பத்திரிகையில் இலக்கிய உறவுகள் வரிசையில் ஆவணக் காப்பகம்**

# ஆவண மகாமணி நகுலசிகாமணி



கவிஞர்.வி.கந்தவனம்
இலக்கிய உறவுகள் –58

வல்வை திரு.ந.நகுலசிகாமணி அவர்களை பல ஆண்டு களாக நன்கு அறிவேன். ஈழத் தமிழர் வரலாறு சிதைக்கப் பட்டு வரும் இக்காலத்தில் சிதைக்கப்பட்டவற்றை சீராக்கிப் பேண வேண்டும் என்னும் பெருநோக்குடன் உழைத்துவரும் அரியவர் சிலரில் இவரும் ஒருவர்.

இவரது ஆவணக்கண்காட்சிகள் சிலவற்றைக் கனடாவிற் பார்த்த நாட்களிலிருந்து இவர்மீது ஒரு பற்று என்னைப் பற்றிக்கொண்டது. இடையிடையே நடந்தசந்திப் புகளில் அவர் தனது ஆவணமுயற்சிகள் பற்றி எனக்கு விளக்கிச்சொல்லியுமிருக் கின்றார். அவற்றிலிருந்து அவரது கனவும் நினைவும் வரலாற்று ஆவணங்களன்றி வேறொன் றில்லை என்பதும் தெரியவந்தது.

**ஆவணக் காட்சி:-**

1969ல் உடுவிலில் நடந்த தமிழரசுக்கட்சி மாநாட் டில் குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் ஆவணக்காட்சி ஒன்றை நடத் தினார். அதனைப் பார்வையிட்ட இளைஞர் நகுலசிகாமணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வையின் வரலாற்றையும் ஆவணப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் வண்ணச் சிறகடித்தது. அவரின் தேடல்களின் விளைவாக வல்வெட்டித்துறைக் கப்பலின் அமெரிக்கப் பயணம் என்ற நூல் தயாரிக்கப் பெற்றது. இது வல்வெட்டித்துறை மக்களின் கடற் கலாச் சாரத்தை உலகறியச் செய்த புகழ்பெற்ற தரமேத்திரி யாரின் அன்னபூரணி அம்மாள் என்ற பாய்க்கப்பலின் அமெரிக்கப் பயணம் பற்றியது. 1974ல் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இந்நூல் வெளியிடப் பெற்றது.

**பின்னணி:-**

இவர் 26.12.1947ல் வல்வெட்டித்துறையிற் பிறந்தவர். தந்தையார் நடனசிகாமணி பட்டினசபைத் தலைவராக இருந்து மக்கட்பணியாற்றியவர். தாயார் பத்தாவுக்கேற்ற பதிவிரதை யாகிய பார்வதிப்பிள்ளை. நகுலசிகாமணி மூன்று சகோதரர் களும் மூன்று சகோதரிகளும் வாய்க்கப் பெற்றவர். அவர்களில் மூத்த சகோதரன் திரு யோகசிகாமணி நீதவானாக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்வியை சிதம்பராக்கல்லூரியில் முடித்துக்கொண்டு நகுலசிகாமணி வர்த்தகக் கப்பலில் வேலை செய்யத் தொடங்கினார். சிறுவயதுமுதல் இவ்விடத்தில் இருந்துவந்த வாசிப் புப் பழக்கம் வல்வெட்டித்துறைச் சனசமூகநிலைய நூல் நிலையத்துடன் இணைய வைத்தது. தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கம் இவருக்குப் பரந்த அறிவைக் அளித்த துடன் வல்வெட்டித்துறையின் வரலாற்று நூல்களையும் தேட வேண்டும். என்னும் ஆர்வத்தையும் தூண்டியது.

நாட்டின் இனக்கலவரம் எல்லோரையும் போலவே நகுலசிகாமணியையும் பாதித்தது. நகுலசிகாமணி 1992ல் கனடாவில் கால்பதித்தார். வரலாற்றுச் சுவடிகளைத் தேடும்பணி கனடாவிலும் தொடர்ந்தன. இவரது மனைவி உமா. உமாவும் கணவன் தேடிப் பெற்றவற்றை ஆவணப்படுத்துவதில் வல்லமை காட்டி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேடல்களும் திரவியங்களும்:-**

இதுவரை இவர்களால் தொகுக்கப்பட்டும், மீள்பதிப்பு செய்யப்பட்டும் வெளிவந்த நூல்கள் பின்வருமாறு.

1. வல்வெட்டித்துறைக் கப்பலின் அமெரிக்கப் பயணம் - *1974*
2. வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள், முதலாம் பதிப்பு *1997*, இரண்டாம் பதிப்பு *2006*.
3. கந்தர் அலங்காரம், வல்வை வைத்தியலிங்கம் புலவர் - *1912*.
4. யாழ்ப்பாண வைபவ கௌமுதி(கல்லடி. வேலுப்பிள்ளை), -*1918*.
5. யாழ்ப்பாண வைபவ மாலை(மயில்வாகனப்புலவர், *1884*. குல. சபாநாதன் புலவர் உரை *1886*).
6. சேர். பொன். அருணாசலம் (வாழ்க்கை வரலாறு)
7. நீச்சல் வீரன் நவரத்தினசாமி -லியோன்பிள்ளை, (*1954*).
8. தொண்டமானாறும் செல்வச்சந்திதியும் வரலாறும், செ. நாகலிங்கம் (*1974*).
9. சிவராத்திரிபுராணம் வைத்தியலிங்கபிள்ளை உரை,*1881*. *10*. S.J.V. செல்வநாயகம் A.TRIBUTE (*1978*)
10. RE:OPENING OF NORTH PORT CEYLON PORT (1951).
11. கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப்படலம் வல்வை வயித்தியலிங்கப்புலவர், உரை (*1889*)
12. தெய்வானை திருமணப்படலம் ச. வயித்தியலிங்கப்புலவர் உரை (*1889*).
13. திருக்குறள் அதிகாரச் சாரமாகிய திருத்தாலாட்டு (வல்வை கணேசபண்டிதர், *1919*).
14. திருமுருகாற்றுப்படை உரை -ஆறுமுகநாவலர் (*1853*).
15. மறைசையந்தாதி நல்லூர் சின்னத்தம்பிப்புலவர்(*1913*).
16. பண்டிதர் ஆ. சபாபதி அவர்கள் இயற்றிய 'மாரியம்மன் மான்மியம்', *1971*.
17. உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் வரலாறும் ஆக்கங்களும் - வல்வை. ந. நகுலசிகாமணி, *2010*.
18. கல்வளையந்தாதி மூலமும் உரையும் - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், *2012*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவணக்காப்பகம்:**

கனடாவில் திரு.நகுலசிகாமணி வந்திறங்கியது 1992ல். 1993லிருந்தே இவரது இல்லம் படிப்படியாக ஒரு ஆவணக் காப்பகமாக மாற்றம் பெற்றது. கனடியத் தமிழர்க ளும் வெளி நாட்டிலிருந்துவரும் நண்பர்களும் இவரது இல்லத்தை நாடி வரலாயினர். தொடக்கததில் வல்வெட்டித்துறையினர்தான் அதிகம் வந்துபோயினர். எனின் காலப் போக்கில் தமிழர் வரலாற்றில் ஆர்வமுள்ள அனைவருமே வருகைதரலாயினர். இவர்களுக்கெல்லாம் கவர்ச்சியாக இருந்தது நகுலசிகாமணியின் முதல் வெளியீடான "வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்" என்ற புத்தகம்.

வல்வெட்டித்துறை மக்களின் வாழ்க்கை இயல் பாகவே கடலோடு கலந்த வாழ்க்கை. ஈழத்தமிழர்கள் இவரை 'கடலோடி கள்' என்றே அழைப்பர். அன்னபூரணி அம்மாள் வல்வெட்டித் துறை மக்களின் கடற்கலாச்சாரத் தின் ஒரு வெற்றிச் சின்னமாகவே கருதப்படுகின்றது.

இந்தக் கருத்து 2013ல் அன்னபூரணி அம்மாளின் அமெரிக்கப் பயணத்தின் பவளவிழாக் கொண்டாட்டத் திலும் எதிரொலித்தது. பவளவிழா(1938-2013) வல்வெட்டித் துறை யில் வல்வை ஆவணக்காப்பக நிறுவுநர் திரு.ந. நகுலசிகாமணி அவர்களின் தலைமையில் 27.4.2013ல் வெகுசிறப்பாக நடைபெற்றது.

**வல்வை ஆவணக்காப்பகம்:**

இது நகுலசிகாமணியின் கனவுக் குழந்தை. இவரது ஆர்வத்தாலும் மனைவி உமா அவர்களின் அயராத முயற் சியாலும் கனடாவில் படிப்படியாக உருவாகிய குழந்தை தான் வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம். இதன் பத்தா வது ஆண்டுவிழா 23.05.2013 அன்று ஸ்காபரோ 'பீட்டர் & போல்' மண்டபத்தில் கொண்டாடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவின் முக்கியமான நிகழ்வு ஈழத்து வரலாற்று நூல்களும் தமிழர் பண்பாடு தொடர்பாக திரு.நகுலசிகா மணி சேர்த்துவைத்த ஆவணங்களும் காட்சிக்கு வைக்கப் பட்டமை தான். இதனைக் கண்டுகளித்த நூற்றுக்கணக்கான மக்களில் நானும் ஒருவன். இவர் கனடா கந்தசுவாமி கோயில் மண்டபத் தில் நடத்திய ஆவணக் காட்சி ஒன்றை யும் பார்த்திருக்கிறேன்.


கனடாவில் மட்டுமன்றித் தாயகத்திலும் ஆவணக் காட்சிகள் வைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் 2004ல் தாயகத்தில் நிலவிய இடைக்கால அமைதிக் காலத்தில் தனது பிறந்த பதிக்கு மனைவி பிள்ளைகளுடன் சென்று அங்கும் தான் அரிதும் முயன்று தேடிய வரலாற்றுத் தகவல்களைக் காட்சிக்கு வைத்து ஊர்மக்களது பாராட்டு தல்களைப் பெற்றார். ஒருதனியூரினது வரலாற்று ஆவணங் கள் காட்சிக்கு வைக்கப்பட்டது அதுவே முதல் முறை என்று கற்றார் போற்றும் வகையில் நகுலசிகாமணி சாதனை படைத்தார்.

மேலும் கனடாவில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவந்த வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம் வல் வெட்டித்துறையில் 7.5.2012 திங்கட்கிழமை அ.மி.த.க பாட சாலையில் ஒழுங்கு செய்யப்பட்டு விழாவில் ஆவணக் காப்பகம் வல்வெட்டித்துறையிலும் ஆரம்பிக்கப் பட்டது. நகரசபைத் தலைவர் திரு.அனந்தராஜ் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம் திறந்து வைத்தார். யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாவை.சேனாதி ராஜா, பாராளுமன்ற முன்நாள் உறுப்பின ரும் நகரசபை முன்நாள் தலைவருமான க.சிவாஜிலிங்கம், வல்வை நகரசபைத் தலைவர் போன்றவர்கள் கலந்து கொண்டு திரு.நகுலசிகா மணியின் அரும்பெருந்தொண் டினைப் பாராட்டிப்பேசினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**குடும்பம்:**

திரு.ந.நகுலசிகாமணியின் வல்வை வரலாற்றைப் பேணும் முயற்சிக்கு உறுதுணையாக இருந்துவருபவர் அவரது ஆருயிர் மனைவி திருமதி.உமா அவர்கள். ஆவணங்களைத் தொகுப்பதிலும் வகுப்பதிலும் இவர் முக்கிய பங்கு வகிக்கின்றார். அவைமட்டுமன்றி அவற்றைப்படித்துத் தகவல்களை மனதிற் பதித்தும் வைத்திருக்கின்றார். வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம் பற்றிக் கட்டுரைகளும் பத்திரிகைகளில் எழுதியிருக் கிறார்.

ஓர் ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் எப்பொழுதும் இருப்பாள் என்று பொதுவாகச் சொல்வார்கள். இந்தக் கூற்று நகுலசிகாமணிக்குப் பொருந்தாது. ஏனென்றால் நகுலசிகாமணி யினின்றும் அவரது மனைவியை என்னால் பிரித்துப் பார்க்க முடியவில்லை. வல்வை ஆவணக்காப்பகம் நினைவு கருக் கொண்டது கணவனுடைய சிந்தனை யில்தான். அதனை வளர்த் தெடுத்ததில் கணவனுக்கும் மனைவிக்கும் சமபங்கு உண்டு. வல்வை ஆவணக்காப்பகத்திற்கு ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாறுபற்றி இருவருக்கும் சோதனை வைத்தால் அதிக புள்ளி எடுக்க வல்லவர் உமா தான்.

இவர்கள் தங்கள் பிள்ளைகள் இருவரையும் 2005ல் விபத்தில் பறிகொடுத்தவர்கள். மூத்தவர் சந்திரசேகருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சந்துரு) வயது 21, இளையவர் சௌமியனுக்கு(சௌமி) வயது 19. வாழவேண்டிய வயதில் இவர்களுக்கு நேர்ந்த அகாலமரணம் வல்வெட்டித்துறையை மட்டுமன்றி கனடியத் தமிழ் உலகத்தையே ஓவென்று கதற வைத்தது. இவ்வித தாங்கொணாத துயரத்தை அவர்கள் இன்றும் சுமந்து கொண்டே தங்கள் ஆவணக்காப்பக அலுவல்களையும் செய்து வருகிறார்கள் என்பதை நினைக்கும் பொழுது நிலையற்ற இந்த உலக வாழ்க்கையில் நிலையாக நிற்க வல்ல ஆவணப்பணியால் தமக்குற்ற துயரத்தை ஆற்றி யிருக்கக்கூடும் என்ற எண்ணத் தோன்றுகிறது.

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

- திருக்குறள்

என்றார் வள்ளுவர் பெருமான். இவர்களின் எச்சம் வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம். பிறந்தபதியின் வரலாற்றைத் தேடி எடுத்தும் பரப்புரைகள் செய்தும் காட்சிகள் வைத்தும் ஊர்ப் பெருமையை உலகறியச் செய்தவர்கள் இவர்கள். அதனால் திருவாளர்.ந.நகுலசிகாமணி அவர்க ளுக்கும் திருமதி.உமா நகுலசிகாமணிக்கும் “ஆவண மாமணி” என்னும் பட்டத்தை வழங்கிப் பாராட்டுகிறேன்.

வாழ்க ஆவணமாமணி திரு.ந.நகுலசிகாமணி.
வளர்க ஆவணமாமணி திருமதி.உமா நகுலசிகாமணி.

ஒரு வேண்டுகோள். இதுவரை சேர்த்த தகவல்க ளைக் கொண்டு வல்வெட்டித்துறையின் வரலாறு மற்றும் பண்பாடு யாவற்றையும் வெளிப்படுத்தும் பெருநூல் ஒன்றை “வல்வெட்டித்துறை மான்மியம்” என்ற பெயரில் இவர்கள் ஆக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






October 2nd, 2016

As the Member of Parliament for Scarborough–Guildwood,
I am proud to recognize the contributions of

Mr. Nagulasigamany & Mrs. Uma Nagulasigamany

to the

Canadian Tamil Women's Association

The entire Scarborough-Guildwood community is indebted
to those who give unselfishly of their time and energy,
devoting their talents to strengthening the cultural richness of Canada.

Sincerely,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது செல்வர்கள் சந்துரு சௌமி நினைவாக

பட்டினம் "வல்வை" வெற்றி கொண்டது
"பட்டினப்பாலை" வல்வை பற்றி பகர்கின்றது
புட்டினம் காவிரிக்கு பற்பல பண்டங்கள் வந்தது
நுற்றின நெல்லொடு "வல்வாய் பஃறி"யும் சென்றது
பஃறி தோணி

அபய நாகன் என்பான் சிங்கள அரச கட்டில் அமர்ந்தான்
இள நாகனாம் இளவல் அண்ணன் மனையாளை கவர்ந்தான்
துரோகம் இளைத்தவனை அரசன் தொலைத்திட நினைத்தான்
அபயம் தேடி அவனும் "வல்லி தொட்ட" வால் வடகடல் கடந்தான்

முற்படு மஹாவம்ச நூலில் முகம்காட்டு இருதமிழ் ஊரில்
பொற்புள வல்வையின் முற்பேர் பொதிந்துள்ளமை பாரீர்
நற்றவ ஈழம் காக்க அன்று நடைபெற்ற இறுதிப் போரில்
நரிக்குண பறங்கியர் வென்றது இரவில் வல்வை நகரில்

தந்தை நடன சிகாமணி நம் நகர சபையின் அந்நாள் அதிபதி
தமையன் யோக சிகாமணி மேல் நீதி மன்றின் மேலான அதிபதி
தனயன் நகுலசிகாமணி? தாய்மண் தான் அவன் தொழும் பதி
தனையர் இருவர்? தங்கள் தமிழ்த் தாய் அவளின் நல் வரும்படி!

பள்ளி நாளிலேயே நகுலன் ஊரில் பல பணிகள் தொடர்ந்தவன்
துள்ளு(ம்) இளவலாய் "றெயின்போஸ்" கழகத்தில் உலைந்தவன்
வல்வை சனசமூக நிலைய வளர்வு காண வாலிபனாய் விழைந்தவன்
வெள்ளி விழாக் குழுவிலிருந்து விரி பணிகள் அன்று புரிந்தவன்

அருந் தமிழின விடிவு தேடி அடி உதை வசை பல கொண்டவன்
வரும் இன்னல் களைய வல்வையர் துயர் அகல முன் சென்றவன்
கொடும் ஆமியை எதிர்த்து ஆழிக்குமரன் அணியில் களம் கண்டவன்
நெடுங்கடல் ஓடி நிறைபொருள் தேடி தானதருமம் செய்து வந்தவன்.

உத்தமி உமாவை வழித்துணையாய் யிவனோ டிணைந்தார்
பத்தினி அவளும் இவனோடு பல்லறங்கள் செய்து களித்தாள்
எத்தகைய இடரிலும் எவ்வித துயரிலும் இவன் பொதுப் பணியிலும்
நற்றுணையாய் நங்கை இரந்தாள் நன்மகவுகள் வரமடைந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர சேகர் பிறந்தான் சந்திப் பிறை போல் வளர்ந்தான்
சுந்தரன் செளமியின் பின் பிறந்து செள பாக்கியமோடிருந்தான்
அந்தரம் வந்திட நம் நகுலனும் கனடா வந்திடல் சேர்ந்தான்
இந்த மண்ணிலும் இன்பணிகளை இடையறாது புரிந்தான்.

நலம்புரிச்சங்கத்தில் இணைந்து நகர் நலமுற நாளும் முனைந்தான்
வலம்புரிச் சங்கனையன் வல்வைச் சங்க செயலன் ஆயும் திகழ்ந்தான்
நலம் பெறு வல்வை வரலாறு நல்ல தரம் பெற சுவடியில் பதித்தான்
வளம்பெற வல்வை ஆவண காப்பகத்தால் இவன் வழிவகை புரிந்தான்.

வல்வையை பேர் முன் வைத்தான் தன் வாழ்க்கை நலனை பின் வைத்தான்
வல்வை ஊர் இனஞ் சார் பணிகளில் தன் மனை மகவுகளை தோய்வித்தான்
கல்வியில் பிள்ளைகள் பேர் எடுத்தார் கணனியில் தாதைக்கு கை கொடுத்தார்
வல்வையில் நிகழ்ந்த நூற் காட்சியிலும் தம் நூல்கடன் பிள்ளைகள் முடித்தார்.

உயிர் இயல் படித்தவன் இந்த உயரிய இருவருள் மூத்தவன்
உற வார்க்கும் ஊரார்க்கும் நல்ல பேர் புகழினைச் சேர்த்தவன்
உயிர் தனை கொடிய காலன் கடிதனில் ஏன் தான் எடுத்தனன்?
உன்னத நாளைய தலைவன் உயிர்தனை பாதியில் வதைத்தனன்!

எந்திரக் கலையில் எம் இளையவன் செளமியன் தேர்ந்தவன்
முந்தையனோடு தொந்திடு வார் துயர் களைந்திடல் நேர்ந்தவன்
சுந்திரப் பிளை என இருந்தவன் இடையில் ஏன் தான் உதிர்ந்தனன்
சந்துரு என்னும் முன்னவனோடு சாவில் பின்னவன் தொடர்ந்தனன்!

ஒன்று கூடல் எனில் ஒன்றும் தவறாது நம் நகுலன் குடும்பம்
வந்து கூடும் தூர ஓடலில் இளைய பிள்ளை முதலிடம் தேடும்
பந்து விளையாடலிலும் பாச உரையாடலிலும் பொழுதுகள் போகும்
தந்தை தாயாரும் சங்கத்தாரும் நாமும் படும் துயர் எங்ஙனம் ஆறும்?

பொங்கு தமிழில் இருவரும் பொங்கும் தமிழ் உணர்வோடு வந்தும் கலந்தார்
பங்கம் மொழிக்கேல் சிங்கமாய் ஆர்த்தார் சுனாமிப் பணிகளில் உடல் வேர்த்தார்
தங்கம் அனை மணி மலர்கள் பிரிந்தார் தாய் தாதையோ டுறவார் தளர்ந்தார்.
சங்கம் இவர்கள் துயர் பகிர்ந்தோம் ஆத்ம சாந்திக்கு சங்கரனைப் பணிந்தோம்.

ஆக்கம் – கனக மனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்மிடையே உள்ள சிதறிக்கிடக்கும் செல்லரித்த நூல்களையும் அழிக்கப்பட்ட நூல்களையும் தேடி ஒழுங்கமைத்து மீள்பதிப்புச் செய்து எமது சந்ததியினரின் கரங்களை வலுச்சேர்ப்போம்**

கனடா வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம் வெளியிட்ட நூல்கள்.

1. கைலாயமாலை. 1619 - முத்துராச கவிராசர்.
2. யாழ்ப்பாண வைபவமாலை. 1884 - மாதகல் மயில்வாகனப்புலவர்.
3. யாழ்ப்பாண வைபவ கௌமுதி 1918 - கல்லடி வேலுப்பிள்ளை.
4. வல்வை வரலாற்றுச் சுவடுகள் ந.நகுலசிகாமணி முதலாம் பதிப்பு 1997, இரண்டாம் பதிப்பு 2006.
5. ஈழத்து வரலாற்றுச் சுவடுகள், 100 படங்களுடன், ஆங்கிலம், தமிழ் ந.நகுலசிகாமணி.
6. அருணகிரிநாதர் அருளிய கந்தரலங்காரமும் வல்வை. இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வத்தியலிங்கபிள்ளை இயற்றிய உரை 1912
7. கந்தவனநாதர் நான்மணிமாலையும் பதிகமும், திருப்பள்ளி எழுச்சியும், முதற்பதிப்பு மலேசியா 1928, நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.
8. பொன்னம்பலம், அருணாசலம் 1954 ஆங்கிலம் தமிழ்.
9. நவரத்தினசாமி நீச்சுவீரன் வாழ்க்கைச் சரித்திரம். முதற்பதிப்பு 1954.
10. தொண்டைமானாறு செல்வசந்நிதியும் வரலாறும். 1974, செ.நாகலிங்கம்.
11. Re - (Opening of North - Ceylon. 1951 (அன்னபூரணி கப்பலின் அமெரிக்கப்பயணம்)
12. S.J.V.Chelvanayakam a tribute - 1978.
13. சுன்னாகம் வரதராஜபண்டிதர், சிவராத்திரிபுராணம். இயற்றமிழ் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளையின் உரை. 1881.
14. திருக்குறள் அதிகாரச்சாரமாகிய நன்நெறித்தாலாட்டு, யாழ்ப்பாணம் வல்வை வ.ஞா.கணேசபண்டிதர். 1919.
15. கந்தபுராணம் தெய்வயானையம்மை திருமணப்படலம், இயற்றமிழ்ப்போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை அவர்களின் உரை. 1956. இரண்டாம் பதிப்பு.
16. கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலம், வல்வை ச.வயித்தியலிங்கபிள்ளை அவர்களின் உரை 1955 இரண்டாம் பதிப்பு.
17. உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவர் வரலாறும் அவரது ஆக்கங்களும்
18. திருமுருகாற்றுப்படை ஆறுமுகநாவலர் உரை. 1853
19. மறைசையந்தாதி நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் இயற்றியது. 1913.
20. மாரியம்மன் மான்மியம். பண்டிதர் ஆ.சபாபதி. மட்டக்களப்பு 1972.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**Soumiyan (Soumi) Nagulasigamani**
தோற்றம்
18.03.1986

**Chandrasekar(Chandru) Nagulasigamani**
தோற்றம்
12.09.1984

மறைவு
23.09.2005

உலகில் சாதாரண மனித உலகில் நடக்கக் கூடாத ஒரு சோகம் நகுலசிகாமணியும் அவர் மனைவியும் திடீரென இழந்து நிற்கின்றார்கள். அவர்கள் இளம் பருவத்தினர்.

சந்துரு 21
சௌமி 19

மாலையில் பல்கலைக்கழக விழாவிற்கென்று சென்றவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி இலங்கையையே ஒரு உலுப்பு உலுப்பியது. இன்று காலையில் கூட ஒரு நண்பன் என்ன நடந்தது எனக் கேட்டார்.

புலம்பெயர் வாழ்க்கையின் இந்தப்பக்கம் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. அவர்கள் உயிரை இழந்த விதம் கேட்டால் எந்தக் கல்நெஞ்சக்காரருக்கும் கண்ணீர் பாயும்.

நகுலசிகாமணியை எப்படித் தேற்றுவது என எனக்குத் தெரியவில்லை

வாயுபசாரமாக நாம் சொல்லும் வார்த்தைகள் எந்த அளவிற்கு போகுமென நமக்குத் தெரியும்

இதனை எப்படித் தாங்கப் போகின்றார்களோ தெரியவில்லை ஆனால் தாங்கி ஆகவே வேண்டும்.

இறைவன் அதற்கு வேண்டிய மனப்பலத்தினை அவர்களுக்கு கொடுப்பார் என்று நான் திரிகரணசுத்தியாக நம்புகிறேன்

இந்தச் சோகம் மரண வீட்டோடு நிற்கின்ற சோகமல்ல. காலம் காலமாக நிற்கப் போகின்றது. நகுலசிகாமணி, இடத்து கொள்கைப்பிடிப்பு இறுக்கம் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். அது இவ்வேளையில் அவருக்கு உதவட்டும்.

உறவினர் என்ற முறையில் மட்டுமல்லாது சகமனிதன் என்ற முறையில் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் ஒன்று இந்த துயர் இன்னொருவருக்கு வரக்கூடாது.

கனடிய அரசிற்கும் அங்குள்ள தமிழ்ச் சமூகத்திற்கும் ஒரு பெரிய பொறுப்பு உண்டு

அன்புடன்
கார்த்திகேசு சிவத்தம்பியும்
குடும்பத்தினரும்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


288453

13964 CC




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வல்வையில்
பிறந்து கனடாவில்
புலம்பெயர்ந்து
வாழ்ந்து வரும்
ந.நகுலசிகாமணி
அவர்கள்
வல்வை
மண்ணின் மீது
கொண்ட பாசம்
அளவிடப்பட முடியாதது.
தான் வாழ்ந்த
மண்ணின்
மகத்துவங்களை
இந்நூலின் ஊடாக
வாசகர்களுடன்
பகிர்வதோடு
பல வரலாற்று
செய்திகளையும்
குறிப்பிடுகின்றார்.
வல்வை ஆவண
காப்பகத்தின்
ஸ்தாபகரும் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org